ஒரே நேரத்தில் ஆறு நாடுகளில் வெளியாகும் ஒரே ஒரு தமிழ்ப் பத்திரிகை

பீற்றர் ஜோசப்
அன்ட் அசோசியேட்ஸ்

- TRAFFIC TICKETS
- ACCIDENT CLAIMS
- IMMIGRATION

2425 Eglinton Ave. East, Suite 212
(Kennedy & Eglinton)
416 757-7707 • 416 537-7737
Fax: 416 757-7709

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: எஸ்.எஸ்.குகநாதன் கனடா பதிப்பு: பரமேஸ்வரன்

பல் வைத்தியர்கள்
DR. ILLANGO & ASSOCIATES
Dr. இளங்கோ
Dr. இரவீந்திரன்
Dr. ஜானகி
Dr. கோபால்
SCARBOROUGH (416) 292-7004
MISSISSAUGA (905) 270-7844

08 ஜுலை 2002 விலை 1.25 டொலர், EEZHANADU மலர் 09. இதழ் 31

## தமிழ் அமைச்சர் மகேஸ்வரனை இரகசியமாக கிளிநொச்சிக்கு வரவழைத்த

# விடுதலைப்புலிகள் கடும் புத்திமதி வழங்கினர்

## தமிழ் சிறார்கள் கல்வி வளர்ச்சிக்குத் தனிப்பட்ட முறையில் ஆண்டுக்கு 5 கோடி ரூபா நன்கொடை வழங்க இணங்கினார்

ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையின் கீழான சிங்கள அரசாங்கத்தின் ஒரேயொரு இலங்கைத் தமிழ் அமைச்சரான திரு தியாகராசா மகேஸ்வரனைத் தமிழ் மக்களின் அரசியல் இராணுவத் தலைமைச் சக்தியாக விளங்கும் தமிழ்ஈழ விடுதலைப்புலிகள் இயக்கம் கிளிநொச்சிக்கு வரவழைத்து அவருடன் மிக முக்கியமான சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளது.

மிகவும் இரகசியமான முறையில் வரவழைக்கப்பட்டு ஆர்ப்பாட்டம் இல்லாத முறையில் கிளிநொச்சிக்குப் பயணத்தை அமைச்சர் மகேஸ்வரன் மேற்கொண்டாராயினும் இவ்விடயம் பற்றிய தகவல்கள் தற்பொழுது யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலுமுள்ள தமிழ் ஊடக வட்டாரங்கள் மத்தியில் படிப்படியாக கசிய ஆரம்பித்துள்ளது.

இவ்விடயம் பற்றிய மேலதிக தகவல்களை அறிந்து கொள்ளும் நோக்குடன் ஊடகவியலாளர்கள் அமைச்சர் மகேஸ்வரனுடன் தொடர்பு கொள்ள முற்பட்ட போது அவர் அத்தகைய தொடர்புகளைத் துண்டித்துத் தீவிர மௌனத்தைக் கடைப்பிடித்து வருகிறார்.

இது பற்றிய தகவல்கள் பின்வருமாறு (4ம் பக்கம் பார்க்க)



## ஹக்கீமுடனான சந்திப்பை ரத்துச் செய்த கரிகாலன் ஐக்கிய தேசியக்கட்சி அமைச்சர்களைச் சந்தித்தார்

அரசாங்க அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ஹக்கீம் உடன் மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் நடைபெற இருந்த அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு ஒன்றை இறுதி நேரத்தில் ரத்துச் செய்த விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்பு அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் அதற்குப் பதிலாக ஆளும் அரசாங்கத்தின் ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் தலைமையிலான தூதுக் குழு ஒன்றை மட்டக்களப்பு நகரில் வைத்து (30ம் பக்கம் பார்க்க)

## அரசு – புலிகள் புரிந்துணர்வு உடன்பாடு தேசிய இனப்பிரச்சனையில் புதிய காலகட்டத்தைக் குறிக்கிறது – கனடாவில் வாசுதேவநாணயக்கார உரை

விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்குமிடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கைத் தேசிய இனப்பிரச்சனையில் ஒரு புதிய காலகட்டத்தைக் குறிக்கிறது. விடுதலைப்புலிகள், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை அரசு ஆகிய சக்துகளின் உடன்பாட்டோடு நடைமுறைக்கு வந்துள்ள இப் புரிந்துணர்வு சிங்களப் பொது மக்கள் மத்தியிலும் பரவலாக விழிப்புணர்வை ஏற்படுத்த தென்னிலங்கையில் உள்ள முற்போக்கு சக்திகள் பாடுபட வேண்டும். சந்திரிகா குமாரதுங்க, அனுரா பண்டாரநாயக்கா, ஜே.வி.பி. தலைவர்கள் அனைவரும் இணைந்து சமாதான முயற்சிகளுக்கு எதிராகச் சிங்கள இனவாதத்தைத் தூண்ட முயற்சி செய்கின்றார்கள் இவ்வாறு நேற்று 7ம்திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்காபரோவில் இடம்பெற்ற அமரர் சிவசிதம்பரத்தின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து (8ம் பக்கம் பார்க்க)

# 12ம்திகதி வை.கோ. கைதாவார்?

## தமிழகம் எங்கும் பொலிசார் உசார் நிலையில்!

ம.தி.மு.க. பொதுச் செயலாளரும் ஈழத் தமிழரின் இனிய நண்பருமான வை.கோ கைது விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. வரும் 12ம்திகதி அமெரிக்காவில் இருந்து சென்னை திரும்பும் வை.கோ.வைப் பொலிசார் கைது செய் யத் தயாராகி விட்டனர்.

அதே சமயம் ம.தி.மு.க.வினரின் எந்தப் போராட்டத்தையும் முறியடிக்கப் பொலிசாருக்கு அதிரடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இறுதி முடிவெடுக்க ம.தி.மு.க மாவட்டச் செயலாளர்கள். அரசியல் (7ம் பக்கம் பார்க்க)

வாகன விபத்தா?
இலவச ஆலோசனை

வாகன விபத்துக்கள் பற்றிய முழுமையான இலவச ஆலோசனைகளைத் தமிழில் அளித்திடும் ஒரே நிறுவனம்

நீண்ட காலமாக ஒரே இடத்தில் இயங்கும் நிறுவனம்

Tel: (416) 631-6464
(416) 630-7788
Fax: (416) 631-9703

- சம்பள இழப்பீடுகள்
- வணிக இழப்பீடுகள்
- எதிர்கால சம்பள இழப்பீடுகள்
- கல்விக்கான இழப்பீடுகள்
- மறுதொழில் பயிற்சித்தல்
- சட்ட உரிமைகள்
- வீட்டுப் பராமரிப்புச் செலவுகள்
- குழந்தைகள் பராமரிப்புச் செலவுகள்
- சிறப்பு மருத்துவச் செலவுகள்

தொடர்புகளுக்கு:
KILLY & BALA
1110-A Wilson Ave., Suite 211, Downsview, ON M3M 1G7

THE INSURANCE CLAIMS SPECIALISTS

எந்தச் செய்தியையும் முந்தித் தரும் ஒரே ஏடு ஈழநாடு

## ஈழநாடு வாசகர்கள், வர்த்தகர்கள் விளம்பரம் செய்வோர் கவனத்திற்கு!

எமது ஈழநாடு அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கும்.

பிறந்தநாள், மரணஅறிவித்தல்கள், நினைவஞ்சலிகள் மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டும் ஞாயிறு இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சமூகநல விளம்பரங்கள் சனிக்கிழமை மாலை 6.30 மணி வரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். தங்கள் ஆதரவிற்கு நன்றி

## வாசகர்களே! விளம்பரதாரர்களே!

ஈழநாட்டில் விளம்பரம், அறிவித்தல்கள் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் உங்கள் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம்.

SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

A.R.K.MARKET
31 - 35 ST.DENNIS DRIVE
(DONMILLS / EGLINTON)

DAILY NEEDS
2537A PHARMACY AVE
(FINCH / PHARMACY)

JAFFNA SUPER STORES
1221 MARKHAM RD # 14
(MARKHAM / EELESMERE)

KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

AGP MART
4A WADE AVE
TORONTO

UTHAYA'S SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

**மிஸிசாகா:**

THARSHNA'S SUPER MARKET
27 DUNDAS ST EAST
MISSISSAUGA

**மொன்றியல்:**

MARCHE THURGA
444 JEANTALON WEST
(514) 276 - 9262

**மேலதிக தொடர்புகளுக்கு:**
**பரமேஸ்: (416)266 - 9919**

## வாசகர்களின் கவனத்திற்கு!

ஈழநாட்டில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்களும் ஐரோப்பிய மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளில் வெளியாகும் பதிப்புக்களிலும் இடம் பெறும் என்பதையும் ஐரோப்பிய வானொலியில் உடனுக்குடன் இலவசமாக ஒலிபரப்பாகும் என்பதையும் அறியத் தருகின்றோம். மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளவும். (905) 653 - 3000 (416) 266 - 9919

# கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் பிரதான நிகழ்வில் தலைவர் பிரபாகரன் கலந்து கொண்டார்

கரும்புலிகள் தினமாகிய யூலை 5ம் திகதி வெள்ளிக்கிழமை வன்னிப்பகுதியில் இடம்பெற்ற கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் பிரதான வைபவத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு பொர் ஈகச்சுடரேற்றி அனைத்து கரும்புலிகளுக்கும் வணக்கம் செலுத்தினார்.

முதலாவது கரும்புலி கப்டன் வடமராட்சியில் உள்ள நெல்லியடி மகா வித்தியாலயத்தில் அமைந்திருந்த இராணுவ முகாம் மீது தற்கொடைத் தாக்குதலை நடத்திய நேரமாகிய இரவு 7.05 மணிக்கு இந்தநிகழ்வு இடம் பெற்றதாக புலிகளின் குரல் வானொலி சனிக்கிழமை காலை தனது செய்தி அறிக்கையில் தெரிவித்தது.

வன்னிப் பிரதேசத்தில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட ஓரிடத்தில் தமிழீழத்தின் கடல், தரை, மற்றும் நிழல் கரும்புலிகள் ஒன்று சேர தலைவர் பிரபாகரன் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டார். கரும்புலிகள், விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகள், இளநிலை தளபதிகள், விடுதலைப்புலிப் போராளிகள், பொதுமக்கள், கலைஞர்கள், எனப் பல தரப்பட்டவர்களும் அணி வகுத்தும், புடைசூழ்ந்தும் நிற்க தலைவர் பிரபாகரன் கரும்புலிகள் படங்களுக்குச் சுடரேற்றி மலர் மாலைகள் அணிவித்து வணக்கம் செலுத்தினார் எனப் புலிகளின் குரல் வானொலி விபரம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து கரும்புலிகள் பாகம் இரடு கடற்புலிகள் பாகம் ஐந்து ஆகிய இரண்டு இசைப்பேழைகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை ஆகியோர் வெளியிட்டு வைக்க அவற்றின் முதற்பிரதிகளை தலைவர் பிரபாகரன் பெற்றுக் கொண்டார். கலை பண்பாட்டுக்கழகத்தினரால் உருவாக்கப்பட்ட கரும்புலிகள் பாகம் இரண்டைத் தயாரிப்பதில் ஒத்துழைத்த கலைஞர்களுக்கு அவர் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார்.

# 27.11.1982 முதல் 30.06.2002 வரை 17 ஆயிரத்து 637 விடுதலைப்புலிகள் வீரமரணம்

கடந்த 27.11.1982 முதுல் 30.06.2002 வரையிலான சுமார் இருபது வருடக் காலப்பகுதியில் 17 ஆயிரத்து 637 விடுதலைப்புலிகள் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் மாவீரர் பணிமனை விடுத்துள்ள விபரக்கொத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 13 ஆயிரத்து 875 பேர் ஆண்கள், 3762 பேர் பெண்கள், இவர்களில் 241 பேர் கரும்புலிகள் என்றும் 280 பேர் எல்லைப்படை வீரர்கள் என்றும் விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் உயிரிழந்துள்ள 241 கரும்புலிகளில் 78 பேர் தரைக் கரும்புலிகள் என்றும், 163 பேர் கடற் கரும்புலிகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தரைக் கரும்புலிகளில் 60 பேர் ஆண்டுகள் என்றும் 18 பேர் பெண்கள் என்றும் கடற்கரும்புலிகளில் 117 பேர் ஆண்கள் என்றும், 46 பேர் பெண்கள் என்றும் மேலும் விபரம் தெரிவிக்கபட்டுள்ளது.

கடந்த 1982 ஆம் ஆண்டு ஆகக் குறைந்த உயிரிழப்பாகிய ஒரு விடுதலைப்புலி உயிரிழந்துள்ளார் என்றும், ஆகக்கூடியதாக 1997 ஆம் ஆண்டு 2103 பேர் உயிரிழந்துள்ளதாகவும் மாவீரர் பணிமனை தெரிவித்துள்ளது.

மொத்தமாக இதுவரையில் உயிர் நீத்துள்ளவர்களில் இரண்டு பெண்கள் உட்பட 266 பேர் ஈரோஸ் குழுவைச் சேர்ந்தவர்கள் என்றும் தனிக்குழுவைச் சேர்ந்தவர்கள் பத்துப் பேர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க ஆனையிறவு இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய முக்கிய தாக்குதல் தொடக்கம் தவளைப்பாய்ச்சல், ஓயாதஅலைகள், ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிரான தாக்குதல் உட்பட இதுவரையில் இடம்பெற்றுள்ள 17 பெரும் தாக்குதல்களில் 7400 க்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகள் உயிரிழந்துள்ளதாகவும் விடுதலைப்புலிகளின் மாவீரர் பணிமனை தெரிவித்துள்ளது.

அதன்படி கடந்த 1991 ஆம் ஆண்டு ஆனையிறவு இராணுவ முகாமைச் சூழ நடைபெற்ற ஆகாய கடல்வெளிச் சமரில் 604 பேரும், மணலாறு சமரில் 233 பேரும் பூநகரி மீது நடத்தப்பட்ட தவளைப் பாய்ச்சல் நடவடிக்கையில் 460 பேரும் கொக்குத் தொடுவாயில் நடைபெற்ற தாக்குதலில் 175 பேரும், இடிமுழக்கம் நடவடிக்கையின் போது 181 பேரும்.

ரிவிரச என்று அழைக்கப்படும் சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கையின் போது 438 பேரும், ஓயாத அலைகள் ஒன்றில் 315 பேரும், கிளிநொச்சி மீதான இராணுவத்தின் சத்ஜய 2 தாக்குதல் நடவடிக்கையின் போது 193 பேரும், கிழக்கில் இடம்பெற்ற வவுண தீவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது 103 பேரும்.

கிளிநொச்சி பரந்தன் படைத்தளங்கள் மீதான ஊடுருவல் தாக்குதல்களில் 300 பேரும், ஓயாத அலைகள் இரண்டில் 403 பேரும், ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போதும் அதன் மீதான எதிர்தாக்குதல்களிலும் 2146 பேரும், ஓயாதஅலைகள் 4இல் 181 பேரும், அக்கினிஹீல என்றழைக்கப்படும் தீச்சுவாலை இராணுவ நடவடிக்கையை முறியடிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முறியடிப்புச்சமரில் 141 பேரும் விடுதலைப்புலிகள் தரப்பில் உயிரிழந்துள்ளதாகவும் விடுதலைப புலிகளின் மாவீரர் பணிமனை தகவல் வெளியிட்டுள்ளது.

# அனலைதீவு வைத்தியசாலையில் இரு மாதங்களாக டாக்டர்கள் இல்லை! நோயாளிகள் அவதி!!

அனலைதீவு அரசினர் வைத்தியசாலையில் கடந்த இரு மாத காலமாக வைத்திய அதிகாரி இல்லாமையால் அங்குள்ள பொதுமக்கள் சிகிச்சை பெற முடியாது பெரும் பாதிப்படைந்து வருகின்றனர். வேலணை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் வைத்திய அதிகாரியை வாரத்தில் இரு நாட்கள் அனலைதீவு வைத்தியசாலைக்குச் சென்று நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்குமாறு யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப்பணிப்பாளர் கடிதம் மூலம் பணிப்புரை விடுத்துள்ளார். ஆயினும் இதுவரை அவர் அங்கு சென்று கடமையாற்றவில்லை என்று தெரிய வருகின்றது. யாழ்மாவட்டத்தில் டாக்டர்களுக்கு ஏற்பட்டுள்ள கடும் பற்றாக்குறையினால் அனலைதீவு அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தர டாக்டர் ஒருவரை நியமிக்க முடியாத நிலையில் யாழ்.சுகாதாரத் திணைக்களம் இருந்து வருவதாகவும் தெரிய வருகின்றது. புலம்பெயர்ந்து ஐரோப்பிய, வடஅமெரிக்க கண்டங்களில் வாழும் அனலைதீவு மக்கள் கவனமெடுத்தால் வைத்தியசாலைக் குறைபாடுகளை நீக்க முடியும்.


ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்



தொடர்புகளுக்கு: **சுவாமி சோமேஸ்வரக் குருக்கள்**
(பிரதம குருக்கள், தலைவர், ஜோதிடர், திருமணப் பதிவாளர்)

3057 Universal Drive, Mississauga, ON L4X2E2
TEL: (905) 602-2068/629-2050 FAX: (905) 629-4428

**பூசை நேரம்**
காலை 8.00 மணி
பகல் 12.00 மணி
மாலை 7.00 மணி
செவ்வாய் - வெள்ளி
மாலை 7.30 மணி

Website:
www.homestead.com/smma/temple.html

**கோயில் திறந்திருக்கும் நேரம்**
காலை 7.00 முதல்- 01.00 வரை
மாலை 6.00 முதல்- 9.00 வரை
விசேட நாட்களில் நேரங்கள் மாற்றியமைக்கப்படும்

# ஈழநாடு

EEZHANADU
P.O.BOX 878
STATION 'Q'
TORONTO - ONT
CANADA - M4T 2N7

தொலைபேசி:
(905) 653 - 3000
(416) 266 - 9919
(416) 528 - 1867
தொலைநகல்:
(905) 653 - 4031
தலைமையகம்:
EEZHANADU
19 BD DE LA CHAPELLE
FRANCE
TEL: (1) 53 26 59 21

பிரதம நிர்வாகி:
எஸ்.பாலச்சந்திரன்

பிரதம ஆசிரியர்:
எஸ்.எஸ்.குகநாதன்

கனடா பதிப்பு:
பிரதம ஆசிரியர்
T.K.பரமேஸ்வரன்

சுவிஸ்சர்லாந்து
EELANADU
POST FACH 60
CH 4302 AUGST
ABO CHF 130
TEL: 061 /813 1552

ஜேர்மனி
EELANADU
GROLITZE STR 6
41460 NEUSS
TEL: 02131 / 101748

அவுஸ்திரேலியா
EELANADU
170 HOTHLYN DRIVE
CRAIGLEBURN
VICTORIO 3064
TEL: (03) 3056246

லண்டன்
EELANADU
38 MOFFAT ROAD
LONDON - U.K
SW 177 EZ


ஈழநாட்டில்பிரசுரமாகும் அனைத்து விடயங்களும் முன் அனுமதியின்றி மீள் பிரசுரம் செய்ய முடியாது.

# "விடுதலைப்போர் சந்திக்கும் கடைசி நெருக்குதல் இது"

## கரும்புலிகள் தின விழாவில் பாலகுமாரன் உணர்ச்சி உரை

தமிழீழ விடுதலைப் போராட்டம் அதன் போக்கில் நகர்ந்து வந்து இப்போது தனது கடைசி நெருக்குதலைச் சந்திக்கின்றது. இவ்வாறு தற்போதைய நிலவரத்தை விபரித்தார் புலிகளின் பிரமுகர் வே.பாலகுமாரன். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற கரும்புலிகள் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது

இன்று நடப்பது போராடும் இயக்கத்தை பேச்சுக்களில் ஈடுபடுத்தும் நடவடிக்கை ஆகும். பேச்சு ஆரம்பிப்பதற்கு முன்பாக அதற்கான பாதையைச் செப்பனிடவே நாம் இங்கு வந்துள்ளோம். அவ்வாறு செப்பனிடும் போது நாம் கைகளை விரிக்க வேண்டும். பல்லாயிரக்கணக்கான எதிரிகள் முன்பு நாம் கையை விரித்து நிற்கிறோம். ஆனால் சிலர் எமத கைகள் வரி வசூலிக்கும் கைகள் என்று சொல்கிறார்கள். அந்த வரி வசூலிப்புப் பற்றி இப்போது என்னால் எதுவும் கூறமுடியாது. இது வரி வசூலிக்கும் கையல்ல. வாழ்வைக் கொடுத்த கை. வாழ்வைக் கொடுக்கப் போகும் கை. ஆனால் வாழ்வைக் கெடுக்க வந்த கையல்ல. எமது கரங்களை நீங்கள் ஆதரவுடன் பற்றிக் கொள்ள வேண்டும். அதற்கு எது தடையாக உள்ளதோ அதை நீங்களே உணர்ந்து விலகிக் கொள்ள வேண்டும்.

எங்களின் மண்ணை. வீட்டை. மரத்தை. உணவை எல்லாவற்றையுமே சிலர் முற்றுகை இட்டார்கள். தடை போட்டார்கள். பிரித்து வைக்க எண்ணினார்கள். ஏன் அணை கூடக் கட்டியிருப்பார்கள். ஆனால் இன்று அவர்களே தடை எடுக்கிறார்கள். பாதுகாப்புக்கும் நிற்கிறார்கள்.

எவராலும் வெல்லப்பட முடியாத - எட்டப்பட முடியாத புதிய அணியொன்று எப்பொழுதும் எம்மிடம் உள்ளது. அவர்கள் எப்பொழுதும் உங்களுக்காகவே வாழ்கிறார்கள் என்பதை நீங்கள் மறக்கக்கூடாது. இன்று நாங்கள் எல்லோரும் எத்தகைய கட்டத்தில் இருக்கிறோம்? அத்தகைய நிலையை அடைவதற்கு யார் காரணம்? கரும்புலிகள் மட்டுமா காரணம்? எல்லோருமே கரும்புலிகள் தான். வரலாறு சொல்கின்ற பாடத்தை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். எம்முடன் துணை சேருங்கள். எம்கு வலுச் சேருங்கள். எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பது எமக்குத் தெரியும். நாம் பேச்சில் ஈடுபடுவதற்குப் பயப்படவில்லை.

மாற்றங்கள் ஏற்படுவதை எல்லோரும் ஏற்றுக் கொள்ளுங்கள். ஜாதி. சீதனம் போன்ற பிழையான நடைமுறைகளால் எமது இனத்தின் அடிக்கட்டுமாணமே ஆட்டம் காண்கிறது. எமது வாழ்க்கை சிறிது காலத்தில் தலைகீழாக மாறப் போகின்றது. அதற்கான முன்னோடி நடவடிக்கைகள் தான் தற்பொழுது இடம்பெறுகின்றன. வரிகள் வாங்கும் சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டிய காலம் வந்து விட்டது. மாற்றத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். போராடுங்கள். புகழோடு வாழுங்கள். நேர்மையுடன் வாழப் பழகிக் கொள்ளுங்கள் என்றார்.

# வை.கோ.வை கைது செய்ய முடியாது! பா.ஜ.க. தலைமை அறிவிப்பு

ஈழத்தமிழரின் இனிய நண்பரும். ம.தி.மு.க. பொதுச்செயலாளருமான வை.கோ.வை பொடாச்சட்டத்தின் கீழ் கைது செய்ய முடியாது என்று பாரதிய ஜனதாக்கட்சித் தலைமை தெரிவித்துள்ளது. திருப்பதிக்கு விஜயம் செய்த பா.ஜ.கட்சியின் புதிய தலைவர் வெங்கையா நாயுடு அங்கு செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது அண்மையில் வை.கோ. விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகப் பேசிய உரையை ஆதாரமாக வைத்துக் கொண்டு அவருக்கு எதிராக பொடோ சட்டத்தைப் பிரயோகிக்க முடியாது. இப்படிக் கூறுவதற்காக வை.கோ.வின் புலி ஆதரவு நிலைப்பாட்டை பா.ஜ.க. அங்கீகரிப்பதாக அர்த்தமில்லை. பொடோ சட்டத்தை துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. பின்னர் அது மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தி விடும் என்றும் கூறினார்.

புதுடில்லியில் பா.ஜ.கட்சி பேச்சாளர் அருண்ஜேட்லி தெரிவித்ததாவது வை.கோ.வுக்கு எதிராக பொடா சட்டம் சக்தியற்றது. அண்மையில் வை.கோ. பேசுகையில் தமிழர்களின் உரிமைக்காகப் போராடும் அமைப்புக்கு நான் ஆதரவளித்தேன். ஆதரவளிக்கலாம் என்று தான் கூறியிருந்தார்.

ஆதாரம் இவ்வாறிருக்கையில் வை.கோவுக்கு எதிராக பொடோவைப் பிரயோகிக்க முடியாது. அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதற்காகப் பொடோ சட்டத்தைப் பிரயோகிக்கும் போது சம்பந்தப்பட்டவர்கள் அதிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள சட்டத்தில் சாதகமான ஏற்பாடுகள் இருக்கின்றன . இப்படி அவர் கூறினார்

# டக்ளஸ் தேவானந்தா வீட்டில் நிமலராஜன் கொலையாளி? கைது செய்யப் பிடியாணை

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலை தொடர்பாக சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்வதற்காக ஈ.பி.டி.பி. செயலாளரும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ்தேவானந்தாவின் கொழும்பு இல்லத்தில் தேடுதல் நடத்துவதற்கு அதிகாரமளிக்கும் தேடுதல் பிடியாணை ஒன்றை யாழ். நீதிமன்றம் கடந்த 5ம்திகதி வெள்ளிக்கிழமை பிறப்பித்தது.

இந்த வழக்கு யாழ்.நீதிமன்றத்தில் நீதிபதி விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப்புலனாய்வுத்துறை இன்ஸ்பெக்டர் ரஞ்சித்டி சில்வா மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான சந்தேகநபர் ஒருவர் இலக்கம் 5. பார்க்வீதி கொழும்பு என்ற விலாசத்தில் உள்ள ஈ.பி.டி.பி. செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையகம் உள்ளிட்ட இல்லத்தில் மறைந்திருப்பதாகத் தனக்குத் தகவல் கிடைத்துள்ளது என்றும் அவ்விடத்தில் தேடுதல் நடத்தி சம்பந்தப்பட்டவரைக் கைது செய்வதற்கு வசதியாக தேடுதல் பிடியாணை வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டிருந்தார்.

இந்த மனுவை ஏற்றுக் கொண்ட நீதிவான் தேடுதல் பிடியாணை உத்தரவைப் பிறப்பித்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களான ஜெகன். விஸ்வன் ஆகியோரைத் தொடர்ந்து எதிர்வரும் 19ம்திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார். தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் புலன்விசாரணைகள் தொடர்பான முன்னேற்ற அறிக்கையை அடுத்த தவணையில் நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதாக குற்றப் புலனாய்வுத்துறையினர் தெரிவித்தனர். இதனை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

# வன்னிப் பெருநிலப்பரப்பில் கண்ணி அகற்றுவதை பார்வையிட நோர்வே குழு

வன்னிப் பெருநிலப்பரப்பில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் அமைப்பின் செயற்பாடுகளைப் பார்வையிடுவதற்காகவும் அவர்களுக்கு மேலதிகப் பயிற்சிகளை வழங்குவதற்காகவும் நோர்வேயிலிருந்து நிபுணர்குழு ஒன்று வன்னிக்கு சென்றுள்ளது.

கண்ணிவெடிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கும் குழுவின் திட்ட ஆலோசகர் ரிச்சர்ட் மொய். நோர்வேஜிய மக்கள் உதவி அமைப்பைச் சேர்ந்த திட்ட இணைப்பாளர் ஸ்ரெய்ன் எஸென்ஜ் ஆகியோர் அடங்கிய மூன்று பேர் கொண்ட குழுவே வன்னிக்குச் சென்றுள்ளது. வன்னியில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் குழுவினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஆராயும் இவர்கள். கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பாக அவர்களுக்கு மேலதிகப் பயிற்சிகளையும் வழங்குவார்கள்.

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு வன்னிப் பெரு நிலப்பரப்பில் இதுவரை 91 ஆயிரம் மிதிவெடிகளையும் 61 ஆயிரத்துக்கு மேற்பட்ட வெடி பொருள்களையும் அழித்துள்ளதாக அந்த அமைப்பின் பணிப்பாளர் யோகன் தெரிவித்தார். வன்னியில் எமது செயற்பாட்டை விஸ்தரிக்க வேண்டியுள்ளது. ஆனால் அதற்கான நிதியுதவி எமக்குக் கிடைக்கவில்லை. வெளிநாட்டு அமைப்புக்கள் பல வந்து எமது பணியை பார்த்து வியப்புதுடன் சரி என்றார்.


TORONTO - COLOMBO
RETURN TRIP
ONLY
1285.00
(Tax included)

SkyRoute
TRAVEL SERVICES INC.
1200 MARKHAM ROAD, SUITE 106
SCARBOROUGH, ONTARIO, M1H 3C3
TEL: 416-439-4000 FAX: 416-439-6463
TOLL FREE: 1-877-468-6759 - 1-877-GO TO SKY
E-mail: contact@skyroutetravel.net

CHENNAI - 1260.00
LONDON - 460.00
AMSTERDAM - 520.00
ZURICH - 550.00
OSLO - 675.00
PARIS - 520.00
CHICAGO - 183.00
LOS ANGELES - 355.00
PHOENIX - 355.00

(Taxes are extra and the fares are subject to change without notice)
416-439-4000
IATA
Reg: 04488805 / 04652780
TICO

# தமிழ் அமைச்சர் மகேஸ்வரனை இரகசியமாக கிளிநொச்சிக்கு வரவழைத்த விடுதலைப்புலிகள் கடும் புத்திமதி வழங்கினர்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கியதேசியக்கட்சியின் யாழ்.மாவட்ட எம்.பி யாகத் தெரிவு செய்யப்பட்ட திரு மகேஸ்வரன் 1952ம் ஆண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட முதல் ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி என்ற முறையில் சரித்திரம் படைத்தவர்.

சேர்.பொன்.இராமநாதனின் மருமகனும், பரமேஸ்வராக் கல்லூரி அதிபரும் சிறந்த கல்விமானுமாகிய திரு சுப்பையாபிள்ளை நடேசபிள்ளை 1952 ஆம் ஆண்டு தந்தை செல்வாவைத் தோற்கடித்து வெற்றி பெற்று அமைச்சரானார்.

அதற்குப் பின்னர் 48 ஆண்டுகள் சென்ற பின் 2000ம் ஆண்டு வர்த்தகப் பிரமுகரான திரு மகேஸ்வரன் ஐ.தே.க. சார்பில் தெரிவு செய்யப்பட்டார்.

மீண்டும் 2001 ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட திரு மகேஸ்வரன் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே. முன்னணி அரசாங்கத்தில் இந்து விவகார அமைச்சரானார்.

முன்னைய சிங்கள அரசாங்கங்கள் தமிழ் பகுதிகள் மீது. கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்த போது பல குறுக்கு வழிகளைக் கையாண்டு எரிபொருள் போன்ற தடை செய்யப்பட்ட பொருட்களை வடக்குக்குக் கொண்டு வந்து வர்த்தகம் செய்து பெரும் லாபம் சம்பாதித்து விட்டார் திரு மகேஸ்வரன்.

எத்தனையோ நெளிவு சுழிவுகள் மூலம் எரிபொருளைக் கொண்டு வந்து விற்பனை செய்து முத்திரை பதித்த திரு மகேஸ்வரன் இதனால் "மண்ணெய்ணெய்" மகேஸ்வரன் என்ற சிறப்புப் பெயரைச் சுவீகரித்துக் கொண்டார்.

இத்தகைய வியாபார முயற்சிகளில் ஈடுபட்ட திரு மகேஸ்வரன் இதன்மூலம் விடுதலைப் புலிகளின் கீழ்மட்ட உறுப்பினர்கள் சிலருடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார். ஆனால் மேல் மட்ட உறுப்பினர்களுடன் அல்லது தலைமைப்பீடத்துடன் இவருக்கு எவ்வித தொடர்பும் இருந்ததில்லை.

2000, 2001 பொதுத்தேர்தல்களில் தமிழ்த் துரோகக் குழுவான ஈ.பி.டி.பி.யையும் அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவையும் மிகக் கடுமையாக மகேஸ்வரன் எதிர்த்தார். இதனால் தமிழ்த்தேசிய வட்டாரங்களில் இவருக்கு நல்ல ஏற்பட்டது. அத்துடன் எத்தனையோ வாக்குறுதிகளையும் இவர் அள்ளி வீசினார்.

ஆனால் தேர்தலில் வென்று அமைச்சரான மகேஸ்வரன் தமிழ்இனத்தின் நலன்களைக் கவனிப்பதை விடச் சொந்த வியாபார நலன்களையே கவனிக்கமுறப்பட்டார்.

அமைச்சர் என்ற தனது பதவியின் செல்வாக்கைப் பயன்படுத்தி உருளைக்கிழங்கு முதல் மண் அள்ளுவது வரை எத்தனையோ வியாபாரங்களில் தன் குடும்ப உறுப்பினர்கள் மூலமாகவும் வேறு "பினாமி" வர்த்தகர்கள் மூலமாக இவர் ஈடுபட்டார்.

இதனால் இவரும் இவருக்க நெருங்கியவர்களும் கோடானு கோடி ரூபா பணத்தைச் சம்பாதித்த போதிலும் தமிழ்பொதுமக்கள் விலைவாசி போன்ற சுமைகளால் பெரும் துன்பம் அனுபவித்தனர்.

இதை சமயம் ஏனைய தமிழ் வர்த்தகர்கள் போல் தமிழ்ஈழ விடுதலைப்புலிகளுக்கு வரிகள், சுங்கத்தீர்வைகள் மகேஸ்வரனும் செலுத்தி வந்தார்.

அரசாங்க அமைச்சராக இருந்து கொண்டு நேரடியாக வியாபாரம் செய்வது சட்டவிரோதம் ஆகும். எனவே தான் மகேஸ்வரன் தனது குடும்பத்துக்குச் சொந்தமான "மகாலஷ்மி ஸ்ரோர்ஸ்" மூலமாகவும் வேறு



"பினாமி" கள் மூலமாகவும் வியாபாரத்தை மேற்கொண்ட வந்தார்.

இதேவேளை இந்து விவகார அமைச்சர் என்ற முறையில் கோவில் திருப்பணி, அபிவிருத்தி என்ற போர்வையில் பல நிர்மானத் திட்டங்களை வரைந்து அவற்றின் மூலம் லாபம் சம்பாதிக்கும் முயற்சிகளிலும் மகேஸ்வரன் இறங்கியுள்ளார் என்று சில எதிர்கட்சி வட்டாரங்கள் குற்றம் சுமத்தத் தொடங்கியுள்ளன.

இன்னொரு புறத்தில் யாழ்ப்பாணம் உதயன் முதல் லண்டன் பிபிசி தமிழோசை வரை பல்வேறு ஊடகங்களுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணிய மகேஸ்வரன் தமிழ்இனத்தின் நல்வாழ்வு தொடர்பாகவும் பல்வேறு திட்டங்களையும் நோக்கங்களையும் முன்வைத்து வருவதாகத் தோற்றப்பாடு ஒன்றை உருவாக்கி வந்தார்.

தமிழ்உரிமைகள் தொடர்பாக பிரதமர் ரணிலையும் சக சிங்கள அமைச்சர்களையும் தட்டிக் கேட்பது போன்ற பாவனையும் இவரால் உருவாக்கப்பட்டு வந்தது. ஆனால் உண்மையில் இப்படி எதையும் மகேஸ்வரன் செய்வதில்லை என்ற உண்மை பத்திரிகை வட்டாரங்கள் மத்தியில் பரவ ஆரம்பித்தது.

இது ஒருபுறமிருக்க சென்றதேர்தலில் 40க்கு மேற்பட்ட வாக்குறுதிகளைத் தன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பதிவு செய்திருந்த மகேஸ்வரன் அவற்றில் ஒன்றைக்கூட இதுவரை நிறைவேற்றவோ அல்லது நிறைவேற்ற முற்படவோ இல்லை.

ஆனால் மறுபுறத்தில் ஊசி முதல் உலக்கை வரை பல தரப்பட்ட வியாபாரங்களிலும் ஈடுபட்டுப் பெரும் லாபத்தைச் சம்பாதித்ததுடன் அப்பாவிப் பொதுமக்களின் வெறுப்பையும் சம்பாதித்து வந்தார்.

உதாரணத்துக்கு யாழ்ப்பாணத்தில் செயற்கை எரிபொருள் தட்டுப்பாடு ஒன்றைத் தன் அமைச்சர் பதவி செல்வாக்கின் மூலம் ஏற்படுத்திப் பின் பெருந்தொகையான மண்ணெண்ணெய்யை கொழும்பில் இருந்த கப்பல் மூலம் கொண்டு வந்து தன் பினாமிகள் மூலம் விற்பனை செய்தார்.

அதேபோல் ஒரு காலத்தில் கிலோ 40 ரூபா என்ற விலையில் கொழும்பில் விலை போன உருளைக்கிழங்கை யாழ்ப்பாணத்தில் கிலோ 260 ரூபா என்ற விலையில் விற்றுப் பணம் சம்பாதித்தார்.

இவரது நடவடிக்கைகளால் கோபமடைந்த பொதுமக்களைத் தன் அரசியல் செல்வாக்கால், பணச் செல்வாக்கால் அடியாட்கள் பலத்தினால் கட்டுப்படுத்தி வைத்தார்.

அத்துடன் தன் அயோக்கியத்தனமான பணப் பேராசைக்கு நியாயம் கற்பிக்க விடுதலைப்புலிகள் மீது அபாண்டமாகப் பழி சுமத்தினார். தான் சம்பாதிக்கும் பணம் அனைத்தையும் விடுதலைப்புலிகளிடமே கொடுத்து வருவதாகவும் அதனால் தான் இத்தகைய லாபம் சம்பாதிக்கும் வழிவகைகளைக் கையாள்வதாகவும் மகேஸ்வரன் கூறி வந்தார்.

உண்மையில் சாதாரண வர்த்தகர்கள் போல் வரி செலுத்துவதைத் தவிர வேறெந்த நிதி வழங்கலையும் மகேஸ்வரன் விடுதலைப்புலிகளுக்குச் செலுத்தவில்லை. ஆனால் இத்தகைய பொய்ச்சாக்குக் கூறுவதன் மூலம் பொதுமக்கள் எதிர்ப்பினைச் சமாளிக்க மகேஸ்வரன் முறப்பட்டார்.

இது இவ்வாறிருக்க கூட்டமைப்புக் கட்சிகள், முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி போன்ற கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசியது போல் தன்னையும் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் அழைத்துப் பேச வேண்டும் என்று மகேஸ்வரன் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

ஆனால் இதற்கு விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்திடம் இருந்து எவ்வித சாதகமான பதிலும் வரவில்லை. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தையடுத்து யாழ்ப்பாணப் பகுதிக்கு விடுதலைப்புலி உறுப்பினர்கள் சென்று அரசியல் பணிகளில் ஈடுபடத் தொடங்கிய போது பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் மகேஸ்வரனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை அடுக்கடுக்காகச் சுமத்தினர்.

காற்றுப் போக முடியாத வெற்றிடங்களுக்குள்ளும் ஊடுருவக்கூடிய விடுதலைப்புலிகள் இவை பற்றி மேலதிக புலன்விசாரணை செய்த போது அவை பெருமளவு உண்மையானவை என்று கண்டு பிடித்தனர்.

அத்துடன் தான் மேற்கொள்ளும் அநியாயமான வியாபார லாபத்தில் பெரும்பங்கு புலிகளுக்கே செல்கின்றது என்றும் மகேஸ்வரன் விடுதலைப்புலிகளுக்கு மிகவும் நெருக்கமானவர் என்றும் மிகத் தவறான பொய்த் தோற்றப்பாடு ஒன்றை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் மகேஸ்வரன் பெருமளவு வெற்றியடைந்திருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.


இந்த விபரீத நிலைகள் பற்றிய தகவல்களை யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் அவ்வப்போது வன்னியில் உள்ள தலைமைப்பீடத்துக்கு அறிவித்து வந்தனர்.

மகேஸ்வரன் அரசாங்க அமைச்சராக இருநதாலும் அவர் சார்ந்திருந்த அரசாங்கத்துடன் யுத்தநிறுத்தம் ஒன்று நடைமுறையில் இருந்தால் (8ம் பக்கம் பார்க்க)


OPTOMETRIST

கண் பரிசோதனை நிபுணர்

டாக்டர் யாழினி கருணாநிதி O.D



கனேடியப் பட்டதாரி., கனடாவிலும் அமெரிக்காவிலும் பயிற்சி பெற்று அனுபவம் உள்ளவர்.


உங்கள் கண்களை முழுமையாகப் பரிசோதித்து தகுந்த கண்ணாடிகளை, அல்லது விழி வில்லைகளைப் (Contact Lens) பெற்றுக்கொள்ளலாம்.

கண்களில் ஏற்படும் கோளாறுகளுக்கு தகுந்த சிகிச்சை வழங்கப்படும். அல்லது தகுந்த சிகிச்சைக்கு அனுப்பிவைக்கப்படும்.

OHIP, மற்றும் பிரத்தியேக காப்புறுதி திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.




DON MILLS - SCARBROUGH இரண்டு இடங்களில் CLINIC நடைபெறுகிறது.




Gateway Corporate Center
10 Gateway Blvd, # 130,
North York. On. M3C 3A1

OPTOMETRIST
5200 Finch East, Suite - 112 A
Scarborough. On, M1S 4Z4.

OHIP and Private Insurance accepted - Evening and weekend appointments available.

Tel : (416) 429-2548

Tel : (416) 298-9674

# உயர் பாதுகாப்பு வலயம் குறித்த தெளிவான தகவலை வெளியிடுங்கள்

## கஜேந்திரகுமார் எம்.பி. படைத்தரப்புக்கு கடிதம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பாதுகாப்பு வலயம் தொடர்பான தெளிவான விபரங்களை வெளியிடுமாறு பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவிடம் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக படைத்தரப்பு் கூறி வரும் பல தரப்பட்ட முரண்பாடுகள் கருத்துக்கள் குறித்து அவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இப்படிக் கேட்டுள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்பாக அரச தூதுக்குழுவுடன் தமிழ்க்கட்சிகள் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த மாதம் 19ம்திகதி கூட்டம் ஒன்றை நடத்தினர். இதனையடுத்து பிரதிநிதிகள் வடக்கில் இலங்கை ஆயுத படைகளின் உத்தியோகத்தர்களுடன் மேற்படி உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள கருத்து வேறுபாடுகளைக் களைவது தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளனர். இந்தக் கருத்து வேறுபாடுகள் முக்கியமாக உருவாவதற்கு காரணம் உயர் பாதுகாப்பு வலம் என்ற விடயம் எனத் தெரியவருகிறது. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பொதுக்கட்டிடங்கள், பாடசாலைகள் சிலவற்றிலிருந்து ஆயுதப்படையினர் வெளியேறி விட்டனர் என்பது உண்மை தான்.

ஆனால் உயர் பாதுகாப்பு வலயம் என்று அவர்களால் வரையறுக்கப்பட்டுள்ள இடங்களிலுள்ள பொதுக்கட்டிடங்களில் இருந்து படையினர் இன்னமும் வெளியேறவில்லை. அதனால் அக்கட்டிடங்களை உரிய தேவைகளுக்குப் பாவிக்க முடியாத நிலையில் பொது மக்கள் இருக்கின்றனர். ஆனாலும் இந்த உயர் பாது காப்பு வலயம் என்று எந்தெந்தப் பகுதிகள் கருதப்படுகின்றன. அவைகளின் விஸ்தீரணங்கள் ஒன்றும் எமக்குத் தெரியவில்லை. எனவே உயர்பாதுகாப்ப வலயம் எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் சரியான இடங்கள், அந்த இடங்களுக்குள் இருக்கும் கிராம அலுவலர் பிரிவுகள் எவையெவை என்பவற்றை உடனடியாக அறியத்தரவும்.

ஏனெனில் சமாதான நடவடிக்கையின் முன்னேற்றம் இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை எந்த அளவில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற என்பதிலேயே தங்கியிருக்கின்றது.

எனவே அவ்வாறான இடங்களில் உள்ள பொதுக்கட்டிடங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் போன்றவற்றிலிருந்து படையினர் வெளியேறாவிட்டால் அதனால் ஏற்படும் கருத்து வேறுபாடுகளாலும் அந்தக் கட்டிடங்கள் பாவிக்க முடியாததால் ஏற்படுகின்ற அசௌகரியங்களாலும் யுத்தநிறுத்த உடன்படிக்கை அர்த்தமற்றதாகி விடுகிறது.

அதனால் சமாதான நடவடிக்கையில் எதுவித முன்னேற்றமும் காணமுடியாது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விரைவில் எம்.பி.க்கள் கட்சி மாறி வாக்களிக்க வழி செய்யும் சட்ட ஏற்பாடுகள்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கட்சி முடிவையும் மீறி மனச்சாட்சிப்படி நாடாளுமன்றத்தில் வாக்களிப்பதற்கு உதவும் சட்டஏற்பாட்டை தனி அரசமைப்புச் சட்டத் திருத்தமாக விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அரச முடிவு செய்திருக்கின்றது.

இது சம்பந்தமாக அரசின் தீர்மானம் அடுத்தவாரத்தில் அறிவிக்கபடும் என்று அரச உயர் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளின்படி கட்சியின் முடிவுக்கு மாறாக நாடாளுமன்றத்தில் வாக்களிக்கும் எம்.பி. ஒருவருக்கு எதிராக சம்பந்தப்பட்ட கட்சி. ஒழுங்காற்று நடவடிக்கை எடுத்து அவரைக் கட்சியில் இருந்தும் அதன் மூலம் எம்.பி. பதவியிலிருந்தும் விலக்க முடியும். இத்தகைய காரணங்களுக்காக எம்.பி. பதவியிலிருந்து ஒருவரை வெளியேற்றுவதைத் தடை செய்வதற்கான சட்ட ஏற்பாடுகளுடன் அரசமைப்பு சட்டத்திருத்தம் ஒன்றை அவசரமாகக் கொண்டு வர அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிகின்றது.

தேர்தல் முறைகள் மறுசீரமைப்பு. நாடாளுமன்றத்தின் அல்லது பிரதமரின் இணக்கம் இன்றி நாடாளுமன்றத்தை அதன் ஆயுட்காலம் முடிவடைய முன்னரே கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தை மட்டுப்படுத்துவது உட்பட பல்வேறு விடயங்கள் அடங்கிய அரசமைப்புத் திருத்தங்களை ஒன்றாகக் கொண்டு வருவதற்கு அரசு ஏற்கனவே முயற்சி எடுத்து வருகின்றது என்பது தெரிந்ததே.

என்றாலும் இவை அனைத்துக்கும் முன்பதாக எம்.பி.க்கள் கட்சி முடிவை மீறி மனச்சாட்சிப்படி வாக்களிப்பதை தடுக்கும் ஏற்பாடுகளை ரத்துச் செய்கின்ற அரசமைப்புத் திருத்தத்தை மட்டும் உடனடியாக தனி விவகாரமாக நாடாளுமன்றத்தில் சமர்பிக்க அரசு முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்த முடிவை அமைச்சரவை அங்கீகரித்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்த அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் உரிய பெரும்பான்மையோடு நிறைவேற்ற முடியும் என அரசு கருதுகின்றது.

அப்படி நிறைவேற்றி விட்டால் தனது ஏனைய அரசமைப்புத் திருத்த ஏற்பாடுகளுக்கு எதிரணியில் உள்ள எம்.பி.க்கள் தாமாக விரும்பி ஆதரவு வழங்குவதை அவரவர்களது கட்சிகளால் தடுக்க முடியாமல் போகும். அதனால் ஏனைய அரசமைப்புத் திருத்தங்களைஉரிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாம் என்றுதெரிகிறது

## ஐ.நா.வின் சிறுவர் உரிமைகள் பிரதிநிதி ஒலரா ஒட்டுணு கொழும்பு வருகிறார்

ஐக்கியநாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் தொடர்பான சிறப்புப் பிரதிநிதி ஒலரா ஒட்டுணு அடுத்தவாரம் கொழும்பு வருகிறார். கொழும்பில் அரசுப் பிரதிநிதிகளைச் சந்திக்கும் அவர் வன்னிகுச் சென்று விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களையும் சந்திப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக ஒட்டுணு விரிவான ஆய்வொன்றையும் நடத்துவார் எனவும் கூறப்பட்டன. ஏற்கனவே ஒரு தடவை அவர் இலங்கைக்கு வந்து அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சு நடத்தியிருந்தார். 18வயதுக்குக் குறைந்த சிறுவர்களைப் படைகளில் சேர்த்துக் கொள்வதில்லை என்று உடன்படிக்கையிலும் அவர் இரு தரப்பினரிடமும் கையெழுத்து வாங்கியிருந்தார்.

இதேவேளை குடாநாட்டில் பொலிசாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான நல்லுறவு குறித்து விளக்கமளிக்க பிரிட்டிஷ் பொலிசார் குழுவொன்று கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு நேரில் வந்து ஆராய்ந்தது.

# புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிரான மனு விசாரணை ஒத்திவைப்பு

அரசு - புலிகள் செய்துள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதென அறிவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான விசாரணை மேலும் தள்ளிப் போடப்பட்டுள்ளது.

முழுஅளவிலான மேன் முறையீட்டு நீதிமன்றம் அமைக்கப்பட்ட பின்னரே இம்மனுக்களை விசாரிக்கலாம் என்று தெரிவித்து விசாரணையை செப் 19 வரை மேன் முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்தது. சிஹல உறுமய. ஜே.வி.பி., சாதிக சங்கமய ஆகியன இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

இந்த மனுக்களைத் தள்ளுபடி செய்யக் கோரி இராணுவ நடவடிக்கைகளில் காணாமற் போன படையினரின் பெற்றோர் சங்கம் மனு ஒன்றை இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

# விமானப்படைத் தளபதியாக வைஸ் மார்ஷல் பெரேரா

விமானப்படையின் புதிய தளபதியாக எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா இம்மாத நடுப்பகுதியில் பதவியேற்பார் என்று தெரிவிக்கபட்டது.

தனது பதவியை இராஜினாமாச் செய்த விமானப்படைத்தளபதி எயார் மார்ஷல் ஜயலத் வீரக்கொடியின் இடத்திற்கு இவர் நியமிக்கப்படவுள்ளார். டொனால்ட் பெரேரா 1972 இல் விமானப்படையில் இணைந்தவர்.

இதேவேளை எயார் மார்ஷல் வீரக்கொடி பொலிசாரால் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அதற்கு முன்னதாக தான் பதவி விலகக் காரணமாக இருந்த கார் விபத்தின் போது அந்தக் காரைத் தானே ஓட்டிச் சென்றதாக அவர் பொலிசாரிடம் உண்மையை ஒப்புக் கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகக் கூறப்பட்டது.

## வல்வெட்டித்துறை நல்புரிச் சங்கம் விடுக்கும் அறிவித்தல்

வல்வெட்டித்துறை நலன்புரிச் சங்கத்தின் 14வது ஆண்டிற்கான புதிய நிர்வாக சபைத் தெரிவும் பொதுக் கூட்டமும் எதிர்வரும் 13.07.2002 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு லான்ஸ்டன் தமிழர் கூட்டுறவு இல்ல மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் வல்வையின் முக்கிய பிரமுகர் ஒருவர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார். அனைத்து வல்வை. வல்வை சார்ந்த மக்களையும் கலந்து சிறப்பிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

தொடர்புகளுக்கு- வல்வெட்டித்துறை நலன்புரிச் சங்கம் (416) 746 - 2970 (416) 292 - 3949 (416) 741 - 1458 (905) 204 - 8220 (905) 672 - 1968



R ROYAL ACCIDENT BENEFITS

நீங்கள் வாகன விபத்துக்களினால் பாதிக்கப்பட்டுள்ளீர்களா?
இலவச ஆலோசனைகளுக்கு அழையுங்கள்!
வாகன விபத்தால் பாதிப்பானவர்களுக்குரிய
- உரிமைகள்
- நன்மைகள்
- பாதுகாப்புகள்

உங்களுக்குரிய
- தற்போதைய / எதிர்காலச் சம்பள இழப்புகள்
- கல்வி /வணிக இழப்புகள்
- வீட்டு /குழந்தைப் பராமரிப்புச் செலவுகள்
- மருத்துவ வசதிகள்

போன்றவற்றை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள அழையுங்கள்
குமார்

To claim proper compensation for your damages, wage loss and all insurance benefits you are legally entitled to.
"We Fight For Your Right"

Call: KUMAR
TEL: (416) 283-8000
FAX: (416) 283-3567
1200 Markham Road, Suite 105
Scarborough, ON M1H 3C3
(Markham & Ellesmere)

# விடுதலைப்புலிகளுக்கான ஆதரவு தொடரும் இந்திய அமைச்சர்கள் உட்பட ம.தி.மு.க. நிர்வாகிகள் குழு திட்டவட்ட அறிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கான எங்கள் ஆதரவு தொடரும். தொடரும் என்று இரண்டு இந்திய மத்திய அமைச்சர்கள் உள்ளிட்ட ம.தி.மு.க. நிர்வாகிகள் குழு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

சென்னையில் நடைபெற்ற ம.தி.மு.க நிர்வாகிகள் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விபரம் வருமாறு

கடந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் குஜராத் சம்பவங்கள் மீதான விவாதம் நடைபெற்ற போது வை.கோ.வின் விளக்கங்களுக்கும் வினாக்களுக்கும் பதில் சொல்ல முடியாத எதிர்கட்சியினர் விவாதத்தைத் திசை திருப்புவதற்காக வை.கோ. புலிகளின் ஆதரவாளர் என்று விமர்சித்தனர்.

உடனே வை.கோ "ஈழத்தமிழர்களின் நல்வாழ்வுக்காகப் போராடும் விடுதலைப்புலிகளை நேற்றும் ஆதரித்தேன். இன்றும் ஆதரிக்கிறேன். நாளையும் ஆதரிப்பேன் என்று பேசினார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியைத் தான் மதுரை மாவட்டம் திருமங்கலம் பொதுக் கூட்டத்தில் பேசியுள்ளார். விடுதலைப்புலிகள் இயக்கத்தை ம.தி.மு.க. தொடக்க காலத்திலிருந்தே ஆதரித்து வருகிறது. இதில் எந்தவிதமான ஒளிவு மறைவும் இல்லை.



ம.தி.மு.க. தொடங்கி கடந்த ஒன்பது ஆண்டுகளில் வன்முறையைத் தூண்டுதல், சட்டம், ஒழுங்கைச் சீர்குலைத்தல், அரச சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தல் போன்ற எந்தவொரு போராட்டத்திலும் ம.தி.மு.க ஈடுபட்டதில்லை. அண்ணா வழியில் இயங்கி வரக்கூடிய ஒரு கட்டுக் கோப்பான இயக்கம்.

கடந்த ஓராண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் காவிரிப்பிரச்சனை, புதிய வரிவிதிப்பு, பேருந்துக் கட்டண உயர்வு, விலைவாசி ஏற்றம் போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகளால் தமிழக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதை எதிர்த்து ம.தி.மு.க செய்யும் விமர்சனத்தை தாங்கிக் கொள்ள முடியாத தமிழக முதல்வர் அரசியல் உள்நோக்கத்தோடு ம.தி.மு.க.வை அழித்துவிடலாம் என்று ஜனநாயக விரோத நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

தமிழக அரசின் இத்தகைய அடக்குமுறைக்கு ம.தி.மு.க. ஒரு போதும் அஞ்சிப் பின்வாங்காது. அச்சுறுத்தல்களையும் அடக்குமுறைகளையும் ஏவிவிட்டு ம.தி.மு.கவை அடக்கி ஒடுக்கி அழித்து விடலாம் என்ற முதலமைச்சரின் கனவு என்றும் பலிக்காது என்றும் நிர்வாகிகள் கூட்டம் தெரிவிக்கின்றது.

கூட்ட முடிவில் மத்திய அமைச்சர்கள் கண்ணப்பன், செஞ்சி ராமச்சந்திரன் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டியில்

ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை.கோ. மீதான தமிழக அரசின் நடவடிக்கைகள் பற்றி மத்திய அரசிடம் பேசினீர்களா? என நிருபர் ஒருவர் கேட்டதற்கு வை.கோ. மீது முதல் தகவல் அறிக்கை தான் போடப்பட்டுள்ளது. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யவில்லை. தமிழக அரசின் இந்த நடவடிக்கையை ம.தி.மு.க. அன்றே கண்டித்துள்ளது. இதற்கு மத்திய அரசிடம் பேச வேண்டியதில்லை என்றார் அமைச்சர் கண்ணப்பன்.

தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு எப்படி ஆதரவு தருகிறீர்கள்? என்று மற்றொரு செய்தியாளர் கேட்டதற்கு இலங்கையில் அவர்கள் தங்கள் வாழ்வுக்காக சுதந்திரத்திற்காக போராடி வருகிறார்கள். இங்கு அவர்கள் தீவிரவாதச் செயலில் ஈடுபடுவதை நாங்கள் ஒருபோதும் ஆதரிக்கவில்லை. ஆதரிக்கவும் மாட்டோம். விடுதலைப்புலிகள் இயக்கத்தை நாங்கள் மட்டுமல்ல தமிழ்நாட்டில் பல தலைவர்கள் ஆதரித்து பேசி வருகின்றார்கள். அவர்கள் மீது பாயாத பொடா வை.கோ.மீது பாயக்காரணம் என்ன?

அரசின் மீதான எங்கள் விமர்சனத்தை ஜெயலலிதாவால் தாங்கிக் கொள்ள முடியாததே காரணம் ஆகும். விடுதலைப்புலிகள் மீதான எங்கள் ஆதரவு தொடரும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம் என மத்திய அமைச்சர் செஞ்சி இராமச்சந்திரன் தெரிவித்தார்.

கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போது கட்சி அலுவலகம் முன் ஏராளமான ம.தி.மு.க. தொண்டர்கள் திரண்டிருந்தனர். கொள்கை வீரர் வை.கோ. வாழ்க. ஆதரிப்போம் ஆதரிப்போம் ஈழத் தமிழரை ஆதரிப்போம் என்று முழக்கங்களை அவர்கள் எழுப்பினார்கள். கலைப்புலிதாணு உள்ளிட்ட பல நிர்வாகிகள் இருந்தனர்.

## நாடு திரும்பும் வை.கோ கைதாவாரா? ஜெயலலிதாவின் அடுத்த நடவடிக்கை என்ன?

தீவிரல புலி ஆதரவாளர் என்று அழியாத முத்திரை குத்தப்பட்டுள்ள வை.கோ. மீது திடீரென்று கைது நடவடிக்கை எடுக்க முதல்வர் ஜெயலலிதா வேகம் காட்டுவதற்கு என்ன காரணம் என்பது அரசியல் புதிராகவே இருக்கிறது. இது அரசியல் ரீதியாக திசை திருப்பும் முயற்சியோ என்று சந்தேகத்தையும் கிளப்புகிறது.

ஆரம்ப காலம் முதல் புலி ஆதரவுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் இயக்கமாக ம.தி.மு.க. இருந்து வருகிறது. ம.தி.மு.க. என்ற தனிக் கட்சி உருவாக காரணமே அதன் தலைவர் வை.கோவின் புலி ஆதரவுப் போக்குத் தான். வை.கோ. மீது தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி சுமத்திய புலி ஆதரவுப் புகாரைத் தொடர்ந்து அவர் தி.மு.க.வில் இருந்து வெளியேற்றப்பட்டார். பின்னர் ம.தி.மு.க.வைத் தொடங்கிய வை.கோ உள்ளிட்ட அக் கட்சியின் அத்தனை பிரபலங்களும் ஈழப்பிரச்சனையில் விடுதலைப்புலி களை பகிரங்கமாக ஆதரித்துப் பேசியும் எழுதியும் வருகின்றனர். மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள ம.தி.மு.க. அமைச்சர் கள் கூட புலி ஆதரவுப் பேச்சில் எதையும்



மறைப்பதில்லை. பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் புலிகள் விவகாரத்தில் வெளிப்படையாக தங்களது கருத்துக்களை கூறி வருகின்றனர். அதே போல் தான் தேசிய ஜன நாயகக்கூட்டணி அரசின் இடம் பெற்றுள்ள பா.ம. கட்சியும் செயற்பட்டு வருகின்றது.

நிலைமை இப்படி இருக்கும் போது திடீரென்று வை.கோ வை கைது செய்வோம் என்று ஜெயலலிதா எச்சரிக்கை அறிவிப்பை வெளியிட வேண்டிய அவசியம் என்ன? என்பது தான் பலருக்கு வியப்பாக இருக்கிறது. அரசியல் ரீதியாக பொடா சட்டத்தைப் பயன்படுத்தி பழி வாங்கும் முயற்சியாக இதைக் கண்டித்த முன் வந்துள்ள தி.மு.க. போன்ற கட்சிகள் கூட உள்ளுக்குள் அ.தி.மு.கவுக்கும் ம.தி.மு.க.வுக்கும் இடையே ஏதோ நடந்திருக்கிறது என்ற சந்தேகத்தில் தான் இருக்கின்றன. அந்தச் சந்தேகம் என்னவாக இருக்கும் என்பது பற்றியும் தி.மு.க. வட்டாரம் கோடிட்டுக் காட்டியது.

ஆளும் அ.தி.மு.க. ஆட்சியாளர்களுக்கு சாதகமாக சமீபத்தில் மத்திய அரசு ஒரு முடிவெடுத்தது. அதாவது முன்பு ஜெயலலிதா முதல்வராக இருந்த போது அவருக்கு வெளிநாட்டில் இருந்து மூன்று லட்சம் அமெரிக்க டாலர்கள் அன்பளிப்பாக வந்தன. அனாமதேய நன்கொடையான இந்த வெளிநாட்டுப் பணத்தை ஜெயலலிதா தனது வங்கிக் கணக்கில் வரவு வைத்துக் கொண்டார் என்று அன்னியச் செலாவணிச் சட்டத்தின் கீழ் (பெரா சட்டம்)

(27ம் பக்கம் பார்க்க)

## முடிந்தால் கைது செய்து பார் ஜெயலலிதாவுக்கு வை.கோ. சவால்

ஜெயலலிதாவின் மிரட்டல்களுக்கு எல்லாம் நான் பயந்து விட மாட்டேன். எதிர்வரும் 12ம்திகதி நான் இந்தியாவுக்கு வருகின்றேன். முடிந்தால் ஜெயலலிதா என்னைக் கைது செய்து பார்க்கட்டும்.

இவ்வாறு சவால் விடுத்திருக்கிறார் வை.கோ. முதலமைச்சர் ஜெயலலிதா விடுத்த எச்சரிக்கையைத் தொடர்ந்தே வை.கோ. அமெரிக்காவில் இருந்து மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தமிழகத்தின் அமைதியைக் கெடுக்கும் வகையிலோ, வன்முறையைத் தூண்டும் விதத்திலோ சட்டம் ஒழுங்குப் பிரச்சனை வரும் வகையிலோ நான் எதனையும் செய்யவில்லை. நான் அண்மையில் கூட்டங்களில் பேசும் போது அ.தி.மு.க.வையும் ஜெயலலிதாவையும் கடுமையாக விமர்சித்தேன். அதைத் தாங்கிக் கொள்ள இயலாத ஜெயலலிதா என்னைக் கைது செய்யப் போவதாக மிரட்டுகிறார்.

மிசா சட்டத்தின் கீழ் நான் கைதானவன். ஓராண்டு காலம் தொடர்ந்து சிறைவாசம்



அனுபவித்திருக்கிறேன். 23 முறை சிறை சென்றிருக்கிறேன். ஜெயலலிதாவின் இந்த மிரட்டல்கள் எல்லாம் என்னிடம் செல்லுபடியாகாது.

நான் ஒன்பது ஆண்டு காலமாகக் கட்சி நடத்துகிறேன். ம.தி.மு.க. தொடர்ந்து ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து வருகிறது. ஆனால் அதேநேரத்தில் எங்களால் தமிழகத்தில் அமைதி கெட்டிருக்கிறதா? ஜெயலலிதா பதில் சொல்லட்டும்.

ஈழத்தமிழர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நாங்கள் வழங்கும் ஆதரவு வெளிப்படையானது.இது மூடுமந்திரமல்ல எல்லோருக்கும் தெரியும் என்றார் வை.கோ.


- மீளப் பெறும் பண வெகுமதியுடன் கூடிய காப்புறுதித் திட்டம்
- முதலீட்டுடன் கூடிய ஆயுள் காப்புறுதித் திட்டம்
- தற்காலிக, மிகவும் விலை குறைந்த ஆயுள் காப்புறுதித் திட்டங்கள்
- விபத்து, காயங்கள் மூலம் ஏற்படும் இயலாமைக்கான காப்புறுதித் திட்டங்கள்
- சேமிப்புகளும் முதலீட்டுத் திட்டங்களும்
- *Investment Fund*
- *RSP* • *RIFs and Annuities*

SINCE 1847

One of the best & leading companies in North America

CANADA LIFE

மேலதிக பல்வேறு வகையான திட்டங்களை அறிந்து கொள்ள நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன்

சிவ பஞ்சலிங்கம் (B.Comm.)
BUS: (416) 661 - 9155
RES: (416) 321 - 0959
FAX: (416) 661 - 9157
5050 DUFFERIN ST # 218
TORONTO - ONT - M3H 5T5

# 12ம்திகதி வை.கோ. கைதாவர்?

## தமிழகம் எங்கும் பொலிசார் உசார் நிலையில்!

## ம.தி.மு.க தொண்டர்கள் பரவலாகக் கைது செய்யப்படுகின்றனர்

ம.தி.மு.க. பொதுச் செயலாளரும் ஈழத் தமிழரின் இனிய நண்பருமான வை.கோ கைது விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. வரும் 12ம்திகதி அமெரிக்காவில் இருந்து சென்னை திரும்பும் வை.கோ.வைப் பொலிசார் கைது செய்யத் தயாராகி விட்டனர்.

அதே சமயம் ம.தி.மு.க.வினரின் எந்தப் போராட்டத்தையும் முறியடிக்கப் பொலிசாருக்கு அதிரடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இறுதி முடிவெடுக்க ம.தி.மு.க மாவட்டச் செயலாளர்கள், அரசியல் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று திங்கட்கிழமை சென்னையில் நடைபெற்றது. (இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எவை என்பது கிடைக்கப் பெறவில்லை)

பொலிசாரும் ம.தி.மு.க.வினரை தொடர்ந்து கண்காணிக்கத் தொடங்கி விட்டனர். இதனால் தமிழகம் முழுவதும் உஷார்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவில் தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு ஆதரவாக ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை.கோ. பேசி வருவதைத் தடுக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். இதற்காக "பொடா" சட்டத்தின் கீழ் வை.கோவைக் கைது செய்யவும் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இந்த விடயத்தில் மத்திய அரசும் எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கவில்லை. மாறாக "வை.கோ. கைது விவகாரம் மாநிலத்தின் சட்டம் ஒழுங்குப் பிரச்சனை" என்று துணைப்பிரதமர் அத்வானி கூறிவிட்டார். தே.ஐ.கூட்டணியில் ம.தி.மு.க. உள்ளது. இக்கட்சியின் சார்பில் இருவர் மத்திய அமைச்சர்களாகவும் உள்ளனர். வை.கோ.



புலிகளை ஆதரித்துப் பேசுவதும் தவறு. அதற்காகப் பொடா சட்டத்தின் கீழ் தமிழக அரசு வை.கோ.வைக் கைது செய்வதும் தவறு என்று பா.ஜ.தலைவர் வெங்கையா நாயுடு கருத்துத் தெரிவித்துள்ளார். எனினும் வை.கோ.மீது திருமங்கலம் பொலிசார் எப்.ஐ.ஆர். பதிவு செய்துள்ளனர். தவிர ம.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் சிலரைப் பொலிசார் கைது செய்து அதிரடி நடவடிக்கையில் இறங்கி விட்டது. அமெரிக்காவில் சுற்றுப்பயணம் முடித்துவிட்டு வை.கோ சென்னைக்கு வரும் போது அவரைக் கைது செய்ய தமிழரசு அரசு தீவிரமாக உள்ளது. மத்திய அரசும் இதில் தலையிடாது என்ற துணிச்சல் காரணமாக கைது நடவடிக்கை நடந்தேறும் என்று ம.தி.மு.க.வினரும் கருதுகின்றனர். அப்படி ஒருவேளை வை.கோ. கைது செய்யப்பட்டால் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பது குறித்து ம.தி.மு.க. மூத்த தலைவர்கள் தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர்.

எனினும் வை.கோ.வை கைது செய்தால் அதைச் சந்திக்க நாங்கள் தயார். தொடர்ந்து நாங்கள் புலிகளை ஆதரிப்போம் என்று ம.தி.மு.க அமைச்சர்கள் கண்ணப்பன், செஞ்சி ராமச்சந்திரன் மற்றும் அவைத்தலைவர் கணேசன் ஆகியோர் பகிரங்கமாக சவால் விடுத்துள்ளனர்.

பரபரப்பான சூழ்நிலையில் தமிழக அரசின் முடிவைக் கண்டித்து ம.தி.மு.க. தொண்டர்கள் கண்டன சுவரொட்டிகள் ஒட்டுவதன் மூலம் முதல் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். "அஞ்சாத சிங்கத்திற்கு அடக்கு முறையா? கண்துஞ்சா கடமை வீரருக்கு பொடா சிறையா? தமிழ் மணக்கும் திசை எங்கும் புகழ் பறக்கும் வை.கோவை சிறை பிடிக்க நினைப்போரை உமது செயல் சிறுபிள்ளைத் தனமாக முடிந்துவிடும். நாடாளுமன்றத்தின் நாயகன், நாணிலம் போற்றும் வை.கோ.வை பொடாவில் கைது செய்வது முறை தானா? அவரது உழைப்புக்கு பரிசு சிறைச் சாலையா? போன்ற வாசகங்கள் கொண்ட கண்டன சுவரொட்டிகளைச் சென்னை முழுவதும் ம.தி.மு.க. சார்பில் ஒட்டப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக 12ம்திகதி அமெரிக்காவில் இருந்து சென்னை வரும் வை.கோவுக்கு விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு கொடுக்க ம.தி.மு.க வினர் திட்டமிட்டுள்ளனர். விமான நிலையத்தில் வை.கோ.வைக் கைது செய்ய நினைத்தால் அடுத்தக் கட்டப் போராட்டம் குறித்தும் கட்சியினர் தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர்.

அதேசமயம் வை.கோ.வைக் கைது செய்யும் போது ம.தி.மு.க.வினர் போராட்டங்கள் நடத்தித் தடுத்தால் அதை முறியடிக்க தமிழக அரசு தயாராக இருக்கிறது. போராட்டத்தில் ஈடுபடும் தொண்டர்கள், தலைவர்களைக் கைது செய்யவும் முன்னேற்பாடுகள் நடந்து வருகின்றன. பொலிசார் தமிழகம் எங்கும் உஷாப்படுத்தப்பட்டுள்ளனர். ம.தி.மு.க.வினரின் செற்பாடுகளை அறிவதிலும் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## வை.கோ. தமிழகம் திரும்பியதும் கைதாவர் என்கிறது தமிழக காவல்துறை

இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசியதற்காக பொடோ சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ள ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை.கோ. அமெரிக்காவில் இருந்து தமிழ்நாடு திரும்பியதும் கைது செய்யப்படுவார் என்று தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் நெய்வால் அறிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய நெய்வால் இதைத் தெரிவித்தார். வை.கோ. உள்ளிட்டோர் மீது தற்போது வழக்கு தொட ரப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது என்று கூறிய நெய்வாலிடம் தமிழ்நாடு திரும்பியதும் வை.கோ. கைது செய்யப்படக்கூடுமா? என்று செய்தியாளர்கள் கேள்வியெழுப்பிய போது நடக்கலாம் என்றார் அவர்.

## வை.கோ.வை கைது செய்ய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்பு

பொடோ சட்டத்தின் கீழ் ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை.கோ.வைகன் கைது செய்ய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகச் செயலர் நல்லகண்ணு இத குறித்து கூறியதாவது பொதுக்கூட்டத்தில் வை.கோ. பேசியதை வைத்துக் கொண்டு அவரை பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யக்கூடாது. சில வருடங்களாக அவர் விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசி வருகின்றார். இப்போதும் அதேபோல் பேசியிருக்கிறார். வன்முறையை தூண்டியிருந்தால் அல்லது புலிகளுக்கு உதவி செய்திருந்தால் (27ம் பக்கம் பார்க்க)

## "வெல்லும் தமிழ்" விழா

எதிர்வரும் ஜுலை மாதம் 14ம்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு கனடா கந்தசாமி கோவில் திருமண அரங்கில் வெல்லும் தமிழ் விழா சிறப்பாக நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்விழாவுக்கு சிறப்பு விருந்தினராக திருமதி பத்மா குகதாசன் அவர்களும் தமிழறிஞர் திரு சண்முகம் குகதாசன் அவர்களும் கலந்து கொள்ளுகின்றனர்.

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் கவியரங்கு. தமிழிசை. நடனம். நாட்டுப்பாடல்கள் மற்றும் பல சுவையான கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. அத்துடன் தமிழக அறிஞர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவும் உள்ளனர்.

இந்நிகழ்வில் உணர்ச்சிக்கவிஞர் காசிஆனந்தன் நூல் வெளியீட்டு விழாவில் தென்றல் தமிழில் வார்த்தைச் சித்தர் வலம்புரி ஜான் தெள்ளுதமிழில் கவிஞர் அறிவுமதி ஆகியோர் ஆற்றிய உரைகள் அடங்கிய ஒளிப்படம் வெளியீடு செய்து வைக்கப்படும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சிக்கு ஆதரவு - ஆர்.அன்ட் எஸ். ஓட்டோ சேல்ஸ் நிறுவனம் - ஸ்காபரோ தொடர்புகளுக்கு (416) 261 - 9099 (416) 281 - 1165 (416) 447 - 6314







PROFESSIONAL TRUCK TRAINING CENTRE

CLASSES - A,B,C,D,Z மற்றும் Air Brake & Defensive Course, Fork Lift (போக்லிப்ற்) பயிற்சிகளும் வழங்கப்படும்




- EI (வேலையற்றோர் காப்புறுதியில்) இருப்பவர்களுக்கு இலவசப் பயிற்சிகள்
- நியாயமான கட்டணத்தில் பயிற்சி வகுப்புகள்
- அனைத்து பயிற்சியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு
- விசேட தேர்ச்சிபெற்ற பயிற்றுனர்கள்
- வாரத்தில் 7 நாட்களும் வகுப்புகள் உண்டு

START A CAREER YOU CAN FEEL SECURE IN!

விபரங்களுக்கு அழையுங்கள்
TEL: (416) 299-9638
CELL: (416) 771-8041

FAX: (416) 609-9814
www.jaystrans.com

# தமிழ் சிறார்கள் கல்வி வளர்ச்சிக்குத் தனிப்பட்ட முறையில் ஆண்டுக்கு 5 கோடி ரூபா நன்கொடை வழங்க இணங்கினார்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மகேஸ்வரன் அரசாங்க அமைச்சராக இருந்தாலும் அவர் சார்ந்திருந்த அரசாங்கத்துடன் யுத்த நிறுத்தம் ஒன்று நடைமுறையில் இருந்ததால் மகேஸ்வரன் தொடர்பான அணுகுமுறையை எவ்வாறு கடைப்பிடிப்பது என்று விடுதலைப்புலிகள் ஆலோசனை செய்து வரலாயினர்.

இக்கட்டத்தில் மகேஸ்வரன் சிங்களப் பேரின வாதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நெருங்கிய உறவினர்கள் சிலருடன் சேர்ந்து கொண்டு சீன மீன்பிடி அமைப்பொன்றுடன் வியாபார ஒப்பந்தங்கள் ஒன்றைச் செய்வதில் சூத்திரதாரியாக விளங்கினார்.

இதன்படி பல்வேறு கெடுபிடிகளுக்கு மத்தியில் வடபகுதி கடல் தொழிலாளர்கள் நசுங்கித் தவிக்கையில் சீன நிறுவனம் வடகடலில் தங்கு தடையின்றி மீன் பிடிக்கக் கூடிய ஏற்பாட்டைச் செய்வதே மகேஸ்வரனது இத்திட்டமாகும்.

இதைக் கேள்வியுற்ற வடபகுதி மீனவர்கள் உத்தேச ஏற்பாட்டுக்கு எதிராகவும் மகேஸ்வரனுக்கு எதிராகவும் கடுமையான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அமைச்சர் மகேஸ்வரனின் வியாபாரப் பேராசை தமிழ்மக்கள் நலன்களை மிக மோசமாகப் பாதிக்கும் அளவுக்கு எல்லை கடந்து போகப் போவதை உணர்ந்த விடுதலைப்புலிகள் இதுதொடர்பாக தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க முற்பட்டனர்.

கிளிநொச்சிக்கு வரும்படி மகேஸ்வரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. புரிந்து கொள்ளப்படக்கூடிய காரணங்களுக்காக இந்த வரவழைப்பு மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

தன்னுடைய சொந்த அல்லது அமைச்சு வாகனமொன்றில் செல்லாது யு.என்.டி.பி. எனப்படும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் என்ற நிறுவனத்தின் ஜீப் வண்டியில் மகேஸ்வரன் "பந்தா" எதுவுமின்றிக் கிளிநொச்சிக்குப் பயணம் செய்தார்.

தேசியத் தலைவர் மேதகு பிரபாகரனைச் சந்திக்கப் போகின்றோம் என்ற குதூகலத்துடன் சென்ற மகேஸ்வரனுக்கு கிளிநொச்சியில் அதிர்ச்சி மிகுந்த ஏமாற்றமே காத்திருந்தது.

தேசியத் தலைவரை மட்டுமல்ல தமிழ்ச்செல்வன். தமிழேந்தி. தங்கன். புலித்தேவன். போன்ற இடைநிலைத் தலைவர்களைக் கூட அவரால் சந்திக்க முடியவில்லை.

மாறாக விடுதலைப்புலிகளின் மகளிர் அணியைச் சேர்ந்த குழு ஒன்றே மகேஸ்வரனைச் சந்தித்தது. இச்சந்திப்பின் போது மகேஸ்வரன் மீது பல குற்றச்சாட்டுக்கள் விடுதலைப்புலிகளால் முன் வைக்கப்பட்டது. இனிமேல் அவர் திருந்தி நடக்க வேண்டுமென்று "கடுமையான புத்திமதி" அவருக்கு மகளிர் அணியினரால் விடுக்கப்பட்டது.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் மூன்று மணி நேரம் நடந்த சந்திப்புக்காக மகேஸ்வரன் 48 மணி நேரம் காக்க வைக்கப்பட்ட சம்பவமாகும். அத்துடன் எவ்வித ஆடர்பர வசதிகளுமற்ற இருக்கை ஒன்றிலேயே மகேஸ்வரன் அந்த இருநாட்கள் தங்க வைக்கப்பட்டார். கிணற்றில் தண்ணீர் அள்ளியும். தரயில் வெறும் பாயில் படுக்கும்படி நேரிட்டது.

மேலும் அகதி முகாம்களில் வழங்கப்படும் எளிமையான உணவு மாத்திரமே மகேஸவரனுக்கும் வழங்கப்பட்டது. இந்நடவடிக்கைகள் மூலம் சாதாரண தமிழ்மக்கள் படும் கஷ்டங்கள் மகேஸ்வரனுக்கு உணர்த்தப்பட்டது சந்திப்பின் போது. அமைச்சர் மகேஸ்வரனுக்கு விடுதலைப புலிகள் சார்பில் பல காத்திரமான காட்டமான கருத்துக்கள் மகளிர் அணிப் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது. முதலும் முக்கியமுமாக சீனாவுடன் சேர்ந்து வடபகுதியில்

**"மகேஸ்வரன் சிங்களப் பேரின வாதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நெருங்கிய உறவினர்கள் சிலருடன் சேர்ந்து கொண்டு சீன மீன்பிடி அமைப்பொன்றுடன் வியாபார ஒப்பந்தங்கள் ஒன்றைச் செய்வதில் சூத்திரதாரியாக விளங்கினார்"**

மீன்பிடிக்கும் வியாபாரத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சியை உடனடியாகக் கைவிடும்படி எச்சரிக்கை விடப்பட்டது. இது பல்லாண்டு காலமாக அல்லாடிக் கொண்டிருக்கும் தமிழ் மீனவர்கள் வயிற்றில் ஓங்கிக் குத்தும் நடவடிக்கையாக இருப்பதுடன் தேவையற்ற பாதுகாப்பு அச்சுறுத்தல்களையும் கடல் பிராந்தியத்தில் ஏற்படுத்தும் என்று உணர்த்தப்பட்டது.

சம்பந்தப்பட்ட வடகடல் மீன்பிடித்திட்டம் தன்னை மிஞ்சி நடக்கும் செயற்பாடு என்றும் தன்னால் அதனைத் தடுக்க முடியாது மகேஸ்வரன் கூறிய போது அப்படியாயின் மேற்படி திட்டத்தின் செயற்பாடுகளில் இருந்து முற்றாக விலகுவதுடன் அதுதொடர்பான பகிரங்கக் கண்டன அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு விடும்படி மகேஸ்வரன் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

தன் அமைச்சு மூலமாக மகேஸ்வரன் செயற்படுத்தும் திட்டங்கள் பற்றிய விரிவான தகவல்கள். அறிக்கைகள் தமக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் வலியுறுத்தினர்.

இத்திட்டங்கள் தம்மால் ஊன்றிக் கவனிக்கப்படும் என்றும் இவை தொடர்பாக ஊழல் நடைபெறுவது தம்மால் அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அத்துடன் விடுதலைப்புலிக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள இந்துக் கோவில்களைச் செப்பனிடுவதிலும் அவற்றின் கீழான அறவழிச் செயற்பாடுகளைப் பேணுவதிலும் மகேஸ்வரன் தீவிர அக்கறை காட்ட வேண்டும் என்று பணிப்புரை விடுக்கப்பட்டது. இது தொடர்பாக 65 கோயில்கள் கொண்ட பட்டியலும் செய்யப்பட வேண்டிய வேலைகள் குறித்த விபரக் கொத்தும் மகேஸ்வரனுக்குக் கொடுக்கப்பட்டது.

தமிழ்ப்பகுதிகளில் மகேஸ்வரன் மறைமுகமாக மேற்கொள்ளும் வியாபார முயற்சிகள் பற்றிய விபரங்களும் விலாவாரியாக புலிகளால் எடுத்துக்கூறப்பட்டது. மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த வியாபார விடயங்கள் கூட புலிகளால் அம்பலப்படுத்தப்பட்ட போது மகேஸ்வரன் அசந்து விட்டாராம்.

இவற்றுடன் சில மக்கள் விரோத செயற்பாடுகள் என்பதால் மகேஸ்வரன் இனிமேல் அவற்றைக் கைவிட வேண்டும் என்று கேட்கப்பட்டாராம். ஏனையவற்றைப் பொறுத்தவரை அளவுக்கதிகமாக கொள்ளை லாபம் அடிப்பதைக் கைவிட்டு நியாயமான லாபம் சம்பாதிக்கும்படியும் மகேஸ்வரக்கு அறிவுறுத்தப்பட்டது.

எக்காரணம் கொண்டும் தனது வியாபார முயற்சிகளை நியாயப்படுத்த விடுதலைப்புலிகளின் பெயரைப் பாவிப்பதோ அல்லது விடுதலைப்புலிகளுடன் நெருங்கிய உறவு இருப்பதைப் போல் பாவனை செய்வதோ தம்மால் அனுமதிக்கப்பட முடியாது என்றும் விடுதலைப்புலிகள் எடுத்துக்கூறினர். அத்துடன் யுத்தநிறுத்த விதிகளை அமுல்படுத்தும்படி பிரதமர் ரணிலுக்கு அரசாங்க உயர்மட்டத்தில் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்றும் மகேஸ்வரன் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

தமது புத்திமதியைக் கேட்டு நடந்து தம்மைத் திருத்திக் கொள்ளாவிட்டால் அமைச்சர் பதவியையும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் இராஜினாமாச் செய்யும்படி தம்மால் கோரிக்கை விடுக்கப்படும் என்றும் அந்த நிலைக்குத் தம்மைத் தள்ள வேண்டாமென்றும் கனிவாகக் கூறப

அதற்கு விடுதலைப்புலிகள் வியாபார வரி தொழில் சம்பந்தமானது என்றும் அமைச்சர் பணிகள் பதவிக்குரிய கடமை சம்பந்தமானது என்றும் சுட்டிக்காட்டினர். ஒவ்வொரு தமிழனும் பொறுப்பான அந்தஸ்தில் உள்ள தமிழர்கள் இனத்துக்கான பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

அந்தவகையில் தமிழ்பகுதிகளில் தொழில் செய்து பெரும் பணம் சம்பாதித்த மகேஸ்வரன் தனது சக்திக்கு ஏற்ற முறையில் நிதி நன்கொடை வழங்க வேண்டும் என்று உணர்த்தப்பட்டது.

அரசாங்க அமைச்சராக இருக்கும் தான் புலிகளுக்கு எப்படிப் பணம் கொடுப்பது? என்று மகேஸ்வரன் கூறியபோது தமக்கு நேரடியாகப் பணம் தேவையில்லை என்றும் தமிழ்மக்களுக்கு நன்மை செய்யும் தர்ம காரியங்களுக்குப் பணம் கொடுத்தால் போதும் என்றும் கூறப்பட்டது. இதையடுத்து வருடத்துக்கு ஐந்து கோடி ரூபாய்களைத் தனிப்பட்ட முறையில் தமிழ் மாணவர்களின் கல்வி நிதியத்துக்கு மகேஸ்வரன் வழங்க வேண்டும் என்றும் இவ்

**தேசியத் தலைவர் மேதகு பிரபாகரனைச் சந்திக்கப் போகின்றோம் என்ற குதூகலத்துடன் சென்ற மகேஸ்வரனுக்கு கிளிநொச்சியில் அதிர்ச்சி மிகுந்த ஏமாற்றமே காத்திருந்தது.**

**தேசியத் தலைவரை மட்டுமல்ல தமிழ்ச்செல்வன். தமிழேந்தி. தங்கன். புலித்தேவன். போன்ற இடைநிலைத் தலைவர்களைக் கூட அவரால் சந்திக்க முடியவில்லை.**

பட்டது. இவை எல்லாவற்றையும் விட தனிப்பட்ட முறையில் மிகவும் செல்வந்தரான மகேஸ்வரன் இனத்தின் நலனுக்காகப் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டது. ஏற்கனவே வியாபார வரிகளைத் தான் செலுத்துவதாகவும் அமைச்சர் என்ற முறையில் பல நற்பணிகளைச் செய்வதாகவும் மகேஸ்வரன் குறிப்பிட்டார்.

வருடத்திற்கான நிதி ஐந்து தவணைகளில் கட்டப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. கிளிநொச்சிப் பயணத்தையடுத்து முன்னர் தாமாகவே வாரம் தோறும் ஊடகங்களுடன் தொடர்பு கொள்ளும் மகேஸ்வரன் தற்போது கடுமையான மௌனம் கடைப்பிடித்து வருகின்றார்.

## அரசு – புலிகள் புரிந்துணர்வு உடன்பாடு தேசிய இனப்பிரச்சனையில் புதிய காலகட்டத்தைக் குறிக்கிறது

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொண்டு உரையாற்றிய தோழர் வாசுதேவநாணயக்கார தெரிவித்தார். தமிழ் பேசும் மக்களின் பிரிந்து போகின்ற சுய நிர்ணய உரிமையை அன்று தொடக்கம் இன்றுவரை வலியுறுத்தியும் ஆதரித்தும் வருகின்ற தோழர் வாசுதேவ நாணயக்கார மேலும் பேசுகையில்

சிங்களப் பொதுமக்கள் மத்தியில் சமாதான முயற்சிகளுக்குப் பலத்த வரவேற்பு இருக்கின்றது என்பதையே அபிப்பிராயக் கணிப்பீடுகள் மீண்டும் மீண்டும் தெரிவிக்கின்றன.

சிங்களப் பொதுமக்களுடைய மனநிலையில் பெருமளவுக்கு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன என நான் கருதுகிறேன். வடக்கு கிழக்கு தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியத் தாயகம் என்பதைத் தவிர்க்க முடியாமல் இப்போது மெல்ல மெல்ல அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தலைப்பட்டு வருகின்றார்கள்.

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்தும் அவர்களிடையே பெரும் ஆட்சேபனைகள் இல்லை. அவர்கள் புத்திசாலித்தனமான கேள்விகளைக் கேட்கிறார்கள். புலிகள் தடை செய்யப்பட்ட இயக்கம் என்றால் அரசு ஏன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்ற கேட்கின்ற அவர்கள் உத்தியோகப்பற்ற முறையில் விடுதலைப்புலிகளின் அதிகாரத்தை அரசு ஏற்றுக் கொண்டு விட்டதைச் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

ஏ9 பாதை திறக்கப்பட்ட பிற்பாடு யாழ்ப்பாணத்திற்குச் சென்றிருந்தேன். மன்னாருக்கும் சென்று வந்தேன். போகும் வழியெல்லாம் இடிபாடுகள். மரங்கள் செடிகள் கொடிகளைக் கூடவிட்டு வைக்காமல் யுத்தம் எல்லாவற்றையும் நாசப்படுத்தியிருக்கிறது. எனக்கேற்பட்ட அதிர்ச்சி போல வடபகுதிக்குச் சென்று வந்த ஆயிரக்கணக்கான சிங்கள மக்களுக்கும் பேரதிர்ச்சி தான். எல்லாச் சிங்கள மக்களும் தமிழ்மக்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவுகளை நேரே பார்த்து உணர முடியுமானால் சமாதானத்தீர்வை எட்டுவது மிகவும் எளிதாகி விடும். புரிந்துணர்வு ஒப்பந்தம் இதுவரை ஏற்பட்டிருந்த எல்லா ஒப்பந்தங்களையும் விட வேறானது. முக்கியமானது. என்ன அடிப்படையில் இலங்கையின் தேசிய இனங்கள் ஒன்றுபடப் போகின்றன அல்லது பிரியப் போகின்றன என்பதைத் தீர்மானிக்கின்ற முக்கியமான தொடக்கம் இந்த ஆவணம். எங்களைப் பொறுத்தவரை ஐ.தே.கட்சியின் சமாதானத்திற்கான முயற்சிகளை வரவேற்கின்றோம் என்றும் தெரிவித்தார்.

கூட்டத்திற்கு மன்னார் முன்னாள் பா.உ குசைதாசன் அவர்கள் தலைமை தாங்கினார். உள்ளூர் பிரமுகர்களும் பேசினார்கள்.

# மன்னிப்பு சபையினரின் வன்னி விஜயம் தென்னிலங்கையில் ஏற்பட்ட சலசலப்பு

லண்டனில் தலைமை அலுவலகத்தைக் கொண்டுள்ள சர்வதேச மன்னிப்புச்சபையின் பிரதிநிதிகள் குழு ஒன்று அண்மையில் மேற்கொண்டிருந்த விஜயமும் கொழும்பிலும் வன்னியிலும் அவர்கள் நடத்தியுள்ள பேச்சுவார்த்தைகளும் சிங்களப் பேரினவாதிகளின் ஆத்திரத்தைக் கிளறிவிட்டுள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் காணப்படும் மனித உரிமைகள் நிலைமையையிட்டு நேரடியாக ஆராய்வதற்கும் புதிய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் நடவடிக்கைகளையிட்டு நேரில் பார்வையிடுவதற்குமாகவே இந்தத் தூதுக்குழு இந்த விஜயத்தை மேற்கொண்டிருந்தது.

அதேவேளையில் முதல் தடவையாக வன்னிக்கும் சென்று விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமைப் பீடத்துடன் நேரடித் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளின்போது ஆராயப்பட்ட விடயங்கள் தென்னிலங்கையில் இனவாதிகள் மத்தியிலும் இனவாதப் பத்திரிகைகள் மத்தியிலும் எதிர்ப்பு அலைகளை உருவாக்கி விட்டுள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் காணப்படும் மனித உரிமைகள் நிலைமைகளையிட்டு ஆராய்வது மட்டும் இக்குழுவினரின் நோக்கமாக இருக்கவில்லை. சமாதான முயற்சிகள் முக்கியமான கட்டத்தையடைந்து இடைக்கால நிர்வாகசபை ஒன்று தோற்றுவிக்கப்பட்டால் அதில் புலிகளின் பொலிஸ் பிரிவு, நீதித்துறை என்பன பெற்றுக்கொள்ளப் போகும் முக்கியத்துவம் தொடர்பாகவும் மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் விரிவாக ஆராய்ந்துள்ளார்கள். பேரினவாதிகளைக் கொதித்தெழச் செய்துள்ளதும் இது தான்.

வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப் புலிகள் நடத்தி வரும் நீதி நிர்வாகப் பணிக்கான ஒரு அங்கீகாரமாகவே மன்னிப்புச் சபையின் விஜயத்தை பேரினவாதிகள் கருதுகின்றார்கள். உண்மை நிலையும் அது தான். வன்னியில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்பட பொலிஸ் துறை, நீதித்துறை ஆகியவற்றுக்கு பொறுப்பான முக்கிய அதிகாரிகளுடன் தாம் பேச்சுவார்த்தைகளை நடத்தியதாக மன்னிப்புச்சபையின் தூதுக்குழுவுக்கு தலைமை தாங்கிய டெரிக் இவான்ஸ் கொழும்பில் தெரிவித்தார். டெரிக்குடன் மூன்று பேர் கொண்ட தூதுக்குழு ஒன்றே வன்னிக்கான இந்த விஜயத்தை மேற்கொண்டது.

விடுதலைப்புலிகளால் நடத்தப்படும் பொலிஸ் நிலையங்கள், அவர்களது கட்டுப்பாட்டிலுள்ள சிறைச்சாலைகள், கைதிகளின் புனர்வாழ்வு நிறுவனங்கள் என்பவற்றுக்கும் மன்னிப்புக்குழுவின் தூதுக்குழு நேரில் சென்று பார்வையிட்டது.



புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பதினைந்து பொலிஸ் நிலையங்கள் உள்ளன. இதனைவிட மேலும் ஓரிரு பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கான திட்டமும் உள்ளது. இந்தப் பொலிஸ் நிலையங்கள் சிலவற்றுக்கு நேரில் சென்ற மன்னிப்புச்சபையின் பிரதிநிதிகள் அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக இவர்களிடம் விரிவான முறையில் மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் கேட்டறிந்து கொண்டனர். இதன் பின்னர் சிறைச்சாலைகளின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கான சில யோசனைகளும் மன்னிப்புச்சபையால் முன் வைக்கப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தினாலும் விடுதலைப் புலிகளாலும் விடுக்கப்பட்ட அழைப்பைத் தொடர்ந்தே தாம் இந்த விஜயத்தை மேற்கொண்டதாக மன்னிப்புச்சபையின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். விடுதலைப் புலிகள் தமது போராட்டத்தின் முன்னேற்றப்படிகளாக சிவில் நிர்வாகத்தை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தார்கள். இந்த சிவில் நிர்வாகத்தின் ஒரு படியாகத் தான் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் முயற்சியாக காவல்துறை அமைக்கப்பட்டது. காவல்துறைக்குப் பொறுப்பாக நடேசனும் நீதித்துறைக்குப் பொறுப்பாக பரராஜசிங்கமும் நியமிக்கப்பட்டனர்.

பொலிஸ் நிலையம், அதற்கு அடுத்தபடியாக நீதிமன்றம், சிறைச்சாலை என்பன தேசக்கட்டுமானப் படிகளின் ஒவ்வொரு கட்டமாக அமைக்கப்பட்டன. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வசிப்பவர்களின் அன்றாட வாழ்க்கையில் குறிப்பாக சட்டம் ஒழுங்கு என்பவற்றை நிலைநாட்டுவதில் இந்த மூன்றும் பிரிக்கமுடியாத வகையில் சம்பந்தப்பட்டுள்ளன. ஸ்திரமான முறையில் வேரூன்றியுள்ள இந்தக் கட்டமைப்புக்களின் எதிர்காலம்என்ன என்ற ஒரு கேள்வி தற்போதைய சமாதானப் பேச்சுக்களையிட்டு முன் வைக்கப்படும் நிலைமையைக் காணமுடிகின்றது. இந்தப் பின்னணியில் தான் மன்னிப்புச் சபையின் தற்போதைய விஜயம் முக்கியத்துவம் பெறுகின்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் பொலிஸ், நீதிமன்றம் மற்றும் அவர்களின் விசாரணை முறைகளை சட்ட விரோதமான அம்சங்களாகத் தான் ஸ்ரீலங்கா அரசால் இது வரைகாலமும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இப்போது சர்வதேச ரீதியாகவே இவை அங்கீகாரத்தைப் பெற்றிருப்பதுடன் பொலிசாருக்குப் பயிற்சியளிப்பதற்கும் மன்னிப்புச்சபை முன் வந்திருப்பது தமிழீழக் காவல்துறையைப் பொறுத்தவரையில் ஒரு மைல் கல் என்று தான் சொல்லவேண்டும் . கடந்த கால காவல்துறையின் செயற்பாடுகளுக்குக் கிடைத்துள்ள ஒரு அங்கீகாரமாகவும் இதனைக் கருதமுடியும்.

ஏனைய நாடுகளிலுள்ள காவல்துறைகளுடன் ஒப்பிடும்போது தமிழீழக் காவல்துறையினரின் வசதிகள் மிகவும் குறைவாகவே உள்ளன. அதிநவீன கருவிகள் அவர்களிடம் இல்லை. இருந்த போதிலும் குற்றச்செயல்கள் பெருமளவுக்கு குறைவான ஒரு பகுதியாகவே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் அமைந்துள்ளன. குற்றங்கள் நடைபெறுவதற்கு முன்னதாகவே அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொள்வதாக காவல்துறையின்

## தமிழீழ காவல்துறைக்கு சர்வதேச அங்கீகாரம்!

நுணுக்கமான முறையில் ஆராய்ந்துள்ளார்கள். இங்குள்ள ஆவணங்கள், பொலிசார் பயன்படுத்தும் கருவிகள் போன்றனவும் பரிசீலிக்கப்பட்டன. பொலிஸ் நிலையங்களின் செயற்பாடுகளையிட்டு திருப்தி தெரிவித்த மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் மனித உரிமைகள் விடயத்தில் தமிழீழப் பொலிசாருக்கு பயிற்சியளிப்பதற்கான தமது விருப்பத்தையும் வெளியிட்டனர்.

தமிழீழ காவல் துறைக்கு சர்வதேச மன்னிப்புச் சபையினர் பயிற்சியை வழங்கப்போகின்றார்கள் என்பது அதற்கான ஒரு சர்வதேச அங்கீகாரமாகவே அமையும். இடைக்கால நிர்வாக சபையிலே தமிழீழ காவல்துறையினர் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான பயிற்சிகளை வழங்குவதற்கு சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் அமைப்பு ஒன்று முன் வந்திருப்பது இந்தப் பொலிஸ் நிலையங்கள் - அவற்றின் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள அங்கீகாரம் என்பதில் சந்தேகமில்லை. அதேவேளையில் சர்வதேச தரத்துக்கு இணையாக இந்தப் பொலிஸ் நிலையங்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பொலிஸ் நிலையங்களின் செயற்பாடுகளை மேலும் மேம்படுத்துவதற்கான யோசனைகள் சிலவும் மன்னிப்புச் சபையால் முன் வைக்கப்பட்டிருக்கின்றது.

பொலிஸ் நிலையங்களைப் போலவே விடுதலைப் புலிகளுடைய நீதித்துறைக்கு உட்பட்ட சில சிறைச்சாலைகளையும் மன்னிப்புச் சபை நேரில் சென்று பார்வையிட்டது. மிகவும் குறுகிய கால முன்னறிவித்தலுடனேயே இந்தச் சிறைக்கு தாம் சென்றதாக மன்னிப்புச்சபையின் பிரதிநிதி இவான்ஸ் கொழும்பில் தெரிவித்தார்.

சிறைச்சாலையின் நிலைமைகள் தொடர்பாக விரிவான முறையில் பார்வையிட்ட மன்னிப்புச்சபையின் பிரதிநிதிகள், தடுத்துவைக்க[illegible]ட்டுள்ள கைதிகள் பலரையும் சந்தித்து உரையாடியுள[illegible] சிறைச்சாலைகளின் நிலைமைகள்

பொறுப்பாளர் நடேசன் அண்மையில் பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார். குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் கூட இலகுவில் தப்பிச் சென்றுவிடுவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

வடக்கு கிழக்குக்கு இடைக்கால நிர்வாகசபை ஒன்று அமைக்கப்படும் போது புலிகளின் நீதி, நிர்வாக பாதுகாப்பு கட்டமைப்புக்கள் விஸ்தரிக்கப்படலாம் என்பதற்கான ஒரு சமிக்ஞையாகவே மன்னிப்புச்சபையின் வன்னி விஜயமும் அவர்கள் விடுதலைப் புலிகளுடன் நடத்தியுள்ள பேச்சுக்களும் அமைந்துள்ளன.

மன்னிப்புச்சபையின் கோரிக்கைகளையிட்டு விடுதலைப் புலிகள் சாதகமான பிரதிபலிப்புக்களையே வெளியிட்டதாக மன்னிப்புச்சபையின் பிரதிநிதிகள் திருப்தி தெரிவித்திருக்கின்றனர். விடுதலைப் புலிகள் திறந்த மனப்பான்மையுடன் அவர்களது பாதுகாப்புக்கு உட்பட்ட பகுதிகளைக் கூட சென்று பார்வையிடுவதற்கு அனுமதியை வழங்கியிருந்தார்கள். இவை அனைத்தும் விடுதலைப்புலிகளுடன் மன்னிப்புச்சபையினர் எதிர்காலத்தில் நெருங்கிச் செயற்படும் நிலைமைகளைத் தோற்றுவித்துள்ளது.

இருந்தபோதிலும் கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் நடத்திய பேச்சுக்களின் போது இதற்கு எதிரான உணர்வலைகளைத் தான் மன்னிப்புச்சபையின் பிரதிநிதிகளால் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

புலிகளின் நீதி, நிர்வாகக் கட்டமைப்புக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இதே உணர்வுகளைத் தான் இனவாத சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் வெளியிட்டு வருகின்றன.

யதார்த்தமான முறையில் சிங்களத் தலைவர்கள் சிந்திக்கத் தவறியதால் தான் நிலைமைகள் இப்போது இந்தளவுக்கு மோசமடைந்தன. இன்றைய காலகட்டத்தில் கூட தற்போதைய யதார்த்த நிலைமைகளை ஏற்றுக்கொள்வதற்கு சிங்களத் தலைமைகள் தவறினால்....!?

## நமது நோக்கு

### இன மோதல்களும் சதித் திட்டங்களும்

தமிழ்-முஸ்லிம் மக்களிடையே மீண்டும் ஒரு இனக் கலவரம் திட்டமிட்ட முறையில் நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றது. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்காக முன்னெடுக்கப்படும் முயற்சிகளைச் சீர்குலைப்பதும், பிரபா-ரக்கீம் ஒப்பந்தத்தை கேள்விக்குறியாக்குவதும்தான் இந்தக் கலவரத்தின் பின்னணி நோக்கங்கள் என்பதை புரிந்து கொள்வது அவ்வளவு கடினமானதல்ல.

ஆயுதப் படைகள், பொலிஸார் மட்டுமன்றி ஐந்தாவது படையெனச் சொல்லப்படும் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களும் இனவாதத்தைத் தூண்டி மோதல்களை மோசமடையச் செய்வதில் தமது பங்களிப்பைத் தாராளமாகச் செய்துள்ளார்கள். எரியும் நெருப்பை அணைப்பதற்குப் பதிலாக எண்ணெய் ஊற்றியிருக்கின்றார்கள்.

சுமூகமான சூழ்நிலையைச் சீர்குலைப்பதில் வழமையான துரம்புச் சீட்டு மீண்டும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

வன்முறைகள் ஆரம்பிக்கப்பட்ட முறை, அவற்றைக் கிழக்கு மாகாணம் முழுவதற்கும் பரப்புவதற்குக் கையாளப்பட்டுள்ள உபாயம் என்பவற்றை உற்று நோக்கும் போது இதனை ஒரு தற்செயல் நிகழ்வு என யாரும் நிராகரித்துவிட முடியாது. இவை சில தனிநபர்களால் முன்னெடுக்கப்பட்ட வன்முறைகள் எனவும் ஒதுக்கிவிட முடியாது. இவை முன்கூட்டியே திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்டவை என்பதைப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

தற்போதைய சமாதான முயற்சிகளை பேரினவாதிகள் ஆரம்பம் முதலே எதிர்த்துவருகின்றார்கள். இதனைத் தடம்புரளச் செய்வதற்கான அத்தனை முயற்சிகளையும் அவர்கள் மேற்கொண்டுவிட்டார்கள். இதனைவிட சமாதான முயற்சிகளுக்கு வாயளவில் ஆதரவைத் தெரிவிக்கும் அந்திய நாடொன்றும் சமாதான முயற்சிகளைச் சீர்குலைப்பதற்கான நடவடிக்கைகளை மறைமுகமாக முன்னெடுத்து வருகின்றது.

இச் சக்திகள் தமது நோக்கங்கள் நிறைவேற வேண்டும் என்பதற்காக எதனையும் செய்யத் துணிந்தவை. அத்துடன் இதற்காக யாரையும் விலைக்கு வாங்கக் கூடிய சக்தியைக் கொண்டவர்கள் என்பதும் இரகசியமானதல்ல. எந்த இடத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கையைக் குழப்பினால் மீண்டும் போரை ஆரம்பிக்கலாம் என்பதையும் இந்தச் சக்திகள் சரியான முறையில் அடையாளம் கண்டு வைத்திருக்கின்றன. அதன் படியே அவற்றன் நகர்வுகளும் அமைந்துள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கையைச் சீர்குலைத்து விடுதலைப் புலிகளைச் சீண்டி அவர்களை மீண்டும் யுத்தத்துக்குள் கொண்டுவருவதுதான் இந்த முயற்சிகள் அனைத்தினதும் இறுதி இலக்கு. விடுதலைப் புலிகளின் நிதானமான செயற்பாடுகளும் சீண்டிவிடும் முயற்சிகளின் போது கூட அமைதியையும், பொறுமையையும் அவர்கள் கடைப்பிடித்ததும் நிலைமைகள் மோசமடையாமைக்குக் காரணம்.

ஆக, வன்முறையைத் தூண்டிவிட்டவர்கள் இம்முறை தமது இறுதி இலக்கில் முழுமையான வெற்றியைப் பெற்றுக்கொள்ளவில்லை. இதனால் அவர்கள் மீண்டும் ஒரு குழப்ப நிலையைத் தோற்றுவிப்பதற்கான சூழ்நிலைகளை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள் என்பது மட்டும் நிச்சயம். இந்தச் சதித் திட்டங்கள் குறித்து தமிழ் முஸ்லிம் மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது மிகவும் அவசியமானதாகும்.

# கிழக்கிலங்கை தமிழ் – முஸ்லிம் பிரச்சனையின் பின்னணியில் சிங்களப் பேரினவாதம்

(சென்றவார முன்பக்கத் தொடர்ச்சி)

## ராசிக்குழு

இக்கட்டத்தில் செங்கலடி இராணுவ முகாமில் இருக்கின்ற இராணுவத் துணைப் படையான ராசிக் குழுவைச் சேர்ந்த சிலர் செயற்படத் தொடங்கினர். ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணிக்குச் சார்பான ஆயுதக்குழு இது.

யுத்தநிறுத்த ஒப்பந்தப்படி இக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டுமாயினும் இது சிங்கள அரசாங்கத்தால் செய்யப்படவில்லை.

கலவரமான சூழ்நிலையில் தமிழ் - முஸ்லிம் வன்முறையைப் பெருப்பிக்க நினைத்த சிங்களச் சதியாளர்கள் இந்த ராசிக்குழுவை அப்பாவி முஸ்லிம் மக்கள் மீது கட்ட விழ்த்து விட்டனர்.

வன்முறையில் ஈடுபட்ட முஸ்லிம் ஆயுதக் கும்பலை ஒன்றும் செய்யாத ராசிக்குழு தம் சிங்கள எஜமானர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அப்பாவிப் பொதுமக்களான முஸ்லிம் மக்கள் மீது வன்முறையைக் கட்ட விழ்த்து விட்டது.

ஆத்திரமடைந்திருந்த தமிழ்மக்களை கும்பலாக அணிதிரளும்படி தூண்டி விட்ட ராசிக் குழு மக்களோடு மக்களாகமத் தாமும் சேர்ந்து கொண்டு முஸ்லிம் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியது.

பல முஸ்லிம்கள் தாக்கப்பட்டார்கள். பல முஸ்லிம் வீடுகள் தகர்க்கப்பட்டன. அத்துடன் ராசிக்குழு ஆர்.பி.ஜி. மோட்டார் ஷெல்களைப் பாவித்து நான்கு. ஐந்து வீடுகளைத் தரை மட்டமாக்கியதாகவும் ஓட்டமாவடியில் உள்ள பள்ளிவாசல் மீது ஏவப்பட்ட செல் முற்றத்தில் வெடித்துச் சிதறியதால் பள்ளிவாசலுக்கு சேதம் ஏற்படவில்லை என்றும் முஸ்லிம் மக்கள் கூறியுள்ளனர்.

## பொதுமக்கள் கடத்தல்

இவ்வாறு நிலைமையை மோசமாக்கி வன்முறை நடத்திய ராசிக்குழு தன் வேலையைச் செய்து முடித்து விட்டு மீண்டும் செங்கலடி கறுத்தபாலம் முகாமுக்குச் சென்று முடங்கி விட்டது.

ஆனால் ஆத்திரமடைந்த முஸ்லிம்கள் குறிப்பாக பள்ளிவாசல் தாக்குதலினால் கோபம் கொண் முஸ்லிம்கள் தமிழ்மக்களைத் தாக்கத் தொடங்கினர்.

வன்முறை அதிகரித்து மக்கள் நடமாட்டம் குறைந்திருந்ததால் தமிழர்கள் சென்ற வாகனங்களைக் கடத்த முற்பட்டனர். அத்துடன் எல்லைப்பகுதிகளில் இருந்த தமிழ் மக்களையும் கடத்த முற்பட்டனர். இவ்வாறு செய்த முஸ்லிம் கும்பல் ஒன்று சில தமிழ்க்குக்கிராமங்களைச் சேர்ந்த பத்துத் தமிழ் பெண்களைக் கடத்தி ஒரே வாகனத்தில் கொண்டு சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## தமிழரும் தாக்கினர்

"தமிழ்நெட்" கணணிச் சேவையில் செய்தியாகக் கப்பட்ட இச்சம்பவத்தையடுத்துத் தமிழ்மக்கள் திரண்டெழுந்து பதில் தாக்குதல்களில் ஈடுபட்டனர். இரு சாராரும் மற்றச் சமூகங்கள் சென்ற பஸ் வண்டிகளைக் கடத்தினர். ஆனால் தம்மைக் குழுக்களாகத் திரட்டிக் கொண்ட தமிழ்பொதுமக்கள் தம்மைத் தற்பாதுகாப்புச் செய்து கொண்டதுடன் பல தடவைகளில் ஆத்திரம் கொண்டு அப்பாவி முஸ்லிம் பொதுமக்களைத் தாக்கத் தொடங்கினர்.

கடலோரப்பகுதிகளான சாகாங்கேணி. மாங்கேணி. பனிக்கர்சேனை ஆகிய இடங்களில் அகப்பட்ட முஸ்லிம் மீனவர்கள் தாக்கப் பட்டனர். இவர்கள் படகுகளும் வாடிகளும் எரிக்கப்பட்டன.

இதேவேளை வாகனேரிப் பொலிசைச் சேர்ந்த முஸ்லிம் அதிகாரிகள் சில தமிழ் இளைஞர்களைக் கைது செய்து தாக்கினர். இதில் பாயிஸ் என்பவர் தம் துப்பாக்கியால் தமிழ் இளைஞர்களைச் சுட்டுக் கொன்றதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

## பொதுமக்கள் சீற்றம்

நடைபெற்ற வன்முறைகளினால் தமிழ் முஸ்லிம் பொதுமக்கள் பரஸ்பரம் சீற்றம் கொண்டனர். ஓட்டமாவடியில் உள்ள பிரதி மீன்பிடித்துறை அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.யுமான மொகிதீன் அப்துல் காதரின் வீடு முஸ்லிம் பொதுமக்களால் தாக்கப்பட்டது.

நிலைமையை அவதானிக்க வந்த அமைச்சர் ஹக்கீம் முஸ்லிம் மக்களை மாத்திரம் விசாரித்து விட்டுத் திரும்பினார். அவரது காரைச் சூழ்ந்து கொண்ட முஸ்லிம் மக்கள் தமக்கு ஆயுதம் வேண்டும் என்று கூக் குரலிட்டனர்.

இதே வேளை நிலைமையை ஆராயச் சென்ற தமிழ் எம்.பி.க்களான ஜோசப் பரராசசிங்கம். தங்கவடிவேல் கிருஷ்ணபிள்ளை ஆகியோர் மீது தமிழ்மக்கள் தம் அதிருப்தியைத் தெரிவித்தனர்.

குறிப்பாக கிரான் பகுதியில் சாலை மறியல் செய்த தமிழ்மக்கள் மூன்று எம்.பி.க்களையும் தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிக்கவில்லை.

## அம்புலன்ஸ்களுக்கு கல்லெறி

வன்முறைகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏனைய முஸ்லிம் பகுதிகளுக்கும் பரவத் தொடங்கின. ஏறாவூர். காத்தான்குடிப்பகுதிகளின் எல்லையில் உள்ள தமிழ்ப்பகுதிகள் தாக்கப்பட்டன.

காயமடைந்த தமிழர்களை ஏற்றிக் கொண்டு அம்புலன்ஸ் வண்டிகள் வைத்தியசாலைக்கு விரைந்தபோது ஏறாவூர். காத்தான்குடி முஸ்லிம் மக்கள் மிருகத்தனமான முறையில் அந்த அம்புலன்ஸ்வண்டி மீது கல்வீச்சு நடத்தினர்.

## வன்முறை தடுப்பு

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த முறைப்பாடுகளால் உந்தப்பட்ட பிரதமர் ரணில்விக்கிரமசிங்க வன்முறையைக் கட்டுப்படுத்த முனைந்தார்.

முப்படைத்தளபதிகளைக் கொண்டு வன்முறையை அடக்கும்படி பணிப்புரை விடுத்தார்.

இதேவேளை கிழக்கு மாகாண கல்முனையைச் சேர்ந்தவரான பதில் பொலிஸ் மாஅதிபர் ஆனந்தராஜா நேரடியாகக் கிழக்கிற்குச் சென்று பொலிசாரைக் கடமையைச் செய்யப் பண்ணி வன்முறை பரவுவதைத் தடுத்து நிலைமைகளைக் கட்டுப்படுத்த உதவினார்.

பிரதமர் ரணிலின் கட்டளைப்படி உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் ஜோன அமரதுங்கவும் முஸ்லிம் காங்கிரஸ்தலைவர் அமைச்சர் ஹக்கீமும் மீண்டும் மட்டக் களப்புக்குச் சென்று நிலைமையைப் பரிசீலனை செய்தனர்.

## வன்முறை விளைவுகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்த வன்முறைச் சம்பவங்களில் 13 தமிழர்கள் 7 முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளனர். 38 முஸ்லிம்களும் 93 தமிழர்களும் காயமடைந்துள்ளனர். 79 தமிழ் வர்த்தக நிலையங்களும் 38 முஸ்லிம் நிலையங்களும் அழிந்து போயுள்ளன. 92 தமிழ்வீடுகளும் 59 முஸ்லிம் வீடுகளும் சேதமடைந்தன. இரு சாராருக்கும் சொந்தமான பஸ்கள். மினிவான்கள். வான்கள். லொறிகள். கார்கள். மோட்டார் சைக்கிள்கள். சைக்கிள்கள். படகுகள் சேதமடைந்துள்ளன. இதில் எண்ணிக்கையின் படி தமிழர்களுக்கே கூடுதல் பாதிப்பு.

## ஹக்கீமின் முறையீடு

ஓர் அரசாங்க அமைச்சரைப்போல் நடுநிலையாக நடக்காமல் முஸ்லிம் அமைச்சராக மாத்திரம் செயற்பட்ட அமைச்சர் ஹக்கீம் தமிழ்மக்களின் கசப்பைச் சம்பாதித்துள்ளார்.

அத்துடன் புலிகளுக்கு சம்பவங்களில் பங்கு இருப்பது போலவும் புலிகள் வன்முறையைக் கட்டுப்படுத்தத் தவறியது போலவும் முஸ்லிம் மக்களின் பொருளாதாரம் திட்டமிட்டு அழிக்கப்பட்டது போலவும் பகிரங்கமாக அறிக்கை விடுத்துள்ளார்.

ஆனால் வன்முறையில் புலிகளுக்கு எந்தப் பங்கும் இருக்கவில்லை என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார். மேலும் புலிகளின் நிலைப்பாட்டினை விளங்கிக் கொண்ட போதிலும் தமக்கு ஆதரவாக வன்முறையில் இறங்கவில்லை என்ற மனக்குறை தமிழ்மக்களுக்கு உண்டு.

இந்நிலையில் புலிகள் தமிழ்மக்களைத் தற்காத்துக் கொள்ள வேணடாமென்றோ பதில் தாக்குதல் செய்ய வேண்டாமென்றோ தடுத்திருக்க முடியாது. மேலும் திட்டமிட்ட முறையில் தமிழர் சொத்துக்கள் முஸ்லிம் குழுக்களால் சேதப்படுத்தப்பட்டிருக்க கதையை மாற்றி ஹக்கீம் குற்றச்சாட்டு தெரிவித்தது தமிழ்மக்கள் உள்ளங்களைப் புண்படுத்தியுள்ளது.

## விசாரணை தேவை

ஹக்கீமின் பொறுப்பற்ற குற்றச்சாட்டுக்கள். ஓசாமா கோஷ்டியின் பின்னணி. முஸ்லிம் பொலிசாரின் நடத்தை. சேத விபரங்கள் போன்ற விடயங்களையிட்டு நடுநிலையான நீதி விசாரணை ஒன்று தேவை என்பதே பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கையாகும்.

இதற்கு பிரதமர் ரணில் இணங்குவாரா என்பது கேள்விக்குறியே. இதேவேளை மழை விட்டாலும் தூவானம் ஓயாதது போல் கிழக்கில் பலத்த வன்முறை ஓய்ந்து விட்டாலும் ஆங்காங்கே சிறியளவில் தீவைப்பு. வாகனக்கடத்தல். ஆட்கள் மீது தாக்குதல் போன்ற சம்பவங்கள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

## வாசகர்களின் கவனத்திற்கு!

ஈழநாட்டில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்களும் ஐரோப்பிய மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளில் வெளியாகும் பதிப்புக்களிலும் இடம் பெறும் என்பதையும் ஐரோப்பிய வானொலியில் உடனுக்குடன் இலவசமாக ஒலிபரப்பாகும் என்பதையும் அறியத் தருகின்றோம். மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளவும்.

(905) 653 - 3000 (416) 266 - 9919



# புரிந்துணர்வுக்கு முன் பேச்சுக்கு அவசரம்!
# அமெரிக்கா ஆதரிப்பதன் பின்னணி என்ன?

சிறப்புக் கட்டுரை
பேராசிரியன் எழுதுவது

எப்போதும் சர்ச்சைக்குரிய ஒருவராகவே கருதப்படும் ஸ்ரீலங்காவுக்கான அமெரிக்காவின் தூதுவர் அஷ்லி வில்ஸ் மீண்டும் வாய் திறந்திருக்கின்றார்.
அவர் வாய் திறக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்களைச் சீண்டக்கூடிய விதமாக ஏதாவது சொல்வது வழமை.
இம்முறை மட்டும் அதற்கு விதிவிலக்கல்ல.
" ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சமாதானத்துக்குத் தயாராகவுள்ளார்கள்.
சமாதானத்துக்காக விசுவாசகமாக முயற்சிக்கின்றார்கள்.
ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பையிட்டு என்னால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை" என தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் வில்ஸ் தெரிவித்திருக்கின்றார்.
இந்தத் தொலைக்காட்சிப் பேட்டி கொழும்பு அரசியலில் இப்போது ஒரு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.
சமாதான முயற்சிகளில் அடிக்கடி தேவையற்ற தலையீட்டை மேற்கொள்ளும் வில்ஸ் உண்மையாகவே இதனைத் தெரியாமல் உள்ளாரா அல்லது தெரிந்து கொண்டும் ஒரு தலைப்பட்சமாகக் கருத்துக்களை வெளியிடுகின்றாரா?
உண்மையாகவே நித்திரையாக இருப்பவர்களை எழுப்பமுடியும்.
நித்திரை போல நடிப்பவர்களை எழுப்பமுடியாது என்று சொல்வது தான் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுக்கு வருகின்றது.
விடுதலைப் புலிகள் சமாதானத்துக்கு விரோதமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார்கள் என்று கூட அடித்துச் சொல்லமுடியாத நிலையில் தான் பட்டும்படாமலும் இந்தக் கருத்தை வில்ஸ் தெரிவித்திருக்கின்றார் என்று தான் கொள்ளவேண்டும்.

## ஜனாதிபதி பிரதமரின் விசுவாசம் இது தான்!

தனது கருத்துக்களுக்கு ஆதரவாக மேலதிக தகவல்கள் சிலவற்றையும் கூட வில்ஸ் தெரிவித்திருக்கின்றார்.
கடந்த ஆறு ஏழு வருடகாலமாக ஜனாதிபதியினதும் ரணில் விக்கிரமசிங்கவினதும் நடவடிக்கைகளை அவதானித்து வரும் போது இதனைத் தன்னால் உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது என வில்ஸ் தெரிவித்திருக்கின்றார்.
ஸ்ரீலங்கா அரசியலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கடந்த சில வருடங்களாக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை அவதானித்து வரும் எவரும் அமெரிக்க தூதுவரின் கருத்துக்களையிட்டு ஆச்சரியமடைவார்கள்.
ஒரு தூதுவர் ஸ்ரீலங்காவின் அரசியலையிட்டு இந்தளவு அறிவைத் தான் கொண்டுள்ளாரா என்ற கேள்வியும் எழுப்பப்படலாம்.
இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணப்போவதாகக் கூறி பதவிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்க முன் வைத்த தீர்வுத்திட்டத்துக்கு என்ன நடந்தது என்பதை ஆராய்ந்தால் இந்த இரு தலைவர்களினதும் விசுவாசத்தை உணரமுடியும்.
சந்திரிகா முன் வைத்த தீர்வுத்திட்டம் பேரினவாதிகளினது அழுத்தங்களுக்கு உள்ளாகி தேய்வடைந்து சென்றது அனைவருக்கும் தெரிந்தது தான்.
இந்த யோசனைகள் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டபோது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவும் ஐதேகவும் நடந்து கொண்டமுறையும் எவருக்கும் தெரியாததல்ல.
இவை அனைத்தையும் தெரிந்து கொண்டுள்ள நிலையில் தான் அவர்களது கடந்த காலத்தை அடிப்படையாக வைத்து சமாதானத் தீர்வில் அவர்கள் கொண்டுள்ள 'விசுவாசத்தை' (?) வில்ஸ் பறைசாற்றியுள்ளார்.

## அமெரிக்க தூதர் வெளியிட்ட கருத்துக்களின் உள்நோக்கம்

அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ள கருத்துக்களில் எந்தவிதமான உண்மையோஅல்லது நியாயமோ இருப்பதாகத் தெரியவில்லை.
தவறான அர்த்தத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்தக் கருத்துக்களில் உள்நோக்கங்கள் பொதிந்திருப்பதாக கருதுவதில் சந்தேகமில்லை.
தீர்வு முயற்சிகளை அரசியல் மயப்படுத்தி அதன் மூலம் சமாதான முன்னெடுப்புக்களையே தடுத்து நிறுத்திய இருவரையும் சமாதானத்துக்கு விசுவாசமானவர்கள் எனக் கருத்து வெளியிட்ட தூதுவர் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டையிட்டு மட்டும் சந்தேகத்தைக் கிளப்பியிருப்பதன் நோக்கம் என்ன?
அரசாங்கத்தின் பக்கம் சார்ந்து நின்று விடுதலைப் புலிகள் மீது அழுத்தத்தைக் கொடுப்பதற்கான அமெரிக்காவின் திட்டங்களின் ஒரு பகுதியாகத் தான் இதனைக் கருதமுடியும்.
அண்மையில் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ அந்நாட்டுடன் பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றிலும் கைச்சாத்திட்டார்.
அச்சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகளைப்பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வருவதற்கான அழுத்தத்தை அமெரிக்கா கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைத்தார்.
அரசாங்கம் பேச்சுக்களுக்கு தயாராகவுள்ளது.
ஆனால் புலிகள் தான் பேச்சுக்களுக்கு வரத் தயங்குகின்றார்கள் எனக் காட்டிக் கொள்வது தான் இதன் நோக்கம்.
இதற்கு உடனடியாகப் பதிலளிக்கத் தவறிய அமெரிக்கா இலங்கைக்கான தனது தூதுவர் மூலமாக இவ்வாறான ஒரு பதிலைக் கொடுத்துள்ளதா என்பதையும் ஆராய வேண்டும்.

## சமாதான முயற்சிகளில் அமெரிக்காவின் பங்கு?

நோர்வேயின் அனுசரணையுடன் தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளில் அமெரிக்கா நேரடியாக எவ்வகையிலும் சம்பந்தப்படவில்லை.
ஆனால் நோர்வேயின் முயற்சிகளின் பின்னணியில் அமெரிக்கா சம்பந்தப்பட்டுள்ளது என்பது மட்டும் உண்மை.
புரிந்துணர்வு உடன்படிக்கையை விடுதலைப் புலிகள் கவனமாக கடைப்பிடிக்கவேண்டும் என எச்சரிக்கை விடும் பாணியில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு அதன் மூலம் சர்ச்சைகளை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்தவரும் அமெரிக்க தூதுவர் தான்.
இவ்வாறான அறிக்கையின் மூலம் இலங்கை விவகாரத்தில் பாரபட்சமான முறையிலான ஒரு தலையீட்டைத் தான் அமெரிக்கா மேற்கொள்கின்றது என்பது தெளிவாகியிருந்தது.
அதனை இப்போது வில்ஸ் தெளிவாக உறுதிப்படுத்தியிருக்கின்றார்.
சமாதானப்பேச்சுவார்த்தைகளை திட்டமிட்டபடி மே மாதத்திலோ அல்லது ஜூன் மாதத்திலோ ஆரம்பிக்கமுடியாமல் போனமைக்கு என்ன காரணம் என்பது அனைவருக்கும் தெரிந்தது தான்.
புரிந்துணர்வு உடன்படிக்கையிலுள்ள கடப்பாடுகள் பலவற்றை அரசாங்கத்தால் நிறைவேற்றமுடியாதிருப்பது தான் பேச்சுக்களுக்கான தாமதத்துக்கு காரணம்.
இதனை அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ கூட கடந்த வாரம் பாராளுமன்றத்தில் தெரியப்படுத்தியிருந்தார்.
அதாவது இப்போது சமாதானப் பேச்சுக்கள் தாமதமாவதற்கு அரசாங்கம் தான் காரணம் என்பதில் சந்தேகமில்லை.
இருந்த போதிலும் இதனையிட்டு கண்டும் காணாதது போல இருக்கும் அமெரிக்கா, விடுதலைப்புலிகள் மீது மட்டும் குற்றங் கண்டு பிடிக்க முற்படுவதன் நோக்கம் தான் என்ன?

## புரிந்துணர்வுக்கு முன் பேச்சுக்கு அவசரம்..?

புரிந்துணர்வு உடன்படிக்கையில் சொல்லப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர் சமாதானப்பேச்சுக்களுக்கு செல்வதில் அர்த்தமில்லை என விடுதலைப் புலிகள் கருதுகின்றார்கள்.
இல்லையெனில் தேவையற்ற பல பிரச்னைகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கும் எனவும் அவர்கள் கூறுகின்றார்கள்.
ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் புரிந்துணர்வு உடன்படிக்கையையிட்டுக் கவலைப்படாமல் பேச்சுக்குச் செல்ல வேண்டும் என்பதில் தான் அக்கறை காட்டுகின்றது.
புரிந்துணர்வு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சிக்கல்களால் தான் இவ்வாறான ஒரு நிலைப்பாட்டை அரசாங்கம் எடுத்திருக்கின்றது.
அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ அமெரிக்காவில் முன் வைத்த கோரிக்கையின் பின்னணி இது தான்.
உண்மையில் இந்த அணுகுமுறை புரிந்துணர்வு உடன்படிக்கையை கேலிக்கூத்தாக்குவதாகவே இருக்கமுடியும்.
மேற்கு நாடுகள் பலவும் கூட ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டுக்கு ஆதரவான நிலைப்பாட்டைத் தான் எடுத்திருக்கின்றன.
இதனை நேரடியாகவே சொல்வதில் உள்ள சிரமம் காரணமாகத் தான் சுற்றிவளைத்து தனது கருத்துக்களை அமெரிக்க தூதுவர் முன் வைத்திருக்கின்றார்.
அண்மையில் யாழ்ப்பாணத்தில் மணிக்கூட்டுக் கோபுரத்தை திறந்து வைத்து உரையாற்றிய பிரித்தானிய தூதுவரும் "சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான தருணம் இப்போது வந்துவிட்டது" எனக் கூறியிருந்தார்.
அதாவது விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை நிறைவேற்றப்படுவதையிட்டு கவலைப்படாமல் பேச்சுவார்த்தை மேசைக்கு செல்லவேண்டும் என்பதற்கான அழுத்தமாகத் தான் இதுவும் அமைந்திருந்தது.
விடுதலைப் புலிகளை உடனடியாகப் பேச்சுக்கு வரச் செய்யவேண்டும் என ராஜதந்திர ரீதியில் ஸ்ரீலங்கா அரசு முன்னெடுத்துள்ள நடவடிக்கையின் பிரதிபலன் தான் இது.

## தாமதமடையும் பேச்சுக்கள் ஆகஸ்ட்டில் நடைபெறுமா?

சமாதானப் பேச்சுக்களை விரைவாக ஆரம்பித்துவிடவேண்டும் என அரசாங்கம் விரும்புவதன் பின்னணி தான் இந்த நடவடிக்கை .
கடந்த கால யுத்தச் செலவுகளால் பெருமளவு நிதிப்பிரச்னையை ஸ்ரீலங்கா அரசாங்கம் எதிர்நோக்கியுள்ளது.
இதற்காக வெளிநாட்டு உதவிகள் பெருமளவுக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
ஆனால் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகி முன்னெடுக்கப்படும் போது தான் இந்த உதவிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.
பேச்சுக்கள் தாமதமாகும் நிலையில் இந்த உதவிகளைப் பெற்றுக்கொள்வது சாத்தியமானதல்ல.
அதேவேளையில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் நிறைவேற்றப்படவேண்டிய அம்சங்களை நிறைவேற்றுவதில் படைத்தரப்பு முட்டுக்கட்டையாக நிற்கின்றது.
இந்தப் பின்னணியில் தான் புரிந்துணர்வு உடன்படிக்கையை நிறைவேற்றாமலேயே பேச்சுக்களைத் தொடங்கிவிடவேண்டும் என ஸ்ரீலங்கா அரசு அவசரப்படுகின்றது.
ஸ்ரீலங்கா அவசரப்படுவதைப் புரிந்து கொள்ளமுடியும்.
ஆனால் அமெரிக்கா, பிரித்தானியா என்பன ஏன் அவ்வாறான ஒரு நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்? அதனைத் தான் தமிழர்களால் புரிந்து கொள்ளமுடியவில்லை.

---


# இப்படியும் நடக்கிறது

லண்டனில் அந்த நண்பரின் வீட்டு அழைப்பு மணியை அழுத்திவிட்டு காத்திருந்தேன்.
யாரும் கதவைத் திறப்பதாக இல்லை.
சிலவேளை வெளியே போய்விட்டார்கள் போலும் என்று எண்ணியவனாக திரும்புவதற்கு தயாரானபோது அவர் கதவைத்திறந்தார்.
ஏதோ விபரீதம் நடந்துவிட்டது என்பது புரிந்தது.
அவரது தாயார் ஊரில் மிகவும் வருத்தமாக இருப்பதாக அண்மையில் அவர் கூறியது ஞாபகம் வந்தது.
அவருக்கு ஏதும் நடந்திருக்குமோ என்று எண்ணியவாறு அவர்கள் வீட்டுக்குள் கால் பதித்தேன்.
"என்ன... அம்மாவுக்கு ஏதும்..."
எனக்கு எப்படிக் கேட்பது என்று புரியவில்லை.
அவரை எப்படிச் சமாதானப்படுத்துவது என்றும் புரியவில்லை.
அவர் விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தார்.
யாரும் அவரை சமாதானப்படுத்த முடியாது போல இருந்தது.
"என்ன... என்ன நடந்தது" என்றேன்.
அப்போது தான் கண்களைத்துடைத்துக்கொண்டு அவர் கூறினார்.
"இங்கிலண்ட் மச்சிலை தேத்துப்போயிற்றுது..."

-ஊர்க்குருவி

கொழும்பு றிப்போர்ட்

# புலிகளுடன் முரண்டுபிடிக்கும் சிறிலங்கா படைத்தரப்பு



தனஞ்சயன்

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கான இடம் மட்டுமே முடிவு செய்யப்பட்டுள்ளதே த்விர நாள், நேரம் என்பவை பற்றி இன்னும் எதுவும் தீர்மானிக்கப்படவில்லை.
இந்நிலையில் அரசுக்கும் புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு வேட்டு வைக்கும் நிகழ்வுகள் ஆங்காங்கே தலைகாட்டி வருகின்றன.
ஏற்கனவே கிழக்கில் வாகரை கடற்பரப்பில் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே மோதல் ஒன்று வெடிக்கும் அபாயம் இருந்தது. ஆனால் பின்னர் யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்களின் தலையீட்டினால் அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறாது தவிர்க்கப்பட்டது.
இதன் பின்னர் கடந்த வாரம் யாழ். குடாநாட்டில் வேலணைப் பகுதியில் கடற்படையினர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவரைக் கடுமையாகத் தாக்கி அட்டகாசம் புரிந்திருந்தனர்.
புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து தமிழீழ விடுதலைப்புலிகள் தமது காரியாலயங்களை ஒன்றன்பின் ஒன்றாகத் திறந்து வருகின்றனர். மக்கள் மத்தியிலும் இந்தக் காரியாலயங்கள் பிரபலமாகி வருகின்றன. யாழ்.குடாநாட்டின் தீவுப்பகுதியில் புலிகளின் காரியாலயங்கள் திறக்கப்படுவது தொடர்பாக முன்பு சர்ச்சை நிலவியது.
கடற்படையினர் யாழ்ப்பாணம் தீவுப் பகுதியை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்து வருகின்றனர்.
இங்கே புலிகள் அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க இரு வாரங்களுக்கு முன்னர் பிரவேசித்த போது கடற்படையினர் அவர்களை அனுமதிக்கவில்லை. பின்னர் அமைச்சர் மிலிந்த மொறகொட நேரடியாக காரைநகர் கடற்படை முகாமுக்குச் சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்தார்.
இதனையடுத்து புலிகள் தீவுப்பகுதிகளுக்குச் சென்று அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க அனுமதியளிக்கப்பட்டது.
வேலணையிலும் புலிகளின் காரியாலயமொன்று திறந்துவைக்கப்பட்டது.
இக்காரியாலயமே கடந்த வாரம் தாக்குதலுக்குள்ளானதுடன் இங்கிருந்த புலிகள் இயக்க உறுப்பினர் செம்மணன் தாக்கப்பட்டிருந்தார்.
இச்சம்பவம் குறித்து புலிகள் தமது ஆட்சேபனையை யுத்த நிறத்த கண்காணிப்பாளர்களுக்கும் அரசுக்கும் அறிவித்திருந்தனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இது விடயம் தொடர்பாக பூரண விசாரணையொன்றுக்கும் உத்தரவிட்டுள்ளார்.
தற்போது நிலைமை கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளதுடன் கடற்படையினரும் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர். புலிகளது வளர்ச்சியையும் அவர்கள் மக்கள் மத்தியில் பிரபலமாகி வருவதையும் பொறுக்கமுடியாதவர்களாகவே ஆயுதப்படையினரில் ஒரு சாரார் இருந்து வருகின்றனர்.
அரசியல் நடவடிக்கைகளுக்குத் துணை போகவேண்டிய படையினர் சுமுகமான தற்போதைய யுத்த நிறுத்த நிலவரத்துக்கு குந்தகம் விளைவிப்போராகவே இருக்கின்றனர்.
இதேவேளை புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் கடந்த பத்துவருடங்களுக்கும் மேலாக வடக்கு கிழக்கு பிரதேசங்களில் படையினர் நிலை கொண்டிருந்தனர். கோவில்கள், பாடசாலைகளிலிருந்து தற்போது முழு அளவில் வெளியேற ஆரம்பித்துள்ளனர்.
500க்கும் அதிகமான பாடசாலைகள் மற்றும் கோவில்கள், தேவாலயங்கள் போன்றவற்றில் படையினர் நிலை கொண்டிருந்தனர். இதன் காரணமாக கல்வி நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டதுடன் மக்கள் யுத்த பீதியுடன் வாழும் நிலையும் ஏற்பட்டிருந்தது.
படையினர் தற்சமயம் வெளியேறி வரும் பாடசாலைகள்,கோவில்கள் என்பவை பெரிதும் பாதிப்படைந்து பாவனைக்குதவாதவையாக இருந்து வருகின்றன. சில பாடசாலை வளவுகளில் கண்ணிவெடி அபாயமும் காணப்படுகின்றது.
அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வொன்றில் சுமார் 50க்கும் அதிகமான வடக்கு கிழக்கு பாடசாலை வளவுகளில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே யுத்தத்தின்போது மட்டுமல்ல, வடக்கு கிழக்கில் படையினரின் பிரசன்னம் முழு அளவில் சமூக பொருளாதார ரீதியாகப் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியதாகவே இருக்கின்றது.
இத்தகைய வெளியேற்றம் மற்றும் புலிகளின் முழு அளவிலான அரசியல் பிரவேசம் என்பவற்றை சகிக்கமுடியாத நிலையிலேயே படைத்தரப்பு இருந்து வருகின்றது.
ஆயினும் ஆயுதப்படையின் உயர் தளபதிகள் அரசியல் ரீதியான தீர்வையே வலியுறுத்துவோராக இருந்து வருகின்றனர்.
இராணுவ நடவடிக்கைகள் மூலமாக தீர்வொன்றை எட்டமுடியாதென்பதே அவர்களின் கருத்தாகும். இனிவரும்மாதங்களில் படைத்தரப்பில் முக்கிய மாற்றங்கள் சிலவும் இடம்பெறவுள்ளன. முப்படைகளின் பிரதம தளபதியாக இருந்த ஜெனரல் றோகான் தலுவத்த தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.
இவரையடுத்து வேறு சிரேஷ்ட படைத் தளபதிகளும் முப்படைகளிலிருந்து ஓய்வு பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே ஒரு புதிய இளஞ்சந்ததி முப்படைகளிலும் தலைமைப் பதவிகளுக்கு வருவதையே அவதானிக்கமுடிகின்றது.
இச்சந்ததியை உரிய விதத்தில் கட்டுக் கோப்பில் வைத்திருக்க வேண்டியதே ஆட்சியாளரது பொறுப்பாகின்றது.
ஏனெனில் நீறுபூத்த நெருப்பாகவும் ஒரு எரிமலை உறங்குவது போலவுமே தற்போதைய யுத்த நிறுத்தம் இலங்கையில் கடந்த ஆறுமாதகாலமாக இருந்து வருகின்றது.
எனவே படைத்தரப்பு மிகுந்த அவதானமாக இருக்கவேண்டியதே அவசியமானதாகின்றது.
தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்துக்கு முன் வந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் அரசுடன் செய்து கொண்டுள்ளனர். இந்த ஒப்பந்தம் முழு அளவில் அமுலாக்கப்படுவதன் மூலமே அடுத்த கட்ட நடவடிக்கையாகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடமுடியுமென புலிகள் கருதுகின்றனர். இந்நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அமுலாக்கத்துக்கு புலிகள் வழங்கும் ஒத்துழைப்பைப் போலவே படைத்தரப்பும் தனது ஒத்துழைப்பை பரிபூரணமாக வழங்க வேண்டியதாகின்றது.
இது இவ்வாறிருக்க இதுவரை காலமும் தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்துக் கடும் போக்கைக் கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணி தற்போது தனது நிலைப்பாட்டை தளர்த்தி வருவதையே அவதானிக்கமுடிகின்றது.
சந்திரிகாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த வாரம் கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தியிருந்தார். அம்மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதில் தமது தரப்புக்கு ஆட்சேபனை இல்லை என அவர் குறிப்பிட்டிருந்தார்.
இக்கருத்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கையில் அரசியல் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டியதன் அவசியத்தை முக்கிய அரசியல் சக்திகள் உணர்ந்து வருவதையே அறியமுடிகின்றது.

# வியுக்தியார் பதில்கள்

**அருந்தி சுப்பிரமணியம், பாரிஸ், பிரான்ஸ்**

வியுகதியாரே!
பேனா பிடிப்பவர்கள் எல்லோரும் பத்திரிகையாளர்கள் ஆகிவிடமுடியுமா?

பதில்: பேனா பிடிப்பவர்கள் எல்லாரும் பத்திரிகையாளர்கள் என்று சொல்லிக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் வெளியிடுகின்ற பத்திரிகைகளை மக்கள் படிக்கவேண்டுமே. மக்கள் அவற்றைப் படிக்கின்றார்கள் என்றால் அவர் பத்திரிகையாளர் என்று நீங்கள் ஏற்றுக்கொள்ளலாம். அப்படி ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அந்தப் பத்திரிகையை படிக்கின்ற எல்லோரையுமே கேலிசெய்வதாக அல்லவா ஆகிவிடும்.

**சி. யோகநாதன் சூரிச், சுவிற்சர்லாந்து**

வியுக்தியாரே,
இதுவரை எந்த இடத்திலும் கேள்விப்படாத புதிய புதிய பெயர்களில் எல்லாம் முஸ்லிம்கள் மத்தியிலிருந்து இயக்கங்கள் உருவாகின்றனவே. இதன் மர்மம் என்னவாக இருக்கும்?

பதில்: இதில் என்ன மர்மம் இருக்கின்றது. சமாதானத்தைக் குழப்புவதற்கு விரும்புகின்ற சக்திகள் முஸ்லிம்கள் என்ற போர்வையில் குழப்பத்தை ஏற்படுத்துகின்றார்கள். எப்படியாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆத்திரப்படுத்தி அவர்களை போருக்கு இழுப்பதுதான் நோக்கம் என்பது தெரிகின்றது. புலிகள் இயக்கத்தை சீண்டிப்பார்க்கின்றார்கள் அவ்வளவுதான். ஆனால் அவர்களுக்கு இது நன்கு புரிந்திருப்பதால் இவர்களின் பாச்சா பலிக்காது.

**சிவபாலன் செல்வநாயகம், பேர்லின், ஜெர்மனி**

வியுக்தியாரே,
நானும் ஒரு கவிஞராக வேண்டும் என்று விரும்புகின்றேன். ஏதாவது யோசனை சொல்லுங்களேன்.

பதில்: அட இதுக்குப்போய் யோசிக்கின்றீர்களா? சில கம்யூனிச புத்தகங்களைப்படித்து அதில் வரும் பெயர்களை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். பழைய கவிதைகளில் சிலவற்றை எடுத்து அங்கும் இங்கும் மாற்றுவதற்கு தெரிந்துகொள்ளுங்கள். இவை மட்டும் இருந்தால் போதாது. உங்களையே புலம்பெயர் மண்ணின் சிறந்த கவிஞர் என்று சொல்லுவதற்கு சில பெண்களை அணி சேர்த்துக்கொள்ளுங்கள். ஏனெனில் இப்போது பெண்கள் சொன்னால்தான் சமுதாயத்தில் மதிப்பு இருக்கின்றது.
பிறகு என்ன நீங்கள் தான் புலம்பெயர் இலக்கிய உலகில் தலைசிறந்த கவிஞர்.

**தர்மலிங்கம் சுதன், ஹவுன்சிலோ, லண்டன்**

வியுக்தியாரே,
டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா ஒரு வாரத்திற்கும் மேலாக தமிழகத்தில் தங்கியிருந்து அப்படி எனன்தான் செய்கின்றார்?

பதில்; அவர் தமிழ் மக்கள் மீது மிக கருசனையுள்ள மனிதராகவே தன்னை கடந்த காலங்களில் இனம்காட்டியவர்.இதனால் அவர் நம்மீது அக்கறை உள்ளவர் என்பதே எல்லோருடைய கணிப்பும்.
தமிழகத்திலுள்ள அகதிகளை திருப்பி அழைப்பது குறித்து பேசுவதற்காகவே அவர் போயுள்ளதாக கூறப்படுகின்றது. ஆனால் எனக்கு என்னவோ அப்படித் தெரியவில்லை. என்னவோ நடக்குது மர்மமாய் இருக்குது... என்ற பாடல்தான் ஞாபகத்திற்கு வருகின்றது.

**கண்ணன், பெர்லின், ஜெர்மனி.**

வியுக்தியாரே,
சில மனிதர்கள் ஏன் அடுத்தவர் வாழ்க்கையில் நுழைந்து கெடுதல் செய்துகொண்டே இருக்கின்றார்கள்?

பதில்: அவர்களுக்கு என்று ஒரு வாழ்க்கை இருந்தால்தானே அவர்களுக்கு வாழ்க்கை என்றால் என்னவென்று தெரியும்.
தன்னிடம் இல்லாதது மற்றவனிடத்திலும் இருக்கக்கூடாது என்பதுதான் அவர்கள் நினைப்பு என்றே கருதவேண்டியிருக்கின்றது. மனைவியை இழந்தவனுக்கு மற்றவன் ஜோடியாகப் போவது பிடிக்காது என்பார்களே அதுபோலத்தான்.

# ஈழத்துப் புலமை தமிழ் உலகில் புகழ்பூக்க......



மறவன்புலவு
க. சச்சிதானந்தன்
ஐ.நா. முன்னாள் ஆலோசகர்.

ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்நாட்டுக்கு வந்து, தன் கவிதைகளை அரங்கேற்றினார். சங்கப் பாடல்களுள் பதினொரு இடங்களில் அவரது பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அவர் காலத்திலும் பின்பும் வாழ்ந்து மறைந்த பல நூற்றுக் கணக்கான ஈழத்துப் படைப்பாளிகளின் சிறந்த ஆக்கங்கள் தமிழ் உலகுக்குத் தெரியுமாறு வெளி வரவில்லை.

யாழ்ப்பாணம் சின்னத்தம்பிப் புலவர் திருமறைக் காட்டின் அருள்மிகு வேதாரணிய ஈஸ்வரர் கோயிலைப் பாடிய மறைசை அந்தாதி சிறந்த பிரபந்த இலக்கியம். எனினும் தமிழ் உலகில் அவ்விலக்கியம் பற்றி அறிந்தவர்களும், பேசுபவர்களும் ஈழத் தமிழர்களாகவே இருப்பர்.

யாழ்ப்பாணத்தில் நல்லூர் ஆறுமுகநாவலர் தமிழ் நாட்டில் பதிப்பு முயற்சிகளை மேற்கொண்டார். முப்பதுக்கும் மேற்பட்ட அரிய நூல்களை வெளியிட்டார். சென்னையை நடுவணாகக் கொண்டு இவரது பதிப்பு முயற்சிகள் அமைந்ததால், தமிழ் நாட்டு அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்தார். நாவலரின் நாவன்மையையும், உரைநடை வளத்தையும், பதிப்பு வன்மையையும் போற்றாத தமிழர்கள் குறைவு.

இவரையொட்டியே சி. வை. தாமோதரம் பிள்ளையும் சென்னையைப் பதிப்புக் களமாகக் கொண்டார்.

வைமன் கதிரவேற்பிள்ளையின் அகாராதிகளை மதுரைச் தமிழ்ச் சங்கம் வெளியிட்டதால் தமிழ் உலகம் அவரைத் தெரிந்துக் கொண்டது.

காசி வாசி செந்திநாத ஐயர், தென்புலோலியூர் கதிரவேற்பிள்ளை போன்றோர்கள் தமிழகத்தில் தம் பதிப்புகளை வெளியிட்டதால் நன்றாக அறியப்பட்டனர்.

சுவாமி ஞானப்பிரகாசரையோ, கல்லடி வேலுப்பிள்ளையையோ, மட்டுவில் ம. க.வேற்பிள்ளையையோ, ம.வே.திருஞான சம்பந்தரையோ, வித்துவான் கணேசையரையோ, பண்டிதமணி கணபதிப் பிள்ளையையோ சு. சிவபாதசுந்தரநாரையோ தமிழ் உலகு முழுமையாக அறியவில்லை. புலமையிலும், திறமையிலும் ஒப்பாரும் மிக்காரும் இல்லா இவர்களைப் போன்ற பலரைத் தமிழ் உலகு அறியாததற்குக் காரணம் இவர்களின் பதிப்புகள் ஈழத்துக்குள் முடங்கியதுதான்.

சுவாமி விபுலானந்தரின் தமிழக வாழ்வும், பதிப்பு முயற்சியும், தஞ்சாவூரில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் யாழ் நூல் அரங்கேற்றமும் தமிழுலகின் மிகச் சிறந்த புலமையாளருள் ஒருவராக அவரைக் கணிக்க உதவின. தனிநாயாக அடிகள் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டைச் சென்னையில் நடத்த முன்பே, தமிழக அறிஞர்களுக்குப் புலப்பட்டவர். தமிழ் உலகின் கணிப்பைப் பெற்றவர். அதற்குக் காரணம் தூத்துக்குடி மறை மாவட்டத்தின் பங்குத் தந்தைகளுள் ஒருவராக அவர் இருந்து தமிழ் நாட்டில் தன் புலமையை வெளிக் காட்டியதுதான்.

ஈழத்துப் பூதந்தேவனார் முதல் தனிநாயக அடிகள் வரை ஈழம் உற்பவித்த சிறந்த சிந்தனையாளர்கள், புலமைப் பெட்டகங்கள், திறமைக் கொழுந்துகள் பற்பலருள் மிகச் சிலரையே தமிழுலகு அறிந்தமைக்குக் காரணம், தமிழ் நாட்டின் புலமைக் களத்துள் புகுந்து புலப்படும்படி அவர்கள் மிதந்தமையே.

தமிழ் நாட்டில் வெளியான நூல்கள் ஈழத்துக்கு வந்து சேரும் அளவுக்கும், விகிதாசாரத்திற்கும் ஏற்ப ஈழத்து வெளியீடுகள் தமிழ் நாட்டிற்குள் வராதது இதற்குரிய அடிப்படைக் காரணங்களுள் ஒன்று.

தமது தரமான வெளியீடுகளைத் தமிழ் நாட்டுக்கு அனுப்ப முடியவில்லையே! தமிழ் நாட்டுப் புத்தகச் சந்தைக்குள் புக முடியவில்லையே! என்ற ஆதங்கம் ஈழத் தமிழ்ப் புலமையாளர்களுக்கு நெடுங் காலமாகவே உண்டு. இந்த ஆதங்கத்தின் வெளிப்பாடாக 1971-1977 கால ஆட்சியில் கி.லட்சுமண ஐயர் தலைமையில் க. கைலாசபதி கா. சிவத்தம்பி, பிரேம்ஜி உள்ளிட்ட முற்போக்கு எழுத்தாளர் அமைப்பு, தமிழ் நாட்டில் வெளியாகும் 'குப்பை - கூளங்கள்' ஈழத்திற்குள் வருவதற்குத் தடைகளும் கட்டுப்பாடுகளும் அமைக்க விதந்துரைத்தது. அவர்களின் விதந்துரையைக் கொழும்பு அரசு ஏற்று நடைமுறைப்படுத்தியது.

இதன் பெறுபேறாக ஈழத்துப் படைப்பாளிகளின் ஆக்கங்கள் பெரிதும் ஈழத்திலே வெளி வந்தன. ஈழத்துப்படைப்பாளிகள் வீரகேசரியின் மாதமொரு நாவல் திட்டத்தின் கீழும், பிற பதிப்பாளர்களின் திட்டங்களின் கீழும் பல நூல்களை இக்காலத்தில் வெளிக் கொணர்ந்தனர். குடத்தில் இட்ட விளக்காகவே இவ்வெளியீடுகள் ஈழத்துள் முடங்கின.

க. கைலாசபதியும், கா. சிவத்தம்பியும், கி. இலட்சுமண ஐயரும், செ. கணேசலிங்கனும் தமிழ் நாட்டில் பதிப்பகங்களை அணுகித் தமது நூல்களை வெளியிட்டு வந்தனர். தமது சக படைப்பாளிகளுக்குத் தமிழ் நாட்டில் பதிப்புக் களம் அமைத்துக் கொடுத்தார்களா என்ற வினா இப்பொழுதும் கேட்கப்படுகிறது. 1980க்குப் பின் காந்தளகமும், 1990க்குப் பின் குமரன் பதிப்பகம், மித்ரா பதிப்பகம் ஆகிய பதிப்பகங்களும் தமிழ் நாட்டில் ஈழப் புலமைப் படைப்பாளிகளுக்கு பதிப்பரங்குகளாகின. 1983க்குப் பின் தமிழகத்திற்குப் புலம்பெயர்ந்த ஈழத்துப் படைப்பாளிகளுக்குத் தமிழகத்தின் புகழ் பெற்ற பதிப்பகங்கள் ஆதரவு கொடுத்தன.

கடந்த சில ஆண்டுகளாக மணிமேகலை பிரசுரம் புலம் பெயர்ந்த தமிழ்ப் படைப்பாளிகள் எந்த நாட்டில் இருந்தாலும் அவர்களது ஆக்கங்களை வெளியிடுவதற்கான திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தி ஆண்டொன்றுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட தலைப்புகளில் ஈழத்துப் படைப்பாளிகளின் நூல்களை வெளியிட்டு வருகிறது. இத்தகைய முயற்சியை இதுவரை வேறெந்தப் பதிப்பகமும் மேற் கொள்ளவில்லை.

ஈழத்துப் படைப்பாளிகள் தத்தம் இடங்களிலேயே வெளியிடும் நூல்களை தமிழகச் சந்தைக்கும் அனுப்பக்கூடிய வாய்ப்பை 1977 முதல் இலங்கை அரசுக்கு எடுத்துக் கூறினோம். இலங்கை-இந்திய வணிகக் கொடுக்கல்-வாங்கல் இந்தியாவிற்குச் சாதகமாகவே எப்பொழுதும் இருக்கும்.

இந்திய ஏற்றுமதி அதிகமாகவும், இலங்கை ஏற்றுமதி குறைவாக இருக்கும்போது இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய புதிய பொருட்கள் என்ன என்ற வினா கொழும்பில் எழுந்தது?

நானும் தி. ச. வரதராசனும் க. கைலாசபதியும், க. ஜீவகதாசும் மற்றும் சில படைப்பாளர் நண்பர்களும் 1978இல் யாழ்பாணத்தில் ஒருநாள் கூடினோம். தமிழ் நூல்களையும், இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருளாகக் கருதுமாறு ஒரு தீர்மானம் இயற்றினோம். தமிழர் பொருளாதார இயக்கம் சார்பாக அத்தீர்மானத்தை அப்பொழுது வர்த்தக அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலிக்கு அனுப்பினோம். நாளிதழ்களில் செய்தி ஆகவும் இத்தீர்மானம் வெளி வந்தது. கொழும்பு அரசுக்கு அதில் ஆர்வம் இருக்கவில்லை.

தமிழ் நாட்டில் வெளியாகும் தமிழ் நூல்களை இலங்கையில் இப்பொழுது பெருந் தொகையாக வாங்கத் தொடங்கியுள்ளார்கள். உள்ளூராட்சி அமைப்புகள், மாகாண அவைகள், கொழும்பு அரசின் அமைச்சுகள் நூலகங்களுக்குப் பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்கின்றன. உதவியாகவும் மறுசீரமைப்புத் திட்டங்களின் கீழும் இலங்கைக்கு வெளிநாடுகள் நிதி வழங்குகின்றன. உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் நூலக வளர்ச்சிக்குக் கடன்கள் வழங்கி வருகின்றன.

இவ் ஒதுக்கீடுகளில் கணிசமான பகுதியை ஒவ்வொரு நிலையிலும் தமிழ் நூல்களைக் கொள்வனவு செய்யத் தருகிறார்கள்.

பல நூலகங்கள் முழுமையாக இவ் ஒதுக்கீடுகளைத் தமிழ் நூல்களுக்காகச் செலவு செய்வதில்லை.

சில அலுவலகங்களில் ஏனோதானோவெனவும் திட்டமிடாமலும் தமிழ் நூல்களை வாங்குகிறார்கள். ஒரு தலைப்பையே ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து வாங்கும் நிலையும் உண்டு. நூலகங்களுக்கான தமிழ் நூல் கொள்வனவில் அரசு வழங்கும் நிதி ஒதுக்கீடுகள் ஒருங்கிணைந்த முறையில் பயன்படுவதில்லை.

அண்மையில் தமிழ் அமைச்சர் ஒருவர் என்னுடன் தொடர்பு கொண்டு பல லட்ச ரூபாய்கள் பெறுமதிக்குத் தமிழ் நூல்கள் கொள்வனவு செய்யவேண்டுமெனக் கூறினார். அவரிடம் பின் வரும் செயற் திட்டத்தை எழுதிக் கொடுத்தேன்.

1. கொழும்பு அரசின் தமிழ் நூல் கொள்வனவுக்கான நிதி ஒதுக்கீடுகளைத் திரட்டி தமிழக அரசின் பொது நூலக இயக்குனரிடம் கொடுத்து ஒவ்வொரு தலைப்பிலும் எத்தனை படிகள் வேண்டும் எனக் கூறுதல்.

2. தமிழகத்தில் வெளியாகும் தமிழ் நூல்களை அந்நூல்களில் குறிப்பிட்டுள்ள விற்கும் விலைக்குக் கொளவனவு செய்யாமல், தமிழக அரசின் பொது நூலகத் துறை நிர்ணயித்த விலையான - பதினாறு பக்கப் படிவம் ஒன்றுக்குத் தலா ரூ.2.10பைசா அல்லது ரூ.2.60பைசா என்ற விலை அடிப்படையில் வாங்குதல்.

3. நூல்களைத் தெரிவுசெய்யும் தமிழக அரசின் குழுவில் கொழும்பு அரசின் பிரதிநிதிகள் இருத்தல்.

4. மாற்றாக இலங்கையில் வெளியாகும் ஈழத்தமிழ்ப் படைப்புகள் ஒவ்வொன்றிலும் 850 படிகளைத் தமிழக அரசின் நூலகத் துறை கொள்வனவு செய்தல்.

5.இலங்கை அரசு ஆண்டுதோறும் விளம்பரம் செய்து தமிழகத்தைப் போல இலங்கையிலும் விலை நிர்ணயம் செய்து, குழு அமைத்து, தெரிவு செய்து, வாங்கித் தமிழக அரசுக்கு அனுப்புதல்.

6. இந்த இரு தரப்புத் தமிழ் நூல் கொள்வனவு உடன்பாட்டை இலங்கை-இந்திய அரசுகளின் கூட்டுச் செயற்பாடாக உடன்பாடு எழுதுதல்.

இந்தக் கருத்துகளைக் கொண்ட எனது அறிக்கை இப்போது கொழும்பு அரசின் தமிழ் அமைச்சர் ஒருவரிடம் உள்ளது.

ஈழத் தமிழரின் புலமைத் திறமையும், அறிவு வளமும் தமிழ் உலகெங்கும் பயன்படவேண்டுமெனிலோ அறியப்பட வேண்டுமெனிலோ தமிழகப் புத்தகச் சந்தையில் ஈழத்தில் வெளி வரும் தமிழ் நூல்கள் இடம் பெற வேண்டும்.

இதற்கான முதற்படியே இலங்கை-இந்தியத் தமிழ் நூல் கொள்வனவு ஆகும். ஈழத் தமிழ்ப் புலமைக் கொழுந்துகள் தமிழ் உலகெங்கும் அறியப்படுவதாக.



# இவர்கள் இப்படிச் சொன்னார்கள்

## குறுகிய கால வரையறையில் சமாதானப் பேச்சுக்களை நடத்தி முடித்துவிடவேண்டும்'



- ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம்.பி. அனுரா பண்டாரநாயக்கா மாத்தறையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் ஒருபோதுமே சமாதானப் பேச்சுக்களுக்கு வரமாட்டார்கள். ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாச, சந்திரிகா குமாரதுங்கவை மட்டுமன்றி பிரபாகரன் முழு இந்தியாவையுமே ஏமாற்றியுள்ளார். புலிகளுடனான பேச்சுவார்த்தைகளுக்கு குறுகிய காலவரையறை நிர்ணயிக்கப்படவேண்டும். அந்தக் காலப்பகுதிக்குள் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்துவிடவேண்டும். பிரபாகரன் தனக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுள்ளார். கடந்தகால யுத்தத்தின்போது எதனை அவரால் பெறமுடியாதிருந்ததோ அவற்றையெல்லாம் கடந்த ஆறு மாத காலத்துக்குள் இந்த அரசாங்கத்திடம் இருந்து அவர் பெற்றுக்கொண்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த அரசியலமைப்பு எம்மால் தவறான முறையில் பயன்படுத்தப்படவில்லை. இந்த அரசியலமைப்பை வரைந்தமைக்காக அவருக்கு நன்றி கூறுகின்றோம். எதிர்க்கட்சிகளின் கைகளில் இந்த அரசியலமைப்பு சிக்குமென அவர் ஒருபோதுமே நினைத்திருக்கவில்லை.

## 'புலிகளிடம் மண்டியிட்டு அவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றும் ரணில் அரசு'


Tylvin Silva

- ஜேவிபி பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து இடம் பெற்ற கூட்டத்தில்

அரசாங்கம் தற்போது விடுதலைப் புலிகளிடம் மண்டியிட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றி வருகின்றது. இதனால்அரசியல் மற்றும் பொருளாதாரம் என்பன விடுதலைப் புலிகளிடமே தாரை வார்த்துக் கொடுக்கப்படுகின்றது. நாட்டை இரண்டாகப் பிரிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்கக்கூடாது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை எக்காரணம் கொண்டும் நீக்கப்படக்கூடாது. இந்தத் தேச விரோத நடவடிக்கைகளை அரசாங்கம் நிறுத்தும் வரைக்கும் எமது ஆர்ப்பாட்டங்களும் கண்டனக்கூட்டங்களும் தொடர்ந்தும் நடத்தப்படும். நாட்டின் பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை, அரச நிறுவனங்களைத் தனியார் மயமாக்குதல், விலைவாசி உயர்வு என்பவற்றுக்கு எதிராகவும் தொடர்ந்தும் நாம்குரல் கொடுக்கத் தவறப்போவதில்லை.

## 'தேசிய அரசு அமைந்தால் புலிகளின் ஈழக்கோரிக்கை சாத்தியமற்ற ஒன்றாகிவிடும்'



- பொ.ஜ.மு. கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌஸி பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தது.

தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுமானால் தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழக்கோரிக்கை சாத்தியமற்ற தொன்றாகிவிடும். விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு இணங்கி தமிழீழத்தை அவர்களுக்கு வழங்கமுடியாது. அவ்வாறு வழங்கவும் யாரும் தயாராகவில்லை. அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையேயான நேரடிச் சமாதானப்பேச்சுவார்த்தக்கு முன்பே புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும். மாறாக பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டு பேச்சுவார்த்தைகளின் நிலையைப் பொறுத்தே புலிகள் மீதான தடை நீக்கப்படும் எனக் கூறுவது அர்த்தமற்றது. இன்று எமது நாடு எதிர்கொண்டிருக்கும் அனைத்துப் பிரச்னைகளுக்கும் சிறந்த நிவாரணம் பிரதான கட்சிகள் இரண்டும் இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்துக் கொள்வது தான். இன்றுள்ள ஐதேமு அரசாங்கம் சக்தி வாய்ந்த ஒன்றல்ல என புலிகளின் தலைவரே கூறியிருக்கின்றார். அது உண்மை தான். சக்தி வாய்ந்த அரசாங்கம் ஒன்றை அமைப்பது தான் இன்றுள்ள ஒரே வழி.

## 'கரையோர மாவட்ட அலகை அடையாளம் காணவேண்டும்'

-பிரபல சட்டத்தரணி நிசாம் காரியப்பர் பத்திரிகை ஒன்றில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றிலிருந்து

தாய்லாந்து பேச்சுக்களின் முதற் கட்டமாக வடக்கு கிழக்குக்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைப்பது தொடர்பாக இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுக்களை நடத்தக்கூடும். முஸ்லிம்களின் பிரதிநிதிகளாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அந்தப் பேச்சுக்களின் போது கலந்து கொள்ளும். கொண்டு வரப்படும் இடைக்கால நிர்வாக சபையில் பெயரளவில் மட்டும் முஸ்லிம்கள் கலந்து கொள்ளமுடியாது. இதில் முஸ்லிம்கள் இருந்தால் தான் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தமுடியும். எனவே எமது மறைந்த தலைவர் கூறிய கரையோர மாவட்ட அலகை நாம் உடனடியாக அடையாளம் காணவேண்டும். புலிகளது பிரதேசங்களின் கீழ் முஸ்லிம்களது பிரதேசங்கள் வரக்கூடாது. இவை முஸ்லிம்களின் கீழ் கொண்டு வரப்படவேண்டும்.

## "ஆறு பிரதமர்களுடன் பழகிய எனக்கு அரசியலிலுள்ள நெழிவு சுழிவுகள் நன்று தெரியும்?



-இந்திய ஜனாதிபதி வேட்பாளர் அப்துல் கலாம் பத்திரிகையாளர்களிடையே தெரிவித்த கருத்துக்களிலிருந்து

விஞ்ஞானியான நான் ஜனாதிபதிக்குத் தேவையான அரசியலைக் கற்றுக்கொள்வேன். அரசியல் சட்ட நிபுணர்களின் உதவியுடன் நெருக்கடிக்களுக்குத் தீர்வு காண்பேன். நாட்டின் வளத்துக்கும் பாதுகாப்புக்கும் பாடுபடுவேன். எனக்கு அரசியலில் அனுபவம் இல்லை என்பதை ஒப்புக்கொள்ளமாட்டேன். நான் ஆறு பிரதமர்களுடன் பணியாற்றியிருக்கின்றேன். அதனால் அரசியலின் நெழிவு சுழிவுகள் நன்று தெரியும். மேலும் தெரியாதவைகளை நான் கற்றுக்கொள்வேன். அணு விஞ்ஞானி ஜனாதிபதியானால் அது இந்தியாவை பற்றி உலக்குத் தவறான எண்ணத்தை உருவாக்கும். அது அபாயகரமான சிக்னல் என்ற குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் தொழில் நுட்ப வளர்ச்சியும் நாட்டின் வளர்ச்சியும் பின்னிப் பிணைந்தவை. அவை ஒன்றை யொன்று சார்ந்து இருக்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பம்.

## 'தமிழர்கள் கௌரவத்துடன் வாழும் சூழ்நிலையை ஏற்படுத்துவது தான் நோக்கம்'

- யாழ்.மாவட்ட அரசியற்துறை மகளிர் அணிப்பொறுப்பாளர் தமிழ்விழி வேலணைத்துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில்

தமிழ் மக்கள் கௌரவத்துடன் வாழக்கூடிய ஒரு சூழல் பேச்சுமூலம் எட்டப்படுவதையே விடுதலைப் புலிகளாகிய நாங்கள் விரும்புகின்றோம்.

நீண்ட இடைவெளியின் பின்னர் நாங்கள் உங்களைச் சந்திக்கின்றோம். இங்குள்ள நிகழ்வுகளை நாம் பார்க்கும் போது இந்த மக்கள் எப்பொழுதும் நீதியின் நேர்மையின் பக்கமே உள்ளார்கள் என்பதை அறிய முடிகின்றது. ஒட்டு மொத்த தமிழ் இனத்தின் பாதுகாப்பு அரணாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ள னர். யாழ்கோட்டையில் கொடியை ஏற்றும்போது ரத்வத்தை கூறினார் "85 வீதமான புலிகளை அழித்து விட்டோம். மிகுதி 15 வீதமான புலிகளை விரைவில் அளிப்போம் என்று. நாம் யாழ்.குடாநாட்டில் அரசியல் பணிகளை ஆரம்பிக்கும் பொருட்டு உள்ளே வருவதற்காக முகமா லையில் காத்து நின்றபோது இராணுவ அதிகாரி ஒருவர் எங்கே அந்த 18 பேரும் ஏனெனில் அந்த 18 பேரும் இங்கு வந்தால் யாழ்.குடாநாட்டில் 90 வீதமான பிரச்னைகள் தீர்ந்துவிடும் என்றார்.

# கடிக்க....

அரசியல்வாதிகளுக்கு சில சமயங்களில் என்ன பேசுகின்றோம்? ஏன் பேசுகின்றோம்? என்பதெல்லாம் தெரியாமல் போய்விடுகின்றது. முஸ்லிம்களின் உரிமைகளுக்காகப் போராடும் அந்த அமைப்பின் தலைவர் கல்முனையில் நிகழ்த்திய உரை சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது. சமரச முயற்சிகளுக்கு சொல்ஹெய்மோ அல்லது அவரது நாடோ தேவையில்லை. அதனை நாமே (முஸ்லிம்களே) மேற்கொள்ளமுடியும் என அவர் முழங்கியிருக்கின்றார். சமரச முயற்சியை முஸ்லிம்கள் முன்னெடுக்கலாம் என்றால் பிரச்னை சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே மட்டும் தான். முஸ்லிம்களுக்கு எந்தவிதமான பிரச்னையும் இல்லையெனத் தானே காட்டுகின்றது என அவரது எதிராளிகள் விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர். புலிகளுடன் ஏற்பட்டுள்ள நெருக்கத்தைக் காரணமாக வைத்து இந்தளவுக்குப் பேசப்போய் விமர்சனங்களை எதிர்கொள்ளவேண்டிய நிலை தலைவருக்கு. "நாகாக்க" என்பதன் அர்த்தத்தை யாரில்லா விட்டாலும் அரசியல் தலைவர்கள் கட்டாயம் புரிந்து வைத்திருக்கவேண்டும்.

தலைவர்களின் இறுதிச்சடங்குகளின்போது இரங்கலுரைகள் இடம் பெறுவது வழமை தான். இதில் கலந்து கொள்ள வரமுடியாத தலைவர்கள் அனுதாபச் செய்திகளை அனுப்பிவைப்பதும் வழமை தான். தலைவர் சிவாவின் இறுதிச்சடங்கின்போதும் இப்படித் தான் நடைபெற்றது. உயர்மட்டத்திலிருந்து இவ்வாறு ஒரு செய்தி வந்திருந்தது. செய்திகளை வாசிக்கும் பொறுப்பை எப்போதும் எதிலும் முன்னால் நிற்கவேண்டும் என விரும்பும் சங்கரியாரே ஏற்றிருந்தார். செய்தியில் வேண்டும் என்றோ தெரியாது சிவா உயிர் தப்பிய அந்தச் சம்பவம் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டிருந்ததாம். சங்கரியார் அவற்றையெல்லாம் தணிக்கை செய்து தான் வாசித்தார். பின்னர் குறிப்பிட்ட உயர்மட்டத்தையும் எப்படிச் சமாளித்தார் என்பது தான் தெரியவில்லை. ஆனந்தியாருக்குத் தெரியாத சமாளிப்பா?

அரசியல்வாதிகள் உணர்ச்சிவசப்படுவது வழமை தான். ஆனால் பத்திரிகை காரியாலயம் ஒன்றுக்குள் நுழைந்து பத்திரிகையாளர்களை மிரட்டும் அளவுக்கு போனால் என்ன நடக்கும் என்பதை அவர்கள் புரியாமல் இருப்பது தான் வேடிக்கை. கடந்த வாரம் கொழும்பில் கூட்டணிக்குள் இடம்பெறும் குத்துவெட்டுக்கள் பற்றிய செய்தியால் ஆத்திரமடைந்த எம்.பி.யும் முன்னாள் மேயருமான அந்த இளைஞர் குறிப்பிட்ட பத்திரிகை காரியாலயத்துக்குள் சென்று அட்டகாசம் புரிந்துள்ளார். பின்னர் அது பற்றி வெளியான செய்திகளால் என்ன செய்வது எனத் தெரியாமல் தடுமாறத் தொடங்கியுள்ளார். கட்சியிலுள்ள அவருக்கு எதிரான சக்திகள் இதனை தமது பிரச்சாரத்துக்குப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். மக்கள் ஆணை கேட்ட கூட்டமைப்பினர் இப்போது அரசுடன் ஒட்டி உறவாடி நலன்களை அனுபவிப்பதிலும் வெளிநாடுகளுக்கு உல்லாசப் பயணங்களை மேற்கொள்வதிலும் தான் அக்கறையாக உள்ளனர் என எழுதியிருந்தமை தான் அவருக்கு ஆத்திரத்தைக் கிளறியதாம். பின்னையென்ன பதவியேற்று ஆறு காலத்துக்குள் சில மாத காலம் எம்.பி. பதவியால் பெற்ற பலனைக் காட்டி பல மாதம் வெளிநாடுகளுக்கு உல்லாசப்பயணம் சென்ற அவருக்கு இது ஆத்திரத்தை ஏற்படுத்தும் தானே?

பத்திரிகைச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கான சட்டமூலம் ஒன்று கடந்த வாரம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அனைத்துக் கட்சி எம்.பி.க்களும் இதற்கு ஆதரவாகத் தான் வாக்களித்திருக்கின்றார்கள். ஆனால் உண்மையில் இந்தச் சட்டமூலம் நடைமுறைக்கு வருவதையிட்டு எம்.பி.க்கள் அனைவருக்குமே உள்ளுக்குள் கலக்கம் தானாம். தம்மைத் தாக்குவதற்கான ஆயுதத்தை எதிரியிடம் தூக்கிக்கொடுப்பது போன்ற ஒரு நிகழ்வு தான் இது. ஆனால் என்ன செய்வது?

# யுத்த முன்னெடுப்பு முயற்சியில் சமாதான செயலகம்?

கடற்படைக்குத் தேவையான ஆயுதங்களும் உபகரணங்களும் கொள்வனவு செய்வதற்காக அண்மையில் சீனாவுக்குச் சென்ற குழுவில் பேர்னாட் குணதிலகவும் ஒருவர். இவர் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளராகவும் இருக்கின்றார்.



பாதுகாப்பு அமைச்சரின் தலைமையில் இக்குழு சீனாவுக்குச் செல்வதற்கு முன் இன்னொரு மூவர் குழு இக்கொள்வனவு தொடர்பான ஆரம் நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

இந்தக் குழுவிலும் பேர்னாட் குணதிலக ஒருவர். முன்னாள் கடற்படை அதிகாரி ரியர் அட்மிரல் டி.கே. தஸநாயகவும் கடற்படையில் வெளிநாட்டுக் கொள்வனவுகளுக்குப் பொறுப்பான அதிகாரியான டபிள்யு விஜேமான்னவும் மற்றைய இருவர்.

பேர்னாட் குணதிலக சமாதானச் செயலகத்தின் பணிப்பாளராக இருக்கும் அதே நேரம் சீனாவுக்கான இலங்கைத் தூதுவராகவும் இருப்பதால் இவ்விடயத்தில் இவரே பிரதான பாத்திரம் வகித்தவர். முன்னரும் சீனாவிலிருந்து ஆயுதங்கள் இறக்குமதி செய்ததில் இவரே முக்கிய பாத்திரம் வகித்தவர்.

சமாதான செயலகத்தின் பணிப்பாளர் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் அக்கறை செலுத்துவதற்குப் பதிலாக யுத்தத்தை முன்னெடுப்பதற்காக செயற்பாடுகளிலேயே கூடுதலான அக்கறை செலுத்துகின்றார்.

இவர் தான் இப்படியென்றில்லை. அமைச்சர் மிலிந்த மொறகொடவும் இதைத்தான் செய்கிறார்.

இந்த அமைச்சர் சமாதானம் பற்றிப் பெரிதாகப் பேசுகிறார். பத்திரிகைகளுக்கு சமாதானத்தை வலியுறுத்தி அறிக்கைகள் விடுகின்றார். ஆனால் யுத்தத்துக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படுகிறார்.

மூன்று வருடங்களுக்குப் போதுமான ஆயுதங்களை அரசாங்கம் கொள்வனவு செய்யவிருக்கின்றது.

ஒரு புறத்தில் சமாதானம் பேசிக்கொண்டு மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக யுத்தம் புரிவதற்குத் தேவையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதிலிருந்து அரசாங்கம் எவ்வளவு விசுவாசத்துடன் சமாதான முயற்சிகளில் ஈடுபடுகின்றது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இந்த ஆயுதக் கொள்வனவுக்கு அமெரிக்காவிலிருந்து கடன் பெறுவதிலும் அமைச்சர் மிலிந்த மொறகொடவின் பங்களிப்பு இருப்பதாகப் பேசிக் கொள்கின்றார்கள். அமெரிக்காவுடன் இவருக்கு நெருக்கமான தொடர்பு உண்டு.

## பீரிஸின் மிரட்டல்

புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்து விலகினால் இலங்கை அரசுக்கு உதவுவதற்கு அமெரிக்காவும் இந்தியாவும் தயாராக இருக்கின்றன என்று பேராசிரியர் பீரிஸ் கூறியிருக்கின்றார்.

லண்டனில் நிகழ்த்திய ஒரு உரையில் அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார். தமிழ்மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைப்பாட்டை இதுவரை அரசாங்கம் எடுக்கவில்லை. ஒன்றையாட்சியைக் கைவிடுவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. பிரதமரும் ஏனைய மற்றைய தலைவர்களும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இதை வலியுறுத்தி வருகின்றார்கள்.ஒற்றையாட்சியின் கீழான எந்தத் தீர்வையும் ஏற்பதற்குத் தமிழ் மக்கள் தயாராக இல்லை.

அரசாங்கம் ஒற்றையாட்சியைக் கைவிடுவது பற்றி எதுவும் கைவிடுவது பற்றி எதுவும் சொல்லாமல் பேச்சுவார்த்தையிலிருந்து விலகினால் அமெரிக்காவினதும் இந்தியாவினதும் உதவியுடன் அடித்து நொறுக்குவோம் என்ற பாணியில் பீரிஸ் பேசியது ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டே தீரவேண்டும் என வெருட்டுவதற்குச் சமன்.

அரசாங்கத்தின் நோக்கம் யுத்தமே என்பதற்கு இதுவும் ஒரு ஆதாரம்.

## கூட்டமைப்புக் கட்சிகள்

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தீர்வுத் திட்டத்தைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலுள்ள எல்லாக் கட்சிகளும் தீவிரமாக எதிர்த்தன.

அந்தத் தீர்வுத்திட்டத்தில் குறைபாடுகள் உள்ள போதிலும் நியாயமான அரசியல் தீர்வுக்குத் தேவையான பல அடிப்படை அம்சங்கள் இருந்தன.

ஸ்ரீலங்கா அரசியல் அலசல்

ஒற்றையாட்சியை அத்தீர்வுத் திட்டம் நீக்குகின்றது. இறைமையுடைய அதிகாரப்பகிர்வு அலகுகளை உருவாக்குகின்றது. பிராந்திய சபையின் எல்லைகளையும் அதிகாரங்களையும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் கூடப் பாராளுமன்றத்தினால் மாற்றியமைக்கவோ நீக்கவோ முடியாத பலமான பாதுகாப்பு ஏற்பாட்டை அத்தீர்வுத்திட்டம் கொண்டிருக்கின்றது.

இப்படியிருந்தும் கூடக் கூட்டமைப்புக்கட்சிகள் அத்தீர்வுத் திட்டத்தை எதிர்த்த போது அதனிலும் பார்க்க மேலான தீர்வை ஐக்கிய தேசியக்கட்சியிடமிருந்து பெற முடியும் என்ற நம்பிக்கையைத் தமிழ்மக்களிடம் ஏற்படுத்தின.

இன்று ஐக்கிய தேசியக்கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வந்த பாவத்துக்குப் பரிகாரம் தெரியாமல் இக்கட்சிகள் இப்போது தடுமாறுகின்றன.

## சேவா லங்கா

சேவா லங்கா அமைப்பின் தலைவர் ஹர்ஷகுமார் நவரத்ன இப்போது தமிழ்மக்கள் மத்தியில் பிரபல்யம் தேடுகின்றார். புலிகளுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்துவதில் அதிக அக்கறை செலுத்துகின்றார்.

ஆரம்பத்தில் இவர் விஜயகுமாரதுங்காவின் சகாவாக இருந்தவர். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக விஜய் அறிவித்ததைத் தொடர்ந்தே அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது தெரிந்த விடயம்.

விஜயவின் நடமாட்டங்களைப் பற்றி ஹர்ஷகுமார நவரத்னவே கொலையாளிகளுக்குத் துப்புக் கொடுத்து வந்தார் என்று அந்த நாட்களில் கதை உலாவியது.

அது எவ்வாறாயினும் விஜயவின் மரணத்துக்குப் பின்னர் இவர் அத்துலக்முதலி. காமினிதிசாநாயக்கா. பிரேமதாசா போன்ற ஐக்கியதேசியக்கட்சித் தலைவர்களுடன் நெருங்கி உறவாடினார்.

இப்போது சில இராணுவ உயரதிகாரிகளுடனும் சீ.ஐ.ஏ. யுடனும் இவருக்குத் தொடர்பு உண்டு என்றும் இவர்களுடைய தகவல் தேவைகளுக்காகவே புலிகளுடன் நெருங்கி உறவாடுகின்றார் என்றும் ஒரு செய்தி காதில் விழுகின்றது.

## தேசிய ஒருமைப்பாடு

தேசிய ஒருமைப்பாட்டுத் திட்டமிடல் பணியகம் என்ற பெயரில் ஒரு அரச சார்பற்ற நிறுவனம் செயற்படுகின்றது. நோர்வே நாட்டின் நொறாட் அமைப்பே இந்த நிறுவனத்திற்கு நிதி வழங்குகின்றது.

அரச சார்பற்ற நிறுவனமான போதிலும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சினது மேற்பார்வையின் கீழேயே இது செயற்படுகின்றது.

இந்த நிறுவனத்தின் முன்னைய பணிப்பாளரும் இணைப்பாளர்களும் தேசிய ஒருமைப்பாட்டுக்கான செயற்பாடுகளை மேற்கொண்டார்கள். இன ஐக்கிய உணர்வை மக்களிடம் ஏற்படுக்க கூடிய கலை. இலக்கியப் போட்டிகள் உட்படப் பல நடவடிக்கைகளை இந்த நிறுவனம் மேற்கொண்டது.

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து இப்பணியகத்தின் தேசிய ஒருமைப்பாட்டுச் செயற் பாடுகள் நின்று விட்டன.

தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சராக லொக்கு பண்டார பதவியேற்றிருக்கின்றார். தேசிய ஒருமைப்பாட்டில் இவருக்கு உள்ள அக்கறை நாடறிந்தகதை.

சிங்களவர்கள் பெரு மரங்கள் என்றும் சிறுபான்மையினர் அம்மரங்களைச் சுற்றிப் படரும் கொடிகள் என்றும் டி.பி.விஜேதுங்க கூறியது மிகச் சரியானதென ஒரு சந்தர்ப்பத்தில் இவர் சொல்லியிருந்தார்.

ஒற்றையாட்சியை நீக்காமலும் பிராந்திய சபைகளை அமைக்காமலும் நாங்கள் சமாதானத்தைக் கொண்டு வந்து விட்டோம் என்று அண்மையில் இவர் கூறியது அப்பட்டமான பேரினவாதச் சிந்தனையின் வெளிப்பாடு.

லொக்குபண்டார தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சராகப் பதவியேற்றதும் முன்னாள் கல்விப் பணிப்பாளர் திரிபுரசுந்தரியை என்ஜபியு வின் பணிப்பாளராக நியமித்தார். எல்லாப் பதவிகளுக்கும் புரிய நியமனம் செய்தார்.

தேசிய இனப்பிரச்சனையைப்



பொறுத்தவரையில் லொக்கு பண்டாரவின் சிந்தனைக்கும் திரிபுரசுந்தரியின் சிந்தனைக்குமிடையே வேறுபாடு இல்லை.

இப்போது என்.ஐ.பி.யு. புத்த விகாரைகளுக்கு அன்பளிப்புக்கள் வழங்குவதிலேயே காலங்கழிக்கின்றது.


நோர்வே சமாதானத்துக்கு முயற்சிக்கின்றது. ஆனால் நோர்வே நாட்டின் பெருந்தொகை பணத்தில் இயங்கும் என்.ஐ.பி.யு. ஒருமைப்பாட்டை மறந்து செயற்படுகின்றது. (நன்றி - தமிழ்ஏடு)

விளம்பரம், அறிவித்தல் தொடர்புகளுக்கு
(905) 653 - 3000
(416) 266-9919

எஸ். பி. இம்போட்டஸ் S.P. Importers Inc.
ஒரே பிளாசாவில் மூன்று பெரும் தாபனங்கள்

| Fresh Vegetable & Grocery | Fresh Fish Market | FURNITURE |
|---|---|---|
| 2863 Lawrence Ave. East<br>Tel: (416) 261-3881 | 2853 Lawrence Ave. East<br>Tel: (416) 261-4737<br>Fax: (416) 261-5843 | 2861 Lawrence Ave. East<br>Tel: (416) 266-3077 |

*Scarborough, Ontario (Brimley & Lawrence)*



அமெரிக்காவும் இஸ்ரேலுக்கும் இடையிலான உறவுகள் எப்படி இருந்தாலும் 58 லட்சம் மக்களைக் கொண்ட இஸ்ரேல் உலகின் மகாவல்லரசு ஒன்றை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது என்பது தான் உண்மை.

இஸ்ரேலுடன் உறவுகளைப் பேணுவதற்காக அமெரிக்கா பணத்தை வாரி இறைத்து வருகின்றது.

1948 ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் துணைசகாரா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, கரிபியன் ஆகிய பகுதிகளில் உள்ள நாடுகளின் மக்களுக்கு வழங்கிய உதவியை விட 58 லட்சம் மக்களைக் கொண்ட இஸ்ரேலுக்கு வழங்கியுள்ள நிதியுதவி கூடுதலானது.



கணக்கிட்டு இருந்தார்.

அமெரிக்காவுன் உள்நாட்டு அரசியலில் இஸ்ரேல் எந்த அளவுக்கு தலையீடு செய்கின்றது என்பது இந்த நாணயத்தின் மறு பக்கமாகும்.

அமெரிக்க அரசியல்வாதிகளைத் தன் பக்கம் வளைத்துப் போடுவதற்காக இயங்கி வரும் அமெரிக்க - இஸ்ரேலியப் பொது விவகாரக்குழு முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தக்குழு வருடமொன்றுக்கு ஒருகோடி 50லட்சம் டொலர் செலவில் இயங்குகின்றது. என்றாலும் இதற்கு எங்கிருந்து பணம் கிடைக்கின்றது என்பது மர்மம். இந்த அமைப்பில் 150 ஊழியர்கள் பணி புரிகின்றனர். அமெரிக்காவிலுள்ள சுமார் 52 யூத ஸ்தாபனங்களுக்கு வழிகாட்டி வருவது இந்த அமைப்புத் தான்.

பினாய், பிரித் அமைப்புக்கள் வருடந்தோறும் இஸ்ரேலிய அரசினால் மேற்பார்வை

சம்பாதிக்கும் ஒரு வேட்பாளர் இஸ்ரேலிய நலன்களுக்காகப்பணி புரிந்தால் ஐந்து லட்சம் டாலர்கள் வரையில் வழங்குகின்றன. நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தொலைக்காட்சி மூலம் வாக்குகளைப் பெறுவதற்காகச் செலவிடக்கூடிய அளவு இந்தப் பணம் போதுமானதாக இருப்பது கவனிக்கத்தக்கது.

இஸ்ரேலின் இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக, அமெரிக்காவின் மிகவும் அறிவார்ந்த, பெரும் சிறப்புப் பெற்ற அரசாங்க ஊழியர்கள் பலர் உயர் பதவிகளைப் பெற முடியாமல் போயிருக்கின்றது. அவர்களில் ஒருவர் தான் ஜோர்ஜ் போல். கென்னடியின் நிர்வாகத்தில் துணைவெளியுறவு அமைச்சராகவும் ஜோன்சன் நிர்வாகத்தில் அமெரிக்காவின் ஐக்கிய நாடுகள் சபைத் தூதராகவும் விளங்கிய முக்கியஸ்தர் இவர். சர்வதேச நிகழ்வுகளை முன்னுணர்ந்து கூறுவதில் அபார ஆற்றல் பெற்றவராக விளங்கிய

யுத்தத்தின் போது 34 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டதுடன் 170க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

1985ம் ஆண்டு பெய்ரூத்தில் அமெரிக்கப் பாசறை தாக்கப்பட்ட போது 141 அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டனர். இது போலவே கராச்சியிலும் குவைத்திலும் சவூதிஅரேபியாவிலும் எண்ணற்ற அமெரிக்கர்கள் உயிரிழந்திருக்கின்றார்கள்.

இது தவிர இஸ்ரேல் அமெரிக்காவிடமிருந்து இராணுவ தொழில்நுட்பத்தையும் பெற்றிருக்கின்றது. அவற்றை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்திருக்கின்றது. அமெரிக்கா பேட்ரியோட் ஏவுகணைகளை இஸ்ரேலுக்கு வழங்கியிருக்கின்றது. வளைகுடாப் போரின்போது வழங்கப்பட்ட இந்த ஏவுகணைகளை இஸ்ரேல் சீனாவுக்கு விற்பனை செய்து விட்டது. இதனால் பேட்ரியோட் ஏவுகணைத் தொழில்நுட்பம்

# அமெரிக்காவை ஆட்டிப்படைக்கும் இஸ்ரேல்

உதாரணமாக 1997ஆம் ஆண்டில் வெளிநாட்டு உதவி வரவு செலவுத் திட்டத்தில் இருந்து முந்நூறு கோடி டொலரையும், அமெரிக்க வரவு செலவுத் திட்டத்தில் இருந்து 52 கோடி 50 லட்சம் டொலரையும் சமஷ்டி கடன் உத்தரவாதங்களாக 200 கோடி டாலரையும் இஸ்ரேல் பெற்றுக் கொண்டது.

அதாவது நாளொன்றுக்கு அது பெற்றுக் கொண்ட தொகை 15,068,493 டொலர். அமெரிக்கா வழங்கிய ஆயிரம் கோடி டாலர் கடன் உத்தரவாதம் இல்லாமல், 1949 ஆம் ஆண்டு முதல் 8480 கோடி டொலரை இஸ்ரேல் பெற்றிருக்கின்றது.

அது மாத்திரமல்ல அமெரிக்காவில் உள்ள ஒவ்வொரு பிரஜையும் இஸ்ரேலுக்காக 23,241 டொலரை வழங்கியிருக்கின்றனர்.

அரபுநாடுகள் அமெரிக்கா மீது மேற்கொண்ட பகிஷ்கரிப்பு காரணமாக ஏற்பட்ட இழப்பு, அமெரிக்க உற்பத்தியாளர்களுக்குக் கோடிக்கணக்கான டாலர்கள் ஆகும்.

இஸ்ரேலைப் பாதுகாக்கவும் இத்தாலியிலுள்ள அவியானோ தளத்தில் இராணுவ வான் பிரிவுகளைப் பாதுகாக்கவும் மத்தியத் தரைக்கடலில் நிலை கொண்டிருக்கும் அமெரிக்காவின் ஆறாவது கடற்படையைப் பராமரிப்பதற்கும் ஆகும் செலவுகள் இதை விட அதிகம்.

அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவு துணையமைச்சர் ஜோர்ஜ் போல், அமெரிக்கா வருடமொன்றுக்கு 1100 கோடி டாலரைச் செலவிட்டு வருகின்றது என்று

செய்யப்படும் வகையில் ஆயிரக்கணக்கான அமெரிக்கர்களை இஸ்ரேலுக்கு அனுப்பி வருகின்றன.

இந்த ஸ்தாபனங்கள் இஸ்ரேலுக்கு விரோதமாகச் செயற்படும் அரசியல்வாதிகள், செய்தியாளர்கள், கல்விமான்கள், ஸ்தாபனங்கள் பற்றிய விபரங்களைத் திரட்டுகின்றன. உள்ளூர் யூத மன்றங்கள் மூலமே இஸ்ரேல் ஆதரவுக்குழுக்களுக்கும் ஏனையவற்றுக்கும் தகவல்களை அனுப்பி, இந்த அமெரிக்கர்கள் மீதான நன்மதிப்பைக் குலைக்



கின்றன. மானநஷ்ட எதிர்ப்புக்கழகம் என்ற மற்றொரு அமைப்பின் லொஸ்ஏஞ்சல் அலுவலகத்தைப் பொலிசார் முற்றுகையிட்ட போது அங்கு முற்றிலும் பிழையான தகவல்களைக்கொண்ட பல ஆவணங்களைக் கைப்பற்றினார்கள்.

இஸ்ரேலின் இது போன்ற 126 ஸ்தாபனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் சுமார் 50 ஸ்தாபனங்கள் பெரும் எதிர்ப்பைச்

போல் நிச்சயமாகவே வெளியுறவு அமைச்சராக வரக்கூடியவர். அவருடைய அறிவுக்கு ஈடிணையாக எவரும் அவ்வேளையில் இருக்கவில்லை. ஆனால் இஸ்ரேலுடனான அமெரிக்காவின் உறவு பற்றி அவர் வித்தியாசமான கருத்துக்களைக் கொண்டிருநந்தமை அவரது வீழ்ச்சிக்கு வித்தாகியது.

இஸ்ரேலுடன் அமெரிக்கா கொண்டிருந்த உறவுகள், அரபுலகில் உள்ள மக்களு



டன் அமெரிக்கா தனிமைப்படுவதற்குக் காரணமாக இருந்தது. அமெரிக்காவுக்கு இஸ்ரேல் இந்தவகையில் மாத்திரம் சேதத்தை ஏற்படுத்தவில்லை.

அமெரிக்காவின் லிபர்ட்டி கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அதாவது 1967 ஆம் ஆண்டு ஜுன் மாதம் நடந்த ஆறு நாள்

முழுவதையுமே மாற்றியமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் அமெரிக்காவுக்கு ஏற்பட்டது. இவை எல்லாம் அமெரிக்காவுக்கு எத்தனையோ நஷ்டங்களை ஏற்படுத்தினாலும் அமெரிக்கா இன்னமும் இஸ்ரேலைக் கைவிடாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

இஸ்ரேலியர்கள், உலக எதார்த்தத்தையே மீறி பாலஸ்தீன பிரதேசங்கள் மீது ஆக்கிரமிப்பை மேற்கொண்டாலும் அதனைக் கண்டிக்கக்கூடிய அளவில் அமெரிக்கா இல்லை. அதற்குக் காரணம் அமெரிக்க அரசியல்வாதிகள் மத்தியில் இஸ்ரேலின் செல்வாக்கு ஆழ வேரூன்றியிருப்பதாகும்.

இன்றைய அமெரிக்க ஆட்சியாளர்களில் பலர் இஸ்ரேலியர்களின் ஆதரவைப் பெற்றவர்கள். ஹென்றி கிஸிங்கர் முதல் மெடலின் அல்பிரைட் வரையில் இஸ்ரேலிய ஆதரவைப் பெற்ற வெளிநாட்டு அமைச்சர்களாக இருந்து வந்துள்ளனர்.

இவர்கள் தான் இஸ்ரேல் சார்பான கருத்துக்களை அமெரிக்கர்கள் மத்தியிலும் அமெரிக்க மண்ணிலும் வேரூன்றச் செய்தவர்கள். எனவே இஸ்ரேலுக்கு எதிரான வகையில் அமெரிக்காவின் அரசியலை மாற்ற முடியாது என்பது நன்கு தெளிவான ஒன்று என்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.






BUYING – SELLING

NADA G. NADARAJAH B.V.Se
*Sales Representative*
*Gold Award Winner 2000*
5200 Finch Ave. East,
Suite 206, Scarborough,
ON M1S 4Z4



Bus: (416) 293-5093
Fax: (416) 293-5237
Res: (905) 472-8703

HOMELIFE
HomeLife Metro
Realty Inc.
*Real Estate Broker*

வீடுகள் வாங்க அல்லது விற்க, அதற்கான இலவச ஆலோசனைகள் பெற்றிட, குறைவான வட்டி விகிதத்தில் அடமான ஒழுங்குகள் செய்திட இன்றே அழையுங்கள்

நடா. ஜி. நடராசா




# காட்சிகள் மாறும் இந்திய அரசியல்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் போர் மூளும் என்று பரவலாக எல்லோரும் எதிர் பார்த்தனர்.

ஆனால் தென் ஆசியப்பிராந்தியத்தில் அமைதியும் பதட்டமும் போரும் ஏற்படுவ தெல்லாம் இவ்விரு நாடுகள் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல அமெரிக்க நலன் சார்ந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பிணைப்பிலும் உள்ளது.

கடந்த செப்.11 அமெரிக்கா மீதான தாக்குத லின் பின்னர் அமெரிக்காவின் நோக்கு எல்லையை துரிதப்படுத்தியுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான பதற்றம் மோதல் போக்கை தணிக்க அமெரிக்காவின் உயர்மட்ட ராஜதந்திரிகள் பலர் இரு நாடுக ளுக்கும் விஜயம் செய்தது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க அதிபர் புஷ் இந்திய பாகிஸ்தான் தலைவர்களுடன் தொலைபேசியில் கலந்து பேசியதையும் கவனிக்கலாம்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் நடவடிக்கை என்று அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் தங்கள் நோக்கத்தை விஸ்தரித்து செயற்படுகின்றன.

இந்நிலையில் பிராந்திய அளவில் தான் நேரில் சம்பந்தப்படாத தமக்கு உடனடி நன்மை பயக்காத எந்த நடவடிக்கை களுக்கும் அமெரிக்கா ஆதரவு தெரிவிக்காது.

பாகிஸ்தான் - அமெரிக்கா இடையிலான உறவு மிக நெருக்கமாக உள்ள நேரத்திலும் பாகிஸ்தானில் அமெரிக்கப் படைகள் தங்கியுள்ள நேரத்திலும் இந்திய - பாகிஸ்தான் இடையிலான பதற்றம் மோதல் உடனடியாக தவிர்க்கப்படவேண்டும் என்பதில் இந்தியா- பாகிஸ்தான் இரு நாடுகளை விட அமெரிக்காவுக்கு அதிக அக்கறை இருந்தது என்பது மட்டும் உண்மை.

எப்போதும் எல்லைக்கட்டுப்பாட்டில் பதற்றம் முறுகல் நிலை இருக்கும். அவை இல்லாது இருப்பின் அங்கு எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடே இருக்காது. இத்தகைய சூழல் தான் படையினரின் மனோதைரியத்துக்கான பலப்பரீட்சையாக இருக்கும்.

தற்போது இந்திய - பாகிஸ்தான் முறுகல் நிலை பற்றிய செய்திகள் என்பதை விட இந்தியாவின் 12 வது குடியரசுத் தலைவருக்கான தேர்தல் பற்றிய செய்திகள் தான் ஊடகங்களில் பெருமளவு உள்ளது.

குஜராத் கலவரம் வன்முறை தொடர்பாக இந்தியாவின் உள்நாட்டு சமூக ஜனநாயகம், மதச்சார்பின்மை ஜனநாயகம் கேள்விக் குள்ளாகி இருந்தது. அரசு ஆதரவுடன் இக்கலவரம் வன்முறை வெளிப்பட்டிருந்தது என்பதை பல்வேறு உண்மையறியும் குழுக்கள் நேரில் சென்று வெளிப்படுத்தின.

பாஜக அரசுக்கு குஜராத் கலவரம் அவர்களது மனச்சாட்சிக்கு விடப்பட்டுள்ள சவாலாகவே இருந்தது. காங்கிரஸ் இடதுசாரிக்கட்சிகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குஜராத் கலவரத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்தி பாஜக அரசுக்கு எதிரான அரசியல் செய்யத் தொடங்கினர். குஜராத் முதல்வர் நரேந்திர மோடி பதவியில் இருந்து விலக்கப்பட வேண்டுமென்று கோரிக்கையை வெளிப் படுத்தி வந்தனர்.

ஆனால் குடியரசுத் தலைவர் தேர்தல் பாஜக, காங்கிரஸ் உள்ளிட்ட பெரும்பான்மைக் கட்சிகளை ஓரணியில் நிறுத்தியுள்ளது. தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் எதிர்பாராத திருப்பமாக டாக்டர் அப்துல் கலாம் வேட்பாளராக அறிவித்ததைத் தொடர்ந்து பாஜக வுக்கு உடனடி நன்மைகள் பல கிடைத்துள்ளன.

காங்கிரசும் அப்துல் கலாமுக்கு ஆதரவு தெரிவிக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இடதுசாரிக்கட்சிகளைத் தவிர பெரும் பான்மைக் கட்சிகள் அப்துல்கலாம் தேர்வுக்கு முழு ஆதரவைத் தெரிவித்துள்ளன. இடது சாரிக்கட்சிகள் வீம்புக்கு கலாமை எதிர்த்து தமது சார்பில் கேப்டன் லட்சுமியை நிறுத்தியுள்ளனர்.

12 வது குடியரசுத் தலைவராக அப்துல் கலாம் வருவது உறுதி. அதைவிட காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பல தேசிய ஜன நாயக கூட்டணியுடன் இணைந்து செயற்படக் கூடிய வாய்ப்பைக் கொடுத்துள்ளது.

குஜராத் நரேந்திர மோடி விவகாரம் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. பாகிஸ்தான் - இந்தியா பதற்றம் பற்றிய செய்திகளும் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டன.

குடியரசுத் தேர்தல் முடிவுற்று அப்துல் கலாம் பதவியேற்கும் வரை இடதுசாரிக்கட்சிகள் தவிர பெரும்பான்மைக் கட்சிகள் யாவும் ஒருமித்து செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன.

அரசியல் வியூகங்கள் எந்தக் கணமும் எவர் மூலமும் எதிர்பாராதவாறு மாறும் என்பதை இந்தியாவின் தற்போதைய அரசியல் நிலைமை சுட்டிக்காட்டுகின்றது.

# த.மா.கா. - காங்கிரஸ் தொடரும் பாரம்பரியம்

இந்தியாவின் பாரம்பரியமிக்க தேசியக் கட்சி காங்கிரஸ் கட்சி. இக்கட்சி 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் திகதி ஜெயலலிதா தலைமையிலான அதிமுக வுடன் கூட்டணி வைக்கமுடிவெடுத்தது. இதை எதிர்த்து மூப்பனார், சிதம்பரம் உட்பட பலர் ஒன்று சேர்ந்து தமிழ்மாநிலக் காங்கிரஸ் கட்சியை தொடங்கினார்கள். மூன்றே நாட்களில் கட்சியின் பெயர், கொடி, சின்னம் போன்றவைகள் முடிவுசெய்யப்பட்டன.

1996 இல் நடைபெற்ற தேர்தலில் திமுக கூட்டணியில் தமாகா இணைந்தது. 40 சட்டப்பேரவை தொகுதிகளும் 20 நாடாளு மன்ற தொகுதிகளும் அதற்கு ஒதுக்கப் பட்டன. இதில் 20 நாடாளுமன்ற தொகுதி களிலும் தமாகா வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் தேவகவுடா தலைமை யிலான மத்திய அரசிலும் தமாகா பங்கேற்றது. பலர் மத்தியில் அமைச்சர்களாக இருந்தனர்.

1996 தேர்தலில் 39 சட்டப் பேரவைத் தொகுதிகளில் வெற்றி பெற்றதன் மூலம் தமிழகத்தின் எதிர்க்கட்சி என்கின்ற இடத்தை தமாகா பெற்றது.

அதன் பின் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலிலும் தமாகா, திமுக வுடன் அறுபதுக்கு நாற்பது என்கின்ற சதவிகிதத்தில் கூட்டணி அமைத்தது. இதன் மூலம் திருச்சி, கோவை ஆகிய மாநகராட்சிகளை தமாகா கைப்பற்றியது.

நாடாளுமன்றம், சட்டமன்றம், உள்ளாட்சி அமைப்புக்களில் தமாகா பெற்ற வெற்றியின் மூலம் தன்னைத் தனித்தன்மை வாய்ந்த கட்சியாக உயர்த்திக்கொண்டது. காங்கிரஸ் கட்சியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழகத்தில் தமாகா தனிக்கட்சியாக செல்வாக்கு மிக்க கட்சியாக உருவாகி வளர்ந்து வந்தது என்றால் மிகையல்ல.

பொதுவாக தமிழகத்தில் திராவிடக் கட்சிகளின் எழுச்சிக்குப் பிறகு காங்கிரஸ் கட்சி தனது செல்வாக்கை இழக்கத் தொடங்கியது. 1967 க்குப் பிறகு ஆட்சி அதிகாரம் திமுக விடம் வந்து சேர்ந்தது. அதன் பிறகு இன்று வரை திமுக, அதிமுக இரண்டிடம் மட்டும் ஆட்சியதிகாரம் இருந்து வருகின்றது.

காங்கிரஸ் இவ்விரு கட்சிகளுடன் கூட்டணி அமைப்பதால் மட்டுமே தனக்கான அரசியல் அங்கீகரிப்பை அவ்வப்போது வெளிப்படுத்தி வந்தது. அதிலும் தமிழக அளவில் காங்கிரஸ் செல்வாக்கு மிக்க ஆதரவுத் தளமாக இருந்தவர்கள் தான் காங்கிரசில் இருந்து பிரிந்து தமாகா வ்வ உருவாக்கினார்கள். 1996 க்குப் பிறகு காங்கிரஸ் அலை தமாகா அலையாக உருமாறியது. ஆனால் காங்கிரஸ், தமாகா இரண்டுக்கும் இடையில் பெரிய வித்தியாசம் எதுவும் இருப்பதாகத் தெரிய வில்லை.

தாய்க்கட்சி மீதான பற்றும் விசுவாசமும் தமாகாவிடம் எப்போதும் இருந்தது. காங்கிரசில் பிளவுகள் புதிய கட்சிகள் தோற்றம் பெறுவது என்பதெல்லாம் அதன் அடிப்படையான குணாதிசயம். பின்னர் பிளவுபட்டவை இணைவதும் இணைந் தவை பிளவுபடுவதும் பின்னர் இணைவதும் என்பது காங்கிரஸில் இழையோடும் தர்க்கரீதி இயங்குவிதி. தமிழகத்தில் காமராஜர், ராஜாஜி தொடக்கம் இந்த விதி உள்ளது.

திமுக, தமாகா உறவில் விரிசல் ஏற்பட்டது. அதிமுக - தமாகா உறவில் உள்ள இரும்புத் திரை விலகியது. இரு கட்சிகளிடையே கூட்டணி உருவாகியது. இதனை ஏற்கமுடியாது. ப. சிதம்பரம் தலைமையிலான ஓர் அணி, தமாகா ஜனநாயகப் பேரவையை உருவாக்கினார்.

தமாகா தலைவராக மூப்பனார் இருந்தபோதே காங்கிரசில் மீண்டும் இணைவது பற்றிய பேச்சு வலுப்பெற்றது. அவர் இறப்புக்குப் பின்னர் காங்கிரஸ் எப்படியும் தமாகா வை தன்னுடன் இணைத்துவிடுவதில் குறியாக இருந்தது. அதற்கான பேச்சுவார்த்தையை துரிதப்படுத்தியது.

வாசன் தலைமையிலான தமாகா காங்கிரசுடன் எப்படியும் இணைந்துவிடும் என்ற எதிர்பார்ப்பு நாளுக்கு நாள் அதிகரித்தது. கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் தமாகா, காங்கிரஸ் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் அதிமுக கூட்டணியிலிருந்து தமாகா காங்கிரஸ் ஆகியன விலகிக் கொண்டன. அதிமுக வின் மக்கள் விரோத ஆட்சியைக் கண்டித்தன. இவ்வாறு அரசியல் தொடரும் நோத்தில் காங்கிரஸ், தமாகா உறவு நெருக்க மாகி காங்கிரசுடன் தமாகா இணைவதற்கான முதல்கட்டம்,இரண்டாம் கட்டம், இறுதிக் கட்டம் என்ற பேச்சுவார்த்தைகள் முடிவுற்று ஆகஸ்ட் 1 ஆந் திகதி காங்கிரசுடன் தமாகா இணைப்பு உறுதியாகிவிட்டது.

நாள் குறித்தாயிற்று. சரிவற்ற காங்கிரஸ் நிமிர்வதற்கு இந்த இணைப்பு ஒரு நெம்பு கோலாக இருக்கும். ஆனால் திமுக,அதிமுக இரண்டு கட்சிகளுக்கும் ஓர் மாற்றுக்கட்சியாக காங்கிரஸ் வருமா? என்பது தான் சந்தேகம். எப்படியும் திமுக, அதிமுக இரண்டுடனும் கூட்டணி சேர்ந்து அரசியல் செய்வது என்ற தர்க்க விதியை காங்கிரஸ் தொடருமென்றே எதிர்பார்க்கலாம்.



# பண்டா கொண்டு வந்த தனிச் சிங்களச் சட்டம்

1956 பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தோல்வி அடைந்தது.

24 மணி நேரத்தில் சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவேன் என்று கூறிக் கொண்டு பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்தார்.

1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ம்திகதி சிங்களம் மட்டும் சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. இதுவே ஈழத்தமிழரின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது.

ஆட்டைக் கடித்து. மாட்டைக் கடித்து. மனிதனைக்கடிப்பது என்பது போல். தமிழனின் கொடியுரிமை முதலில் பறிக்கப்பட்டது. பின்பு குடியுரிமை. வாக்குரிமை. நிலவுரிமை என்பன பறிக்கப்பட்டன. மொழியிலும் பின்பு கை வைக்கப்பட்டது.

மொழி என்பது எமது விழி மட்டும் அல்ல. அது எமது இனத்தின் உயிராக அமைகிறது. மொழி அழியும் போது இனமும் அழிந்து விடும். அதன் தனித்துவம் சீர்குலைந்து விடும்.

'டதையும் அவர்களை பண்டாரநாயக்கா எள்ளி நகையாடியதையும் நாம் இலகுவில் மறந்துவிட முடியாது.

தமிழால் உலகாண்ட தனிநாயகம் அடிகளாரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டார். உலகின் கவனத்தை - குறிப்பாக கத்தோலிக்க உலகின் கவனத்தை இப்போராட்டம் ஈர்க்கச் செய்த பெருமை தனிநாயகம் அடிகளாரையே சாரும்.

## டாக்டர் எம்.எம்.பெரேரா இடித்துரைத்த உண்மை

தனிச்சிங்களச் சட்டம் 1956இல் நிறைவேற்றப்பட்ட போது டாக்டர் என்.எம்.பெரேரா தமிழர்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டுள்ளனர் என்பதை உள்ளம் உருக பின்வருமாறு கூறினார்.

"இலங்கையில் ஒவ்வொரு திருப்பத்திலும் சிறுபான்மையோர் பெரும்பான்மைத் தலைவர்களால் துரோகம் இழைக்கப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். டொனமூர் அரசியல் திட்டம்

செய்ய முன் வந்தார். பண்டா - செல்வா ஒப்பந்தம் ஓரளவு தமிழருக்கு மாநில சுயாட்சி வழங்க முன்வந்த ஒப்பந்தம். எனவே அதன் உள்ளடக்கத்தை இங்கு கூறத் தேவையில்லை. எனினும் சிங்கள பௌத்த வெறியாட்டத்திற்கு அடிபணி



ந்த பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தை கிழித்தெறிந்தார். இதனையடுத்து சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் ஆரம்பமானது. தொடர்ந்து வவுனியாவில் நடைபெற்ற தமழரசுக்கட்சி மாநாட்டையடுத்து நாட்டில் இனக்கலவரம் வெடித்தது.

கொண்டிருந்தனர்"

### சிங்களத் திணிப்பு

இனக்கலவரத்தின் பின்னர் தமிழர் தாயகம் வடக்கு - கிழக்கில் சிங்களம் மட்டும் சட்டத்தை திணிக்க தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கு எதிராக 1961 இல் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தப்பட்டது. செல்வாவின் தலைமையில் நடைபெற்ற இப்போராட்டம் 60 நாட்கள் நீடித்தது. அரச நிர்வாகம் செயல் இழந்தது. அப்பொழுது பதவியில் இருந்த ஸ்ரீமா பண்டார

ஈழவேந்தன்

நாயக்காவினால் அவசரகாலச்சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது.

சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னின்று வழிநடத்திய தலைவர்களும் தொண்டர்களும் தாக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். தமிழரசுக்கட்சியின் இரும்பு மனிதராக அப்பொழுது கருதப்பட்டவர் டாக்டர் நாகநாதன். இவரைப் பொலிசார் குண்டாந்தடி கொண்டு தாக்கிய போது குண்டாந்தடி இரண்டாக உடைந்தது. நாகநாதனின் மண்டை உடைந்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது.

எம்மை எப்படியும் அடக்கி ஒடுக்குவோம் என்று சிறிமா அம்மையார் சீறிப்பாய்ந்த போது தனக்கே உரிய புன்னகையை வருவித்த தந்தை செல்வா *We are helples like the bandaranayake against the assasin in his own residence* (தனது வதிவிடத்திலேயே தன்னைக் காப்பாற்ற முடியாது கொலையாளிக்கு எப்படி பண்டாரநாயக்கா பலியானாரோ அப்படியே நீங்கள் தாக்குதல் நடத்திய போது நாமும் செயலற்ற நிலைக்கு ஆளாகி இருந்தோம்) என்றார்.

## சிறுபான்மை மக்கள் எங்கள் உறுதிமொழியை யிட்டு எள்ளி நகையாடுவது வியப்புக்குரியதாகுமா? - என்.எம்.பெரேரா கூறினார்.

திணிக்கப்பட்ட மொழிக்கு காலப் போக்கில் இனத்தோடு இரண்டறக் கலக்கின்ற ஆபத்து ஏற்படும்.

இவற்றை எல்லாம் நக்குணர்ந்த ஆங்கில அரசியல் ஆய்வாளர்கள் Language is the soul of the nation. if it's destoyed, The nation is dead என்றனர்.

அதாவது ஒரு தேசிய இனத்தின் உயிராக விளங்குவது மொழி. அந்த மொழி அழிக்கப்படும் போது அந்த தேசிய இனமும் அழிந்தே தீரும்.

ஒரு தேசிய இனத்தை அழிக்க விரும்பினால் முதலில் அந்த இனத்தின் மொழியை அழி என்ற கூற்றுக்கள் பொருள் பொதிந்தவை ஆகும். இதனைத் தான் பாவேந்தர் பாரதிதாசன் தனக்கே உரிய உணர்ச்சி நிலையில் தமிழ் அழிக்கப்படும் பொழுது தமிழர் அழிந்தே தீருவார்கள் என்பதை தம் உணர்ச்சியின் உச்ச நிலையிலிருந்து பின்வருமாறு பாடினார்.

"தமிழுக்கு அமுதென்று பெயர். அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு மேல்" என்ற அவரது பாடல் வரிகள் தமிழ் எம் இனத்தின் உயிர் என்பதை ஆணித்தரமாக அறைந்து செல்கின்றன.

சிங்களமே ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று 1940களில் முழங்கியவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா. ஆனால் தமிழும் சிங்களத்தோடு ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று முதலில் கூறிய பண்டாரநாயக்கா 1956இல் வெறி கொண்ட சிங்களவராக மாறியது வேதனைக்குரியது.

### தனிச் சிங்களச் சட்டம் ஜூன் 5ம்திகதி நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது.

கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது. சத்தியத்தின் நித்தியத்தில் நம்பும் யாரும் சேருவீர்" என்ற நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளையின் பாடலுக்கு ஏற்ப தந்தை செல்வாவின் தலைமையில் அறப்போர் ஆரம்பமானது.

சிங்களம் மட்டும் சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட போது காலிமுகத்திடலில் அறப்போரில் ஈடுபட்ட தலைவர்கள் மீதும் தொண்டர்கள் மீதும் சிங்கள வெறியர்கள் தாக்குதல் நடத்தினர்.அஹிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பேரை ஆற்றில் தூக்கி வீசப்பட்டனர். தலைவர் வன்னியசிங்கம். டாக்டர் நாகநாதன். அமிர்தலிங்கம் ஆகியோர் காணப்பட

வெளிவந்த டி.எஸ்.சேனநாயக்கா காலம் தொட்டு குறிப்பாக இந்திய வம்சாவழியினருக்குச் சில வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு காலப்போக்கில் அவை காற்றோடு கலந்து பறக்கவிடப்பட்டன. மீண்டும் சோல்பரி அரசியல் திட்டம் உருவாகிய காலத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட



வாக்குறுதிகள் இறுதியில் கைவிடப்பட்டன. இந்திய குடிவரவு குடியகல்வுச் சட்டம் தொடர்பாக சட்டம். மீண்டும் மீண்டும் எத்தனையோ உறுதிமொழிகள் அளிக்கப்பட்டன. ஆனால் இறுதியில் அனைத்தும் அவர்களுக்கெதிராகவே நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்த நிலையில் சிறுபான்மை மக்கள் எங்கள் உறுதிமொழியை யிட்டு எள்ளி நகையாடுவது வியப்புக்குரியதாகுமா? இப்படி என்.எம்.பெரேரா கூறினார்.

### திருமலை மாநாடு

1956 இல் தனிச்சிங்களச்சட்டம் நிறைவேற்றப்பட்டதையடுத்து தமிழிரசுக்கட்சியின் தலைமையில் வரலாறு காணாத திருமலை யாத்திரை இடம்பெற்றது.

தமிழரின் தாயகம் காத்தல். இணைப்பாட்சி போன்ற தீர்மானங்கள் திருமலை மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. திருமலை மாநாடு தமிழர் வரலாற்றில் ஒரு திருப்புமுனை. தமழரசுக்கட்சியின் மூளை என்று வர்ணிக்கப்பட்ட வ. நவரத்தினம் இம் மாநாடு வெற்றிபெற ஆற்றிய பணி அழியாப் புகழ் வாய்ந்ததாகும்.

### பண்டா செல்வா ஒப்பந்தம்

திருமலை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை பண்டாரநாயக்காவின் ஆட்சி தட்டிக்கழித்த போது தமிழ்மக்கள் போர்க்கோலம் பூண்டனர். இந்த நிலையைத் தவிர்க்க பண்டாரநாயக்கா 1957இல் செல்வநாயகத்துடன் ஒப்பந்தம்

1958 கலவரம் தமிழர் வாழ்வில் மறக்க முடியாத ஒன்றாகும். நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொலை செய்யப்பட்டனர். தமிழ் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டனர். தமிழர்களின் கோடிக்கணக்கான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. இனி மேல் சிங்களத் தலைவர்களுடன் தமிழர் வாழமுடியாது என்ற நிலைமை ஏற்



பட்டது. 1958 கலவரம் பற்றி எழுதப்பட்ட புத்தகம் அவசரகால நிலை 58 (Energmcy 58)

1965 ஆம் ஆண்டு டட்லிசேனநாயக்காவின் ஆட்சி ஏற்பட்டது. தமிழருக்கு மாவட்ட சபைகள் வழங்கப்படும் என டட்லி உறுதி அளித்ததையடுத்து டட்லி - செல்வா ஒப்பந்தம் உருவானது. இந்த ஒப்பந்தமும் வழமை போல் உறுதி மொழிகள் காப்பாற்றப்படாத நிலையில் தூக்கி எறியப்பட்டது. எனினும் டட்லியின் ஆட்சிக்காலத்தில் விசேட தமிழ்மொழி உபயோக மாசோதா கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. டட்லியின் வயிற்றில் தமிழர்களின் தோசையும் வடையும் என்று அப்பொழுது இனவாதிகள் கூச்சலிட்டனர்.

இந்தநாட்களில் தான் நீண்டகாலம் சமத்துவம் பேசி வந்த டாக்டர் என்.எம்.பெரேரா தமிழர்களைக் கைவிட்டார். சிங்கள மக்களை டட்லி தமிழர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுத்து

## "இரட்டை டாக்டர் பட்டம் பெற்ற இரட்டை நாக்குடன் பேசும் துரோகி" என்று என்.எம்.பெரேராவை வர்ணித்த அடங்காத்தமிழர் சுந்தரலிங்கம்

ஏரிக்கரை நிறுவனத்தில் கடமையாற்றிய மூத்த செய்தி இதழாசிரியர் தாசிவித்தாச்சி இதனை எழுதியிருந்தார்.

இந்நூலில் தமிழ்மக்கள் பட்ட ஆளாத் துயர் கண்டு தந்தை செல்வா அழுதார் என்பதை நூலாசிரியர் பின்வருமாறு உள்ளம் உருக கூறுகின்றார்.

"ஜூன் மாதம் 4ம்திகதி (1958) நாடாளுமன்றத்தில் அவர் எழுந்து நின்றார். அவருடைய உடல் வளைந்திருந்து. தாம் கண்ட பயங்கரக் காட்சிகளால் அவரது முகம் சுருங்கிக் கோடுகள் விழுந்திருந்தன. அகதிகளின் முகாமில் அவர் மனமுடைந்து கண்ணீர் விட்டழுதார். தமிழர்களை அழித்து விட வேண்டுமென்று முந்திய இரவு கோரிய அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த சிங்களத்தீவிரவாதிகள் கூடப் பரிதாபப்பட்டுப் பொறுமையோடு அவர் சொல்லியதைக் கேட்டுக்

விட்டார் என்று டாக்டர் என்.எம். பெரேரா குற்றம் சாட்டினார். அரசியலில் குத்துக்கரணம் அடித்து தமிழர்களைக் கைவிட்ட போது *Double Doctrorate with double tongued treachery* என்று அடங்காத்தமிழன் என்ற சுந்தரலிங்கம் அப்பொழுது வர்ணித்தார்.

அதாவது இரட்டை டாக்டர் பட்டம் பெற்று இரட்டை நாக்குடன் பேசும் துரோகி என்று டாக்டர் என்.எம்.பெரேராவை சுந்தரலிங்கம் வர்ணித்தார்.

விசேட தமிழ்மொழி உபயோக மசோதாவிலும் உயிர் இருக்கவில்லை.

### உலகம் தழுவிய தமிழன் தன்னை

யாதும் ஊரே யாவரும் (தொடரும்)


# MILLENNIUM LEISURE TRAVELS INC.




ஆசியா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா,
வட-தென்-மத்திய அமெரிக்க நாடுகளிற்குக்
குறைந்த விலையில் சிறந்த சேவையுடன்
உங்கள் பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

எந்த ஐரோப்பிய நாட்டிற்கும் விமானச்சீட்டு
முதல் EuroRail Pass, Rental Car வரையில்
சிறந்த விலையில் வசதிசெய்து தரப்படும்

இலங்கையிலிருந்து கனடாவிற்கு மட்டுமல்ல,
வேறு எந்த நாடுகளிற்கும் பிரயாண
ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்படும்



**Florida, Cuba, Carribean**
நாடுகளுக்குக் குடும்பத்துடனோ தனியாகவோ
விடுமுறையைக் கழிக்க விரும்புகிறீர்களா?
நியாயமான விலையில் **Package** வசதிகள்,
**Car Rentals, Cruise** வசதிகளும்
அத்துடன் **Disney World Tickets**
அமெரிக்க டொலர் பெறுமதியைக் கனேடியன்
டொலரில் எம்மிடம் பெறலாம்

நாள்தோறும் எத்தனையோ விளம்பரங்களைப்
பார்க்கிறீர்கள். எங்களுடன் ஒருமுறை
தொடர்புகொண்டு உங்கள்
பயணத்தைத் தொடங்குங்கள்.

விலையிலும் தரத்திலும் சேவையிலும்
நீங்கள் மிகப்பெரிய
வித்தியாசத்தை உணர்வீர்கள்

பலவருட அனுபவம் கொண்ட எங்கள் பிரதிநிதிகளை
உடனே தொடர்பு கொள்ளுங்கள்

**108 Corporate Drive, Suite 8, Scarborough, ON M1H 3H9**
**TEL: (416) 431-9100 FAX: (416) 431-5722**



**THE CRISPY MOISTURIZED CHICKEN BY**

**CHESTER FRIED**

**AVAILABLE AT**
# PHALAPPASS
TAKE-OUT & CATERING
**416-614-9669**

1635 LAWRENCE AVE. W,
UNIT # 5
NORTH YORK, ONTARIO

**CHICKEN TO GO**
**416 248-5999**



நோர்த்யோக் நகரில் உன்னதமான உணவுகளுக்கு **பாலப்பாஸ்.**
ஈழத்தின் சுவைகாண, உணவுகளின் தரம் காண இன்றே நாடுங்கள் **பாலப்பாஸ்.**
உங்களுக்குத் தேவையான அன்றாட உணவுவகைகள், சிற்றுண்டி வகைகள் என நாவிற்கு ருசியான
உணவுகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளத் தயாராகுங்கள்

# பாலப்பாஸ்

**வெள்ளிக்கிழமை விரதச் சாப்பாடு**
(5 மரக்கறி, பாயாசம், அப்பளம், மோர்மிளகாயுடன்)
**FRIDAY SPECIAL $ 4.99**

பிரைட் பிஷ் - Fried Fish............ $ 1.99

மாதாந்தச் சாப்பாடு **SPECIAL - $ 299**

100 இடியப்பம் சொதி சம்பலுடன் $ 10.00

சனி, ஞாயிறு தினங்களில்
நாவுக்கு ருசியூட்டும்
**கடலுணவுக்கூழ்**

குறிப்பிட்ட பகுதிகளுக்கு $25க்கு
மேற்பட்ட ஓடர்கள் நேரடி விநியோகம்
Lawrence/Bathurst முதல் Weston/Lawrence
வரையான பகுதிகளுக்கு நேரடி விநியோகம்

சிங்கப்பூர் நூடில்ஸ்
பாலப்பாஸ் ஸ்பெஷல் கடலுணவு **$ 5.99**

NORTH YORK தமிழ் மக்களின் உணவுத்
தேவைகளைப் பூர்த்தி செய்யவும் திருமண
விழாக்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள்,
பிறந்தநாள் கொண்டாட்டங்கள் உட்பட சகல
மங்களகரமான நிகழ்ச்சிகளையும் ஒரே
கூரையின் கீழ் ஒழுங்கு செய்து உங்களின் எண்
ணங்களை நிறைவேற்றத் தயாராகி விட்டோம்.

**பாலப்பாஸ்**
பார்ட்டி சேர்விஸ் அன்ட் கேற்றரிங்

# PHALAPPASS
**1635 LAWRENCE AVE. W,**
**UNIT # 5**
**NORTH YORK, ONTARIO**

**(416) 614-9669**
**(416) 248-5999**

VAANIPA VASANTHAM

ctcc
www.ctcc.ca

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம்
CANADIAN TAMILS' CHAMBER OF COMMERCE

# வாணிப வசந்தம்

TRADE SHOW வர்த்தக கண்காட்சி

# 2002

## ஜூலை 13, 14

சனி, ஞாயிறு
இரு தினங்களும்

SATURDAY 13th 12:00 p.m. - 9:00 p.m.

JULY

SUNDAY 14th 11:00 a.m. - 8:00 p.m.

- கலை நிகழ்ச்சிகள்
- இன்னிசை நிகழ்ச்சிகள்
- மலிவு விற்பனைகள்
- புதிய அறிமுகங்கள்
- வேலை வாய்ப்பு (Job Fair)

**National Trade Centre**
**Hall "A"**
*At The Exhibition Place*
Toronto

கண்காட்சிச்சாலை பதிவுகளுக்கும்
மேலதிக விபரங்களுக்கும் தொடர்பு

*For Stall Reservations and Further Information Call:*

சம்மேளனம் /Chamber: (416) 335-9791
மதி /Mathy: (416) 410-2946
குலா /Kula: (416) 984-4938



# பரவுகின்ற பஞ்சம்

இருண்ட கண்டம் என்று ஆபிரிக்க கண்டத்தை அழைத்தபோது பூகோள ரீதியாகப் பெருங்காடுகள் நிறைந்தகண்டம் என்பதால் தான். இதை இப்படி அழைக்கத் தலைப் பட்டார்கள் என்று எண்ணத் தோன்றி ற்று. ஆனால் இன்றைய நிலையைப் பார்க்கும் போது இந்த நாட்டை உலுப்பியெடுக்கும் எயிட்ஸ் பிரச்னை இந்த நாட்டை இருண்ட கண்டமாக்கி விட்டது என்பது தெரிகின்றது. இந்த எயிட்ஸின் கொடுமையினால் இக்கண்டத்தில் மரணிப்பவர்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிய வண்ணமாகவே இருக்கின்றது.

இந்தக் கண்டத்தை இத்தோடு விட்டால் பரவாயில்லையே. பஞ்சமும் பட்டினியும் இந்த ஆபிரிக்கர்களை இப்பொழுது பரிதவிக்க வைத்து வருகின்றன.

எல்லைகள் கடந்து உலக நாடுகளெங்கும் மருத்துவ சேவை செய்யும் அமைப்பு எடுத்த ஒரு கணிப்பின்படி 100,000 ஆபிரிக்கர்கள் வரை உணவுப் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளது.

அங்கோலாவில் மாஜி யுனிற்றா அமைப்பின் அங்கத்தவர்களுக்காக எழுப்பப்பட்ட கூடாரங்களில் தினமும் ஐவர் உணவுப் பற்றாக்குறையினால் இறந்து வருகின்றார்களாம். இந்த நிலை நீடித்தால் மாஜி கொரில்லாக்கள் பலர் இங்கிருந்து தப்பியோடி குற்றச்செயல்களில் ஈடுபடலாம் என்று அஞ்சுகின்றார்கள்.

இன்னொரு ஆபிரிக்க நாடான ஸாம்பியா, உணவுப்பற்றாக்குறையை ஒரு தேசிய அவலமாகப் பிரகடனப்படுத்தி இருக்கின்றது. அடுத்த மாத முடிவிலோ அல்லது ஆகஸ்ட் மாதத்திலோ 4 மில்லியன் வரையிலானவர்கள் உணவுப்பற்றாக்குறையினால் பட்டினியை எதிர்நோக்கவேண்டி வரும் என்று அதிகாரிகள் கருதுகின்றார்கள். படுமோசமான வரட்சி நாட்டின் தெற்குப் பகுதியில் பயிர்ச்செய்கை விடயத்தில் பெருந்தோல்வியை ஏற்படுத்தியுள்ளது. 2000/ 2001 காலகட்டத்தில் பயிர்ச்செய்கை 30 வீத வீழ்ச்சி கண்டதால் இந்த வருட வீழ்ச்சியும் இணைந்து கையிருப்பு நிலையை மேலும் மோசமாக்கி இருக்கின்றது. இவர்களுக்கு அவசியம் தேவைப்படும் சோளத் தட்டுப்பாடு 630,000 தொன் என்று கணக்கிட்டுள்ளார்கள். சிம்பாப்வே நாட்டு நிலைமையைப் பார்த்தால் இங்கேயும் மழை வீழ்ச்சி குறைந்தமையால் மோசமான அறுவடை நிகழ்ந்திருப்பதையே காணமுடிகின்றது. தெற்கத்திய மேற்கத்திய பிரதேசங்களான MATABELELAND, MASVINGO போன்றவை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 6 மில்லியன் பேர் வரையில் உணவு உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். 1.5 மில்லியன் தொன் உணவுப்பற்றாக்குறை இங்கு நிலவுகின்றது. எயிட்ஸ் வைரஸினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட ஒரு ஆபிரிக்க நாடு இது என்பது இன்னொரு முக்கிய அம்சமாகும்.

இரண்டு வருட வெள்ளப்பெருக்கையடுத்து மொசாம்பிக் நாட்டின் 90,000 ஹெக்டர் விஸ்தீரணமான பிரதேசமும் 100,000 வீடுகளும் பெரும் பாதிப்பைக் கண்டுள்ளன. ஐ.நா. அமைப்பின் பிரதிநிதிகள் கணக்கின்படி, 500,000 பேருக்கு அவசியம் உணவு தேவைப்படுகின்றது.

மலாவியில் கடந்த பெப்ரவரியில் உணவுப் பற்றாக்குறையினால் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இந்த ஆபிரிக்க நாட்டில் நூற்றுக்கணக்கானவர்கள் பட்டினியால் மரணித்துவிட்டார்கள். தெற்குப் பிராந்தியத்தில் 3 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் பட்டினியை எதிர்நோக்குகின்றார்கள். இங்குள்ள 27 மாவட்டங்களில் 14 வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் 6 மாவட்டங்கள் வரண்டு கொண்டு செல்கின்றன. 485,000 தொன் உணவு உதவி கிடைத்தால் தான் நாடெங்கும் பரவும் பஞ்சத்தை இவர்கள் தடுத்து நிறுத்தலாம்.

இருண்ட கண்டம் மேலும் இருட்டடிக்கப்படுவது தடுத்து நிறுத்தப்படுமா?



ஏ. ஜே. ஞானேந்திரன்

# பஞ்சமும் பரிதாபமும்

வாழ்க்கையில் மனிதனின் அத்தியாவசிய தேவைகள் என்ற பட்டியலில் முதலிடம் வகிப்பது தான் உணவு. இந்த ஒரு சாண் வயிற்றை நிரப்ப அவன் படாதபாடெல்லாம் படவேண்டியுள்ளது. ஒரு சாராருக்கு தேவைக்கு அதிகமாக மூக்கு முட்ட உணவு கிடைத்தாலும் இன்னொரு சாராருக்கு ஒரு வேளை உணவு கிடைப்பது என்பதே பெரும்பாடாக இருக்கின்றது. இவர்கள் அன்றாட உழைப்பு, வயிற்றை நிரப்பவே போதாத நிலையில் இவர்கள் வாழ்க்கை என்பது போராட்டமாகவே இருக்கின்றது. வடகொரியா என்பது இன்றைய உலகில் இன்னமும் கம்யூனிஸத்தைத் தழுவிக் கொண்டிருக்கும் ஒரேயொரு நாடு.

இந்த நாட்டில் உணவுப்பஞ்சம் என்பது உச்சக்கட்டத்தைத் தொட்டிருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இந்த நாட்டிற்கு கிடைக்கும் நன்கொடை உணவுகளை விநியோகம்செய்து வரும் ஐ.நா.சபையின் உணவு விநியோகப் பிரிவில் பணியாற்றும் அதிகாரி ஒருவர் அண்மையில் வடகொரியாவில் ஆய்வு ஒன்றை மேற்கொண்டு பல திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

சாப்பிடப் போதிய உணவு இல்லாததால் இங்குள்ளவர்கள் புல்லையும் கடற்தாழையையும் சாப்பிட்டு உயிர்வாழ முற்பட்டிருக்கின்றார்கள் என்பதே அந்தத் தகவல். தாம் வேலைக்குப் போவதையும் பாடசாலைக்குப் போவதையும் நிறுத்திவிட்டு கைகளில் சாக்குகளுடன் மலைப்பகுதிகளுக்குச் சென்று புல் நிரப்பி வருகின்றார்கள் என்று கூறுகின்றார் இந்த அதிகாரி.

ஏனிந்த அவல நிலை?

இதுவரையில் நன்கொடையாகக் கிடைத்து வந்த தானியங்களின் அளவு குறைந்து விட்டது. இதனால் எதிர்வரும் ஆகஸ்ட் வரை ஒரு மில்லியனுக்கு மேற்பட்டவர்களுக்கான உணவு விநியோகத்தை தற்காலிகமாக நாம் நிறுத்தவேண்டி



வந்துள்ளது என்று தெரிவிக்கின்றார் இந்த அதிகாரி.

1948 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 ஆம் திகதி தான் வடகொரியா பிறந்தது. 1945 இல் வடகொரியாவை சோவியத் ஒன்றியம் மெல்ல ஆக்கிரமித்துக் கொண்டது. தெற்கை அமெரிக்கா பிடித்துக் கொண்டது. என்றாலும் அந்நிய நாடுகளின் ஆதிக்கங்களால் 1950

(27ம் பக்கம் பார்க்க)



# உயருகின்ற உற்சாகம்

குடி குடியைக் கெடுக்கும் என்கிறார்கள். ஆனால் இந்தக் குடியைக் கைவிடப் பலர் தயாராக இல்லை. இந்த உற்சாகப் பானம் எந்த நாட்டை விட்டு வைத்திருக்கின்றது? வெவ்வேறு பெயர்களில் வெவ்வேறு நாடுகளில் பலருக்குப் போதையூட்டிக்கொண்டு தன் நற்பணியைத் தொடர்ந்தபடி தான் இருக்கின்றது. குடிப்பவர்கள் குடித்துக் கொண்டிருக்க பல குடிபானங்களுக்கான விளம்பரங்களும் தொடர்ந்தபடி தான் இருக்கின்றன.

''காதல் என்பது உலகை இயங்க வைக்கின்றது. ஆனால் விஸ்கியோ இதை விட இரண்டு மடங்கு வேகமாக உலகை இயங்க வைக்கின்றது'' என்று கூறியிருக்கின்றார் ஒரு ஆங்கிலேயர்.

இந்தக் கூற்றை நிரூபிப்பது போல உலகின் மிகப் பிரபலமான ஸ்கொட்ச் விஸ்கியின் விற்பனை கடந்த சில வருடங்களாக அசுர வளர்ச்சியைக் கண்டு வருகின்றது. கடந்த வருடம் இதனுடைய விற்பனை. முதற் தடவையாக ஒரு பில்லியன் போத்தல்களைத் தாண்டி சரித்திரம் படைத்துள்ளது என்கின்றன புள்ளி விபரங்கள்.

முன்பெல்லாம் இந்த ஸ்கொட்ச் விஸ்கி, சில குறிப்பிட்ட நாடுகளின் டார்லிங்காகவே இருந்துள்ளது. பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளிலும் காலனித்துவ நாடுகள் சிலவற்றிலும் ஆச்சரியப்படத்தக்க வகையில் ஜப்பானிலும் ஸ்கொட்ச் விஸ்கியின் சுவை பரவியிருந்தது.

ஆனால் இன்றோ நிலைமை மாறியிருக்கின்றது.

ஸ்கொட்ச் விஸ்கி பிரியர்களாக இன்று முதலிடத்தில் பிரான்ஸ் குடிமக்கள் நிற்கின்றார்கள். அடுத்தஇடத்தை ஸ்பெயின் கைப்பற்றியுள்ளது. முதல் பத்து இடங்களைப் பிடித்த நாடுகளின் பட்டியலில் தென் கொரியா, வெனிசூலா, கிறீஸ் போன்ற நாடுகள் இணைந்து பலரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளன.

குறிப்பாக ஜப்பானிலும் தென் கொரியாவிலும் ஆண்டுக்கு ஆண்டு விஸ்கி ஏற்றுமதித் தொகை மூன்றிலொரு பகுதியால் அதிகரித்து வருவது ஓர் அசாதாரண நிகழ்வாக கருதப்படுகின்றது.

''மதுபானம் அருந்தும் இளைஞர் கூட்டம், ஒரு விஸ்கியின் சரித்திரத்தை விட, அதன் பெயருக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றது' என்கிறார் பிரபல்யமான சில ரக விஸ்கிகளை உற்பத்தி செய்யும் நிறுவனத்தின் அதிபர்.

ஸ்பெயினில் சில ரக விஸ்கிகள், இளைஞர்களிடையே மிகப் பிரபலமாக இருப்பதற்கு இதுவே காரணம் என்கிறார் இவர்.

விஸ்கி என்றால் பலருக்கும் ஸ்கொட்லாந்தின் ஞாபகந்தான் வரும். ஆனால் விஸ்கி தயாரிப்பில் ஈடுபடும் ஒரேயொரு உலக நாடு இது என்று சொல்வதற்கில்லை.

உலகிலேயே அதிகமாக விற்பனையாகும் விஸ்கி என்ற பெருமை எதற்குண்டு தெரியுமா?


நிஜம் எப்பொழுதுமே ஆச்சரியமானது. MAE KHONG என்ற பெயருடன் தாய்லாந்தில் விற்பனையாகி வரும் விஸ்கி தான் உலகிலேயே மிக அதிக அளவில் விற்பனையாகி வரும் விஸ்கி என்கிறார்கள். இது தாய்லாந்தில் மிகப் பிரபல்யம் பெற்ற ஒன்றாகஇருப்பினும் வெளிநாடுகளில் இது பலருக்குத் தெரியாத ஒன்று.

இரண்டாவது இடத்தில் இருப்பது ஜப்பானிய நிறுவனம். SUNTORY இன் தயாரிப்பில் சந்தைக்கு வரும் விஸ்கி. இந்த நிறுவனம் வேறு பல உற்பத்திகளிலும் ஈடுபட்டிருக்கின்றது. விஸ்கி விளம்பரத்திற்காக இவர்கள் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை.

ஸ்கொட்ச் விஸ்கி வெளிநாடுகளில் விற்பனையாகுமளவிற்கு பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் விற்பனையாவதில்லை என்பது உற்பத்தியாளர்களின் கவலையாக இருக்கின்றது. இந்த விஸ்கி இவர்களிடையே பழைய சரக்காகி விட்டது என்பது இவர்கள் அபிப்பிராயம்.

வாடிக்கையாளர்கள் விஸ்கி மீது கொண்டுள்ள தீராத மோகம் உற்பத்தியாளருக்கு இன்ப வெறி ஊட்டப்போவது நிச்சயம்.

# வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?



**அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.**

வீட்டுப்பெண்ணா அல்லது குழந்தை பராமரிப்பவரா? வேலை செய்கிறீர்களா அல்லது வேலையில்லையா? பள்ளிமாணவரா? எவராயிருப்பினும் உங்களால் நஷ்டஈடு பெற முடியும். நீங்கள் சாரதியாகவிருந்தாலும், பாதசாரியாகவிருந்தாலும், பேரூந்தில் பயணிப்பவரானாலும், சைக்கிளில் செல்பவரானாலும் இன்னும் தவறு உங்களுடையதாக இருப்பினும் கூட உங்களால் நஷ்டஈடு பெற முடியும்.

**உங்கள் அறியாமையால் வாரத்திற்கு**
**$1000.00**
**வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்**

**ஒன்ராறியோவில் மிகப்பெரும் ஸ்தாபனம்**

## கனடாவில் எங்களுக்கு 30 வருடத்திற்கும் அதிகமான அனுபவம் உள்ளது

பண இழப்பீட்டு தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய



## UNITED PERSONAL INJURY ASSOCIATES

*The Car Accident People*



**பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்**

### உங்களுக்குத் தெரியுமா?



இந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் **$172,000.00** வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடாக பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

### விபத்து உங்கள் தவறானாலும் கூட

உங்களால் **$172,000.00** டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400.00** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும். மனரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள் **"யுனைட்டட்"** (நாம் 25இற்கும் அதிகமான மொழிகளில் சேவையாற்றுகிறோம்)

இலவச ஆலோசனைகளுக்கும்
தமிழில் தொடர்புகளுக்கும்
இன்றே அழையுங்கள்

**தீபன் (416) 505-9804**

- *5255 Yonge Street, Suite 200, North York (South of Finch, Head Office)*
- *257 Dundas Street. E, Unite 1, Mississauga (Dundas and HWY 10)*
- *29 King Street E, Unit 7, Kitchener*



# WOODBINE BANQUET & CONVENTION CENTER

**HWY#27 & REXDALE BLVD.**





உங்கள் திருமண, பூப்புனித நீராட்டு விழா
மற்றும் சகல வைபவங்களையும் சிறப்பாக
கொண்டாடிட தொடர்பு கொள்ளுங்கள்.
50 பேர் முதல் 1500 பேர் வரை உபசரிக்க
கூடிய சொகுசு மண்டபம்.





மேலதிக தொடர்புகளுக்கு
GIRI OR PERRY
TEL: 416 704 9755, 416 917 1518
FAX:416 746 1053

# இனப்பிரச்சினையும் இலங்கைத் திருச்சபையும்

# சிங்கள தமிழ் இனமுரண்பாட்டை இறையியலாக்கம் செய்தல்!



எஸ்.ஜே.இம்மானுவல்

**இயல் ஒன்று**

இலங்கைத் தீவு 450 வருடங்களுக்குப் பின்பு அந்நிய ஆட்சியில் இருந்து விடுபட்டு 1948ம் ஆண்டு தொடக்கம் ஓர் சுதந்திர நாடாகக் கணிக்கப்படுகின்றது. கடந்த 50 ஆண்டுகளாக பெரும்பான்மை இனமான சிங்களவர்களுக்கும் சிறு பான்மையினரான தமிழருக்குமிடையில் இனமுரண்பாடு வளர்ந்து வந்திருக்கிறது. கடந்த 20 வருடங்களிலும் இம் முரண்பாடு தீவிரமடைந்து போரும் வன்முறையுமமாக உருவெடுத்திருக்கின்றது. இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையிலே தொடர்கின்ற இப் போர் தமிழ் மனித மாண்பையும் தமிழ் இனத்தையும் அதன் சொத்துக்களையும் அதன் தாயகத்தையும் பல வழிகளிலும் அழிக்கும் ஓர் அநீதிப் போராக வளர்ந்து விட்டது.

இப் போர் தமிழ்ப் பயங்கரவாதத்திற்கு எதிரானதென அரசதரப்பினர் கூறிக்கொண்டாலும் இது பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் சிறுபான்மைத் தமிழர்களுக்கும் இடையில் நிலவிய நெடிய முறுகலின் இறுதிக் கட்டமும், சிதைந்த இன உறவின் அகோர வடிவமும் ஆகும். 50 வருட காலமாக இவ் இன முரண்பாட்டின் தாக்கங்களையும் அதன் விளைவாக நேர்ந்த வன்முறைகளையும், கொடூர போரின் அழிவுகளையும், அனர்த்தங்களையும் தமிழ் இனம் சுமக்கின்றது. இவை அனைத்தையும் உண்மை நீதி அடிப்படையில் சமாதான முடிவிற்கு கொண்டு வர உழைக்கும் சகல மதத்தலைவர்களும் இப் போரின் நீள அகல ஆழத்தை தெளிவாக உணர்வது அவசியம்.

**தமிழர்களின் கழுத்தை நெரிக்கும் போர்**

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையிலான இந்தப் போரிலே பல படிமானங்கள் உள்ளன. அரசு தமிழர்களின் ஜனநாயக உரிமைகளை மறுத்து அவர்களின் ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை அழித்ததும், ஆயதப் படைகளின் உதவியோடு கொடூரமாக அடக்கியதும் (1956 தொடக்கம்) அரச படைகளுக்கு எதிரான தமிழரின் ஆயதப்போராட்டம் (1983) உதயமாவதற்கு வழிகோலியது.

இவ் இனப்போரானது ஒரு சாதாரண பயங்கரவாதப் பிரச்சனை மட்டுமே என்று அரசு கூறி சாதாரண அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கும் அளவிற்கு இப்போர் எல்லை மீறிச் சென்றுவிட்டது. அரசு தனது மனிதஉரிமை மீறல்கள் பற்றி மறுப்பு அறிக்கை விடுகின்றது. கப்பல் மூலம் சில அடிப்படைத் தேவைகளை அனுப்பினாலும் வடக்கில் உள்ள முழுத் தமிழ் மக்களின் வாழ்வியலைப் பாதிக்கும் மனிதாபிமானமற்ற தடைகளையும் சட்டங்களையும் விதித்துள்ளது.

விடுதலைப் புலிகளிடம் இருந்து தமிழர்களை விடுவிக்கும் நடவடிக்கை என்று கூறி அரசு தனது செயற்பாடுகளை நியாயப்படுத்த முயற்சித்து அப்பாவிப் பொதுமக்களைக் கொல்லுவதிலும் அவர்களின் உடமைகளை அழிப்பதிலும் ஈடுபடுகிறது. நுளம்பைச் சுத்தியலால் கொலை செய்யும் ஒரு முயற்சி இது. இம் முயற்சியின் வழி இப் போரை வடகிழக்கில் வாழுகின்ற அனைத்துத் தமிழ் மக்களுக்கும் எதிரான ஓர் இன ஒழிப்பு நடவடிக்கையாக அரசாங்கம் மாற்றியுள்ளது.

தமிழ் மக்களுக்காக அவர்கள் மத்தியிலும் தமிழ்ப் பிரதேச எல்லைகளில் நின்றும் விடுதலைப் புலிகள் அரச படைகளோடு போராடுகின்றனர். இவ் விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தமிழர்களின் காவலர்களாக, பிரதிநிதிகளாகத் தம்மைத் தாமே கட்டியெழுப்பி உள்ளனர். இன்னும் மிஞ்சியிருக்கும் உயிர்களை உடமைகளை அழிப்பதன் மூலம் அரசு போரில் வெற்றியீட்டலாமென எண்ணுகின்றது. ஆனால் அது மயான அமைதியையே கொண்டுவரும். 18.000 அதிகமான விடுதலைப் போராளிகளையும் 60.000க்கு மேற்பட்ட பொதுமக்களையும் இப்போரர் பலிகொண்டுள்ளது. இந்நிலையில் படிப்படியாக இராணுவ ரீதியிலும், பொருண்மிய தன்நிறைவிலும், புலம்பெயர் மக்கள் அணியின் பின்புலத்திலும் தமிழர்களின் சுதந்திரப் போராட்டம் கொள்கைப் பற்றுடன் முனைப்படைந்து வருகின்றது. முழு வீச்சுடன் முகழ்ந்துவரும் இப்போராட்டம் தணிந்துவிடும் என்பது வெறும் கற்பனையே!

இதன் கொடூர விளைவாக இன்று 800.000 தமிழர் வெளிநாடுகளில் தஞ்சம் கோரித் தவிக்கின்றனர் அதே தொகையினர் உள் நாட்டில் இடம் பெயர்ந்து உணவு உடை உறவிடமின்றி காடுகளிலும் கரையோரங்களிலும் வாழத் துடிக்கின்றனர். இதைத் தவிர கணக்கிட முடியாத அளவில் வடகிழக்கு தமிழ் பிரதேசங்களின் உள வளங்கள் அரச படைகளினால் அழிக்கப்படுகின்றன. ஈழத்தில் பிறக்கும் குழைந்தகளும் வளரும் சிறார்களும் அடிப்படை வசதிகளின்றி வாழ்க்கையில் பின் தங்கிய சந்ததியாக குன்றிப்போகின்றன.

ஒரு பக்கத்தில் ஈழத் தமிழ் இனம் மேற்கூறியவாறு வேருடன் அழிந்து கொண்டு போகின்றது. மறு பக்கத்தில் சிங்கள இளைஞர் யுவதிகளின் அழிவும் முழுத் தீவின் பொருளாதார வீழ்ச்சியும் அதிகரித்துக் கொண்டே போகின்றது. இச்சூழமைவு இரு இனங்களையும் முழுத் தீவையும் திரும்ப முடியாத அழிவு நிலைக்கு வேகமாகத் தள்ளுகின்றது.

இக் கொடூரமான வாலாற்று வளர்ச்சியில் இலங்கைத் தீவில் வசிக்கும் அனைவரும் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பல உண்டு. ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிறுவனமும் கடந்த காலத்தில் தாம் இழைத்த தவறுகளை உணர்வதும் எதிர்காலத்தில் தாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை உணர்வதும் மிக முக்கியம்.

**இனமுரண்பாடு சீரடைவதில் திருச்சபையின் ஈடுபாடும் எதிர் நோக்கும் கடமைகளும்**

போரை நிறுத்துவதிலும் வன்முறைகளைத் தணிப்பதிலும் இன ஒற்றுமை சமாதானத்தை ஏற்படுத்துவதிலும் மதங்களின் கடமைகள் மிக முக்கியமானவை. இவற்றுள் கிஸ்தவர்களினதும் கிறிஸ்தவ திருச்சபைகளினதும் கடந்த காலப் பொறுப்பு எப்படியாயிருந்தது, நிகழ்காலப் போக்கு எப்படி இருக்கின்றது எதிர்காலப் பொறுப்பும் கடமையும் எப்படியாய் அமைய வேண்டும் என்பனவற்றை ஆராய்வது எமது நோக்காகும்.

அனைத்துப் பௌத்தர்கள் சிங்கள இனத்தவராயும் அனைத்து இந்துக்கள் தமிழ் இனத்தவராயும் இருக்கின்றனர். ஆனால் கிறிஸ்தவர்கள் போர் தொடுத்திருக்கும் இரு இனத்தவரைரயும் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். இவ் அகோர இன முரண்பாட்டு நிலையில் இரு இனங்களையும் கொண்ட கிறிஸ்தவ திருச்சபைகள் போர் வன்முறை அல்லது அதன் விளைவுகளில் இருந்து விலகிநிற்க முடியாது. இரு இனங்களிலுமிருந்து அங்கத்தவர்களைக் கொண்ட இத்திருச்சபை உண்மைக்கும் நீதிக்கும் சாட்சியம் அளித்து, இத் தீவு மக்களுக்கிடையில் புரிந்துணர்வையும் சமாதானத்தையும் ஒற்றுமையையும் கட்டி எழுப்ப அரும் பெரும் பணி புரிய கடமைப்பட்டிருக்கின்றனர். இக் கடமையில் தவறின் இச் சபைகளின் நம்பத் தகைமையும் அவற்றின் நற்செய்திப் பணியும் கேள்விக் குறிகளாகிவிடும் ஆபத்து தோன்றும்.

இரு இனங்களுக்கும் இடையில் நிலவிய உறவுகள் இவ்வளவாக சிதைவடைந்ததற்கு பல காரணங்கள் உண்டு. ஆனால் இனங்களுக்கிடையில் ஒற்றுமையை உருவாக்க தனிப் பெரும் வசதிகளை கொண்டிருந்த கிறிஸ்தவ திருச்சபைகள் இச்சிதைவடைந்த தவறின் பெரும் பங்கை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். அது மாத்திரமல்ல. கடந்த கால தவறிற்கு ஈடாக இன்று பரித்தியாகங்கள் ஆபத்துகள் நிறைந்த பணிக்கு துணிவுடன் செயற்பட அழைக்கப்படுகின்றன. பல உயிர்களையும் உடமைகளையும் விழுங்கிக் கொண்டிருக்கும் இப்போரின் மத்தியில், நாட்டில் நீதியான சமாதானத்தை உருவாக்க கிறிஸ்தவ திருச்சபைகளுக்கு அவசர அழைப்பு விடுக்கப்படுகின்றது.

ஐரோப்பிய குடியேற்றத்திற்கு முன்பாக இலங்கையில் சிறு தொகை கிறிஸ்தவர்கள் வாழ்ந்திருந்தாலும் குடியேற்ற அரசுகள் பொறுப்பேற்ற பின்னர்தான் கிறீஸ்தவ திருச்சபை முழுமையான ஒரு நிறுவன அமைப்பைப் பெற்றது. இத் தீவு சுதந்திரம் பெற்ற காலங்களில் ஒரு புதிய ஒன்றிணைந்த இலங்கையைக் கட்டியெழுப்ப கிறிஸ்தவ திருச்சபைக்கு வாய்ப்பும் வசதிகளும் அதிகம் இருந்தும், சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அப்பணியைச் செய்யத் தவறி விட்டது. இன்று சிறுபான்மை என்ற தாழ்வு மனப்பான்மையும் அரசியலில் ஈடுபாடற்ற மனோநிலையும் இத் தீவின் கிறிஸ்தவ திருச்சபையை ஒருவித விரக்தி நிலைக்குத் தள்ளியுள்ளது. அதனால் இச்சபைகள் நாட்டின் ஒற்றுமை சமாதானத்திற்கு செய்ய வேண்டிய முக்கிய பணிகள் போதிய அளவு செய்யப் படவில்லை.

நாட்டின் சுதந்திரத்திற்குப்பின் தொடர்ந்த இன ஒதுக்கல்கள், சமவுரிமை மீறல்கள், இனக்கலவரங்கள் மட்டில் இலங்கைத் திருச்சபை ஒருவித அலட்சியப்போக்கையே கடைப்பிடித்தது. வகுப்புவாத அரசியல் சக்திகளின் இனஒதுக்கல் முன்னெடுப்புகளுக்கு இவ் அலட்சியப்போக்கு கைகொடுத்தது. சிக்கல் நிறைந்த இவ் வேளையில் போரின் அழிவுகளாலும் மரணங்களாலும் திருச்சபை விழிப்படைந்துள்ளது என்பது உண்மையாய் இருப்பினும் அது துணிவுடன் தனது இறைவாக்குப் பணியாகிய முழுமனித விடுதலைப் பணியை மேற்கொள்வது அவசியமாகின்றது. இவ் இறைவாக்குப் பணியை, இறைவாக்குப் பண்பை தன்னுள் முழுமையாக உள்வாங்கிய பின்பே திருச்சபை இலங்கையில் உரிய இடத்தைப் பெற முடியும். அது நீதியில் உருவாகும் சமாதானத்துக்குப் பங்களிக்க முடியும்.

நாட்டின் பல் இன-மத மக்கள் மத்தியில் தனது நிலைப்பாடு என்ன என்பதை திருச்சபை தெளிவாக்க வேண்டும். இலங்கையின் சமூக அரசியலில் ஈடுபட தனக்கு இறைவாக்கு வளம் (Prophetic potential) உண்டா என்பதையும் திருச்சபை கேள்விக்குள்ளாக்க வேண்டும். இவ்வாறான ஒரு ஆய்வின் மூலமே தனது பங்களிப்பை நிறைவாக்கிக் கொள்ள முடியும். இனங்களின் முறுகல் நிலை தொடக்கம் இன்றைய போரின் பயங்கர அழிவுகள் ஈறாக பல்வேறு படிநிலைகள் இருந்துள்ளன. இவ் ஒவ்வொரு படிநிலையிலும் திருச்சபையின் அணுகுமுறைகளையும், விடுத்த அறிக்கைகளையும் நோக்கும் பொழுது இத் திருச்சபைக்குள்ளே ஒரு தனித்துவமான இறையியல் செயல் முறை இருந்தது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். ஆனால் போரினால் ஏற்படும் பேரழிவுகளின் விளைவு ஒரு புதிய இறையியல் செய்முறையை உருவாக்குகின்றது என்பதை நாம் அடையாளம் காணலாம்.

(அடுத்த வாரம் தொடரும்)

WEXFORD CASH MART
FINANCIAL SERVICES
• MONEY TRANSFER (WORLDWIDE) • CHEQUES CASHED
பணமாற்றுச் சேவையில் ஒரு புதிய அலை
தொடர்புகளுக்கு கணேசமூர்த்தி
1823A Lawrence Ave. East, Scarborough, ON M1R 2Y3
TEL: (416) 285-7709 • FAX: (416) 752-1548

கொழும்பு, யாழ் மாவட்டம் முழுவதும் இல்லம் தேடிப் பணம் கொடுக்கின்றோம்.
மற்றும் வன்னி மாவட்டம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஸ்கந்தபுரம், புதுக்குடியிருப்பு மல்லாவிக்கும் எமது சேவை

உங்கள் பணம் உங்கள் உறவினரிடம் உயர்ந்த பெறுமதியில் ஒப்படைக்கப்படும்

• தன்னிகரற்ற சேவை
• நம்பமுடியாத சேவை
• ஒப்பற்ற சேவை
• இணையற்ற சேவை

MONEY ORDER
வசதி உண்டு

WESTERN UNION AGENCY
10 நிமிடத்தில் உலகின் எப்பாகத்திற்கும் பணம் அனுப்பலாம்

தொலைபேசி, மின் அஞ்சல், தொலைநகல் எமக்குத் துணை செய்வதில்லை. காடு, மேடு, கானகம் கடந்த சேவை. போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்களில் வாழும் உங்கள் உறவினர் இல்லம் தேடிப் பணம் கொடுக்கின்றோம். பணம் கொடுத்த பின் பதில் பெற்றுத் தருகின்றோம்.

உ
ஓம் சக்தி ஓம்

# ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்



அருமறைகள் தழைத்தோங்க அமுதமொழிதான் விளங்க
இருவினைகள் களைந்தே இன்பவொளிதான் பெருக
மீளா வரமளித்தே எம்மை வந்தாண்டு கொள்ளும்
மிஸிஸாகாப் பதியமர் முத்துமாரியை பணிவோம்.

தேன்தமிழும் சைவமும் விளங்கு மிஸிஸாகாவில்
தேடியெமை யாளும் ஸ்ரீமுத்துமாரி அம்பிகையோடு
நல்வரமளிக்கும் சுந்தரனாம் அரிஹரபுத்திரரையும்
நயமாகப் பணிந்து பதம்தொழ பழவினை அறுமே.

## *ஐயனார் அலங்காரத்திருவிழா விஞ்ஞாபனம்*

### *மெய்யடியார்களே:*

செந்தமிழும் சைவமும் செழித்தோங்க பக்திமயமான மெய்யடியார்கள் சூழ்ந்த மிஸிஸாகா மாநகரில் வீற்றிருந்து தஞ்சமென வருவோர்க்கு வேண்டும் வரம் சுரக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் எழுந்தருளியிருந்து இட்டசித்திகளை வாரி வழங்கும் பூரணபுஷ்கலா சமேத ஹரிகரபுத்திரப் பெருமானுக்கு நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் ஆனிமாதம் 30ம்(14-07-02)நாள் ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடிமாதம் 08ம்(23-09-02)நாள் செவ்வாய்க்கிழமை வரை பத்து நாட்கள் அலங்காரத்திருவிழா நடைபெற்று 24-07-02 புதன்கிழமை ஐயனார் திருக்கல்யாண வைபவமும் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

முதலாம்,பத்தாம் நாளில் அஷ்டோத்தரசத (108) சங்காபிஷேகமும்,

25-07-02 வியாழக்கிழமை வைரவர் பொங்கலும் நடைபெறும்.

மாலை 5.30மணி - நவகலசஅபிஷேகம்
6.45மணி - கூட்டுப்பிரார்த்தனை
7.30மணி - விஷேடபூஜை, ஐயனார்வீதியுலா,பிரசாதம்வழங்கல்

சங்காபிஷேகம் மாலை 5.00மணிக்கு ஆரம்பமாகும்.

9ம் நாள் (22-07-02) திங்கட்கிழமை இரவு தங்கத்தேரில் ஐயனார் வீதியுலா வரும் திருவருட் காட்சியும் இடம் பெறும்.

23-07-2002 செவ்வாய்க்கிழமை பௌர்ணமி. மாலை அம்பாளுக்கு அபிஷேக ஆராதனையும் மஹாமேருயந்ர பூஜையும் இடம்பெறும்.

பிரதம குருக்கள் - சுவாமி சோமேஸ்வரக்குருக்கள்.
உதவிக்குருக்கள - ராம்.சர்வலோகேஸ்வரக்குருக்கள்.

மங்கள வாத்தியம் - தேவஸ்தான மங்கள இசைக்குழுவினர்.
நாதஸ்வர தவில் மியூஸிக் ஒவ்(f) கனடா


பக்தி நேரகால நியமம் தவறாமல் பூஜை வழிபாடுகள் நடைபெறும் இத்தேவஸ்தானத்தில் திருவிழா காலத்திலும் இவை அனுஷ்டிக்கப்படும். அடியார்கள் அபிஷேகம் பூஜைக்குரிய பொருட்களை கொடுத்துதவி ஐயனார் திருவடிகளை வேண்டி திருவருள் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

3057 Universal Drive
Mississauga
(905) 602 2068 தொலைநகல் 629 2050
www.a baltemple.org

சுவாமி சோமேஸ்வரக்குருக்கள்
பிரதமகுருக்கள்,அறங்காவலர்


இடியப்ப மெசின்

வர்த்தக ஸ்தாபனங்களுக்கான மிகவும்
புதிய தொழில் நுட்பத்துடன் கூடிய
அதி திறன் கொண்ட இடியப்ப மெசின்
1மணி நேரத்தில் 3000
இடியப்பத்திற்கு மேல் தயாரிக்கலாம்
மற்ற மெசின்களுடன் ஒப்பிடும்போது
75 சத வீத தயாரிப்புச் செலவு மிச்சம்




**LIFE TIME WARRANTY**
**TROUBLE FREE**

கல்யாணி, சுவையகம்,
ஆனந்தபவன் மற்றும்
பல ஸ்தாபனங்களில்
பாவனையில் உள்ளது
போலிகளை நம்பி
ஏமாறாதீர்கள்


வீட்டுப் பாவனைக்கான இடியப்ப மெசின்

**SEYON GROUP**
Tel: (416) 291-5656 Fax: (416) 609-9889
205-3852, Finch Avenue East, Scarborough, Ontario M1T 3T9.



# IMPORTANT LEGAL ANNOUNCEMENT

The new Immigration and Refugee Protection Act comes into effect on June 28, 2002. As a result the old PDRCC appeal program for reject cases is discontinued and in its place will be the PRRA-Pre Removal Risk Assessment Anyone whose PDRCC Appeal is pend ing or even refused will be re-assessed under PRRA. To qualify under PRRA, a refugee must wait to be notified by Canada Immigration that an application can be submitted. If submitted with in 15 days of notification, there will be an automatic stay of removal until the decision under PRRA is made. If the application is submi tted after the 15 day period, removal is not stayed. It is therefore cri tical that Canada Immigration has your current address such that your notification to apply under PRRA will be received on time. Please note that Canada Immigration is not the same as the Immigration and Refugee Board.

All affected clients and any interested parties are urged to contact our office immediately to ensure that you will be eligible for review under PRRA

Serving the Tamil Community

MAX BERGER & ASSOCIATES
BARRISTERS & SOLICITORS
AT THE POLO CENTRE
1033 BAY STREET - SUITE 207
TORONTO -ONTARIO
M5S 3A5
Tel: (416) 969 - 9263
Fax: (416) 969 - 9098

MAX BERGER & ASSOCIATES
BARRISTERS & SOLICITORS
507 PLACE D' ARMES
ALDRED BUILDING
SUITE 1200
MONTREAL -QUEBEC
H2Y 2W8
Tel: (514) 731 - 1144
Fax: (514 )842 - 9983

Net; www,maxberger.ca E-Mail; max @ maxberger.ca



# Heritage

Alliance Education Funds Inc
Launch an exciting career
with one of
Canada's RESP leaders

We're looking for self -motivated individualsdedi- cated to helping parents start Registered Education Savings Plans (RESP) for their children We need Tamil speaking Officers to help parents understand recent changes like the Federal Government's ini- tiative of maximizing RESP dollars with a 20% Savings Grant .Join the Heritage Team and you' ll enchance your future as well as the future of chil- dren. Heritage offers flexible working arrangements and growth opportunities within our national, inde- pendent agency network.


Contact me for emloyment information :
Mrs.D.Raja
Tel (416) 756-3409 (416) 939 - 6144
Fax ( 416)756- 9411

# குரு பூர்ணிமா

## ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் ஆச்சிரமம்

## கியூபெக் - கனடா

## ஜூலை 19, 20, 21, 22, 23, 24



தெய்வ அவதாரமென மக்களால் போற்றப்படும் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் ஓர் ஞானம் பெற்ற தமிழ் மகானாவார். இவர் இந்தியாவில் தமிழ்நாட்டில் பாபநாசம் என்னும் ஊரிலே ஓர் பக்தியும் பாரம்பரியமும் மிக்க தமிழ்க் குடும்பத்தில் 1956 ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி அவதரித்தார்.

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரர் அவதரித்த போது பல அற்புதங்கள் நிகழ்ந்தன. தனது நான்காவது வயதில் முழு "பகவத்கீதை"யையும் சமஸ்கிருத மொழியில் சொல்லி அதற்கு விளக்கமும் கொடுத்த போது மிகவும் படித்த பண்டிதர் களே அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தனர்.


குழந்தைப் பருவத்திலேயே நீண்ட நேரத்தை தியானத்திலும் தனிமையிலும் கழிப்பதை அவருடைய பெற்றோர்கள் கண்டனர். எட்டு வயதில் புராண இதிகாசங்களைப் படிக்கத் தொடங்கிய ஸ்ரீ ரவிசங்கரர் தனது பதினேழு வயதிற்குள் வேதபாடம் நவீன விஞ்ஞானம் இரண்டையும் கற்றுத் தேர்ந்தார்.

பின்னர் இமயமலையில் ரிஷிகேசத்தில் நீண்டகாலம் தியானத்தில் இருந்த ஸ்ரீரவிசங்கரர் "வாழும் கலை" என்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்து யோகம், ஞானம், பக்தி ஆகியவைகளை மிகவும் எளியமுறையில் மக்களுக்குப் போதிக்கலானார்.

தமிழ் நல்லுலகில் தோன்றிய மிகச்சிறந்த ஜீவன்முக்தரான ஸ்ரீ ரவிசங்கரருக்கு இந்தியா, ஜேர்மனி, கனடா ஆகிய நாடுகளில் பெரிய ஆச்சிரமங்களும் 130 நாடுகளில் கிளைகளும் உண்டு.

### ஆச்சிரமத்திற்குச் செல்லும் வழி

ஆச்சிரமத்திற்கு செல்லும் வழி :




ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரர் ஆச்சிரமம்
St-Mathu du Park
Shawinigan, Quebec

ஆச்சிரமத்திற்கு செல்லும் வழியில் ஏதாவது சிரமங்கள் ஏற்பட்டால் கீழ்வரும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

ஆச்சிரம் தொலைபேசி இல :
**(819) 532-3328**

**Centre L' Art de Vivre**
**de Saint - Mathieu - du - Parc**
Shawinigan, Quebec

கனடாவில் கியுபெக் மாநிலத்தில் ஏரிகளும் மலைகளும் சூழ்ந்த அழகும் அமைதியும் நிறைந்த "சுசானிக்கன்" என்ற இடத்தில் 300 ஏக்கர் நிலப்பரப்பில் ஸ்ரீரவிசங்கரர் ஆச்சிரமம் அமைந்துள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் குருப்பூர்ணிமா தினத்தை முன்னிட்டு 19.20.21.22.23.24 திகதிகளில் கனடா ஆச்சிரமத்தில் பக்தர்களுக்கு குருதேவர் ஸ்ரீரவிசங்கரர் தரிசனம் கொடுப்பார்.

ஞானம் பெற்ற தமிழ்குருவான ஸ்ரீரவி சங்கரரின் தரிசனம் பெற்று தமிழில் அவருடன் அளவளாவி குருதேவரின் அன்பையும் அருளையும் ஆலோசனைகளையும் பெற்று நல் வாழ்க்கை வாழ உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிற்பகல் 6.00 மணியில் இருந்து 9.00 மணி வரை நடைபெறும் "சத்சங்கத்தில்" கலந்து கொள்வது மிகவும் நற்பலன்களைத் தரும்.

ஆச்சிரமத்திற்குச் செல்லும் நெடுஞ்சாலை
HWY 40 EAST - EXIT 196
55 NORTH - EXIT 217
HWY 351

நீச்சல் தெரியாதவர்கள் தனியாக ஏரியில் நீந்தவோ அல்லது படகு ஓட்டவோ வேண்டாம் என்று ஆச்சிரமம் கேட்டுக் கொள்கிறது.

Wed site: www.artofliving.org
de - saint-mathieu - du - parc
Shawinigan - Quebec

## உருளும் உலகி...

(21ம் பக்கத் தொடர்ச்சி)

இல் போர் வெடித்தது 53வரை தொடர்ந்து கொரிய நாடு, வடக்கு தெற்கு என்று பிரிந்தது.

வடகொரிய ஆட்சியாளரான கிம் இல் சொங், வடகொரியாவை ஏறத்தாழ 50 வருடங்கள் ஆண்டபோது ஆட்சியில் தடுமாற்றம் இருக்கவில்லை. மக்கள் பசி,பட்டினி என்று பரிதவிக்கவுமில்லை.

ஆனால் அவர் 1994 இல் இறந்து போது தான் நாட்டின் கோலமே மாறிற்று. இவரது மகனை, கம்யூனிஸக் கட்சியின் தலைவராக ஏற்க யாருமே தயாராக இல்லை. நாட்டுக்குள்ளே குழப்பம்உ யர் மட்டத்தில் பல மாற்றங்கள் . 1997 இல் தான் இவர் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்க ப்பட்டார். 1998 இல் இராணுவ உயர் அதிகாரிகளை எப்படியோ கைக்குள் போட்டுக்கொண்டு இராணுவப்படையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

இன்றைய பொருளாதார நிலை, தென்கொரியாவில் மிக மோசமாக இருக் கின்றது. கடந்த மே மாதம் வழமையாகக் கிடைப்பதில் அரைப்பங்கே நன்கொடை உணவாகக் கிடைத்ததால் உணவு விநியோகத் தொகை 675,000 பாடசாலைப் பிள்ளைகளாகவும் 350,000 முதியவர்களாகவும் குறைக்கப்பட்டது. இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தினத்திற்கு 350 கிறாம் உணவு மாத்திரமே கிடைக்கும். இந்த அளவு உலக சுகாதார ஸ்தாபனத்தின் சிபார்சில் பாதித்தொகை தான் என்பதை இங்கே குறிப்பிட்டாகவேண்டும். பாடசாலைக்க மாணவர்கள் வரவு பெரு வீழ்ச்சி கண்டு கொண்டு போகின்றதாம். 25 மாணவர்கள் கொண்ட மூன்றாம் ஆண்டு மாணவர்களிடம் கடந்த மாதம் எத்தனை பேர் மாமிசம் சாப்பிட்டிருந்தீர்கள் என்று கேட்கப்பட்டபோது மூவர் தான் ஆம் என்று பதில் அளித்திருக்கின்றார்கள்.

பசியும் பட்டினியும் பல உயிர்களை மாய்க்கப்போகின்றன என்பது திண்ணம்.

## மரண அறிவித்தல்



### மாணிக்கவாசகர் விஜயவர்மன்

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட EXPO VIDEO COMPLEX நிறுவனத்தின் உரிமையாளரான மாணிக்கவாசகர் விஜயவர்மன் அவர்கள் 21.06.2002 வெள்ளியன்று காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி மாணிக்கவாசகர் - யோகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் திரு.திருமதி செல்வரட்ணம் தம்பதிகளின் அன்பு மருமகனும் ரேணுகாவின் அன்புக் கணவரும் லருசனின் அன்புத் தந்தையும் மகாலிங்கம் (ஜெர்மனி), விக்ரமன் (ஜெர்மனி),விமலாதித்தன்(இந்தியா),விக்கி னேஸ்வரன் (லண்டன்),ராகினி (இலங்கை), காலஞ் சென்ற றஜினி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ரதி(ஜெர்மனி), சந்திரா(ஜெர்மனி),லதா (இந்தியா), தயாபரன் (ITN இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரிகைகள் 26.06.2002 புதன்கிழமையன்று இல 7 கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக தாவடி இந்து மயான த்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 00 49 2306 3387,
00 49 69 950 79 088 ஜெர்மனி
00 94 21 3100 - யாழ்ப்பாணம்

## தமிழகம் திரும்பும் வை.கோ. கைதாவாரா?.....

(8ம் பக்கத் தொடர்ச்சி)

அப்போதைய மத்திய அரசு வழக்குப் போட்டது. அதில் சசிகலாவும் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டார். நான்கைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இந்த வழக்கு சமீபத்தில் மூடப்பட்டது. இப்படி விசாரணையில் இருந்த ஒரு வழக்கு மூடப்பட்டதற்கு பெரா சட்டமே மாற்றியமைக்கப்பட்டது தான் காரணம் என்று விளக்கம் கூறப்பட்டது. ஆனால் அன்னியச்செலாவாணி விவகாரங்களைக் கவனிக்கும் மத்திய அமைச்சப் பொறுப்பில் ம.தி.மு.க. வைச் சேர்ந்த மந்திரி ஒருவர் இருப்பதை அடிப்படையாக வைத்துக் கொண்டு இந்த விவகாரத்தில் ஜெயலலிதாவுக்கு ம.தி.மு.க. உதவியிருக்கக்கூடும் என்ற யூகங்கள் கிளம்பின.

ஜெயலலிதா மீதான மத்திய அரசு வழக்கு தங்களுக்கு தெரியாமல் கைவிடப்பட்டதற்கு காரணம் தெரியாமலும், தங்களை கலந்து பேசாமல் முடிவெடுத்ததைக் கண்டும்அதிருப்தியில் இருந்த தி.மு.க. இதன் பின்னணி குறித்து ஆழமாக தோண்டத் துவங்கியதில் தான் இந்த சந்தேகம் அக்கட்சிக்கு ஏற்பட்டதாகத் தெரிகிறது.

தே.ஜ.கூட்டணி அரசின் இருந்து கொண்டு திரைமறைவில் அ.தி.மு.க.வுக்கு ம.தி.மு.க. உதவி வருகிறதோ என்ற சந்தேகப் பார்வை கொண்டிருந்த தி.மு.க.வையும் மற்ற அரசியல் கட்சிகளையும் திசை திருப்புவதற்கான அரசியல் நாடகம் தான் இந்தக் கைது அறிவிப்பு என்கிறது அறிவாலய வட்டாரம்.

ஆனால் ஆளும் கட்சி வட்டாரமும் அதன் ஆதரவுபக்கட்சி வட்டாரமும் இதை திட்டவட்டமாக மறுக்கின்றன. புலிகள் விவகாரத்தில் கடுமையான நிலையை உறுதியாக மேற்கொண்டுள்ள முதல்வர் ஜெயலலிதாவுக்கு அச்சுறுத்தல் இருந்த வருகிறது. அதிலும் புலிகளின் அமைதிப் பேச்சுக்கு ஆதரவு தெரிவிக்காமல் பிரபாகரனை கைது செய்ய வேண்டும் என்று சட்டசபையில் தீர்மானம் போட்டதில் இருந்து அவரது உயிருக்கு புலிகள் அச்சுறுத்தல் அதிகமாகியுள்ளதாக கூறப்படுகிறது.

அதன் காரணமாகத் தான் திருவண்ணாமலை கும்பாபிஷேகத்திற்கு கூட முதல்வரால் செல்லமுடியவில்லை. அப்படியொரு நிலைமை தமிழ்நாட்டில் வளர்வதற்கு காரணமாக இருக்கும் வை.கோ போன்ற தலைவர்கள் மீது ஜெயலலிதாவுக்கு கோபம் வருவது நியாயம் தானே என்றும் கோட்டை வட்டாரங்கள் வாதிடுகின்றன. எனவே இதில் அரசியல் பின்னணி எதுவும் இல்லை என்கிறது ஆளும்கட்சி வட்டாரம்.

## வை.கோ.வைக் கைது செய்ய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்பு

(8ம் பக்கத் தொடர்ச்சி)

வன்முறையை தூண்டியிருந்தாலோ அல்லது விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்திருந்தாலோ அதற்கு ஆதாரம் இரந்தால் அவர் மீது நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் பேச்சை மட்டும் வைத்துக் கொண்டு நடவடிக்கை எடுப்பது சரியல்ல. இந்த விடயத்தில் மத்திய அரசு தனது நிலையை தெளிவுபடுத்த வேண்டும்.

பொடோ சட்டம் கொண்டு வரும் போதே இத அரசியல் வாதிகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் என்று நாங்கள் கூறினோம். அது இப்போது உண்மையாகி விட்டது. இந்தச் சட்டத்தை தி.மு.க. ம.தி.மு.க. பா.ம.க. உட்பட பல கட்சிகள் ஆதரித்தன. இப்போது அந்தக்கட்சிகள் மீதே இந்தச்சட்டம் பாயத் தொடங்கி விட்டது. இது ஜனநாயகத்திற்கு விரோதமானது.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரிப்பதற்காக பொடோ சட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது குறித்து அமெரிக்காவில் தங்கியுள்ள வை.கோவுடன் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டோ தொலைபேசியில் ஆலோசனை நடத்தினார்.

## ஈழப்பிரச்னை..

(28ம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைகள் மற்றும் அரசியல் பிரிவைச் சேர்ந்த திலீபன், யோகி உட்பட அவரது மெய்ப்பாதுகாவலர்களும் உடன் சென்றார்கள்.

இந்தியா புறப்படுவதற்கு முன்னதாக யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தி அதில் தனது இந்திய விஜயம் தொடர்பாக பிரபாகரன் தகவல்களை வெளி யிட்டார். யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை பிரபாகரன் நடத்தியது அது தான் முதல் தடவையாகும்.

''இந்தியா எம்மை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அங்கீகரித்து பேச்சுக்களுக்கு அழைத்திருக்கின்றது. தமிழ் மக்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய நியாயமான, தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வொன்றை இந்தியா பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையுடன் அங்கு செல்கிறேன்'' என பத்திரிகையாளர்களிடம் பிரபாகரன் தெரிவித்தார்.

இந்தியாவின் கெடுபிடிகள் காரணமாக 1986 இறுதியில் சென்னையிலிருந்த தமது அலுவலகத்தை விட்டு யாழ்ப்பாணம் புறப்பட்டபோது பிரபாகரன் சொன்னது இது தான்: ''இந்தியா எம்மை அங்கீகரித்து உரிய கௌரவத்துடன் அழைத்தால் மட்டுமே இந்திய மண்ணில் இனிக்கால் பதிப்பேன்'' இதற்கமைய இந்தியா உரிய கௌரவத்துடன் நடந்து கொள்ளும் என்ற நம்பிக்கையுடன் பிரபாகரன் புறப்பட்டார்.

ஆனால்...?

(அடுத்த வாரம்)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சச்சிதானந்தன் செல்வதுரை

(டோட்முண்ட் - ஜெர்மனி)
அன்னை மடியில் 16.08.1931
ஆண்டவன் அடியில் 31.05.1998
திதி 17.06.2002

மலேசிய மண்ணில் உதித்த மாணிக்கம், மழலை பேசும் வயதினில் மானிப்பாய் வந்து மனிதருள் மாணிக்கமாய் வளர்ந்தீர்.உயர் கல்வி பயின்று, உன்னத வாழ்வமைத்து இரு கண்மணிகளுடன் இனிது வாழ்ந்தீர். பதினைந்துகால வெளிநாட்டு வாழ்க்கை, பரந்து நீண்டு இன்னும் செல்லும் என நினைத்திருந்தீர். ஆனால் காலனவன் கணக்கு வேறு எழுதி விட்டானே! இன்னும் ஆறு மாதத்தில் கண்மணியின் கல்யாணக்காட்சி காணலாம் எனக் களிப்புடன் இருந்தீர். கண்ணீர் ஆற்றில் யாவும் கரைந்துவிட்டதே. பேத்தி சாலினி, டடா..டடா... என்று கூப்பிடுவது காதில் ஒலிக்கிறதா?

எங்கள் தெய்வமாகிவிட்ட நீங்கள் அன்றும் இன்றும் என்றும் எங்களுடன் தான் இருக்கின்றீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்: அன்பு ம ை ன வி ,
மகன்,மகள்,மருமகன்,மருமகள்,பேரப்பிள்ளைகள்.
தகவல்:மருமகன் சுரேஷ் -தொலைபேசி - 0231/1815983 - ஜெர்மனி.

MARCHE
THURGA
444 Jean Talon Ave West
Montreal, Quebec
(514) 276-9262

இலங்கை, இந்தியா, ஆபிரிக்கா, கரிபியன் மற்றும் கனடிய நாட்டு உணவுப் பொருட்களுக்கும் அதி துரித பணமாற்றுச் சேவைக்கும் வாரத்தில் 7 நாட்களும் சேவை ஆற்றும் ஸ்தாபனம்.
மார்ஷே துர்க்கா
இலவச விநியோகமும் செய்து தரப்படும்.

உங்கள் சகல வைபவங்களுக்கும் சிற்றுண்டி வகைகளையும் உணவு வகைகளையும் பதிவு செய்து பெற்றிட எம்மை அழையுங்கள்
மொமோய் வெதுப்பகம்
BOULANGERIE BAKERY
MOMOI
இலங்கை முறையில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட
• பாண்
• பணிஸ்
• ரொட்டி

எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
6953 Victoria Ave., Montreal, QUE
(514) 736-1925

## IMMIGRATION SERVICES

- அகதிக் கோரிக்கை
- நிரந்தர வதிவிட உரிமை
- குடிவரவு மேன்முறையீடு
- மனிதாபிமான மனு
- தடை உத்தரவுப் பரிசீலனை
- குடும்ப விவகார வழக்குகள்

அமெரிக்க எல்லைகளில், சிறைகளில் உள்ளவர்களை உடனடியாக விடுவித்தல்

குடிவரவு சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களிலும் நாம் உங்களுக்குச் சிறப்பாக உதவ முடியும்

### குடிவரவுச் சேவைகள்

சாம் நாகேந்திரா

(குடிவரவு ஆலோசகர் / மொழிபெயர்ப்பாளர்)

ROBERT I. BLANSHAY
Barrister & Solicitor
49 St. Nicholas Street
*(Yonge/Wellesley)*
TEL: (416) 413-4955
FAX: (416) 413-1649

SAM NAGENDRA
TEL: (905) 405-9615
24 HRS. PAGER: 360-9230
EMAIL: nage@sprint.ca

**LEGAL AID ACCEPTED**



இரசாயன சேர்க்கை கொண்ட செயற்கை சம்பூக்களை பாவித்து மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?

## கவலையைவிடுங்கள்

# Vitaplex Shampoo & Conditioner

(சம்போ அன்ட் கன்டிஷனர்)

உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.

An Innovation from MET Inc.

மலிவான செயற்கைச் சம்பூக்கள் உங்கள் மண்டை ஓட்டின் தோலைக் கடினமாக்குவதுடன் மயிர்த்தோலையும் உரிக்கின்றது. இதனால் சொடுகு, கடி வேறு உருவாகின்றது.

கனடாவில் பல வருட ஆராய்ச்சியின் பலனால் இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட வைற்றபிளக்ஸ் சம்பூ அன்ட் கண்டிஷனர் உங்கள் கட்டுப்பாடற்ற காய்ந்த அல்லது எண்ணைத்தன்மையான மண்டையோட்டை ஒழுங்குபடுத்தி உதிரும் தலைமுடியின் விகிதத்தை நன்றாகக் குறைத்து உங்கள் தலைமயிருக்கு புத்துயிர்அளிக்கின்றது.




குடும்பத்தில் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உபயோகிக்கக்கூடிய தரமான சம்போ அன் கன்டிஷனர்

**Vitaplex Shampoo $9.99**
**Vitaplex Conditioner $9.99**
**Vitaplex Shampoo Plus Conditioner $18.99**
Applicable Taxes Extra

### கிடைக்குமிடங்கள்

ரொரன்ரோ, ஸ்காபரோ, நோர்த்யோர்க், எதோபிக்கோ மிசிசாகா, பிரம்ரன் மொன்றியல், ஒட்டாவா ஆகிய இடங்களில் உள்ள அமோக தமிழ் கடைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

(கனடாவில் தயாரிக்கப்படும் சகல வகையான சம்பூக்களும் கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது)





உங்கள் உடல், உள நலம் பேண

## வைத்திய நிலையம்


### டாக்டர் யசோ தர்மரத்தினம்

குடும்ப வைத்தியர்

*(யாழ். வைத்தியசாலையில் பலவருட அனுபவம் பெற்றவர்)*

**Dr (Mrs) YASHO THARMARATNAM**
(MBBS, MD), (CCFP)

## FAMILY DOCTOR




2466 Eglinton Ave. East, Unit 03
Scarborough, ON M1K 5J8
*(Near Kennedy Subway Station)*

**(416) 266-7786**



## கிடைக்குமிடங்கள்

| | | |
|---|---|---|
| **SCARBOROUGH** | | |
| இரா சுப்பர் மார்க்கட் | (Midland & Eglinton) | 416-269-2622 |
| சங்கர் அன் கோ | (Kennedy & Eglinton) | 416-759-5100 |
| சுரபி | (Birchmount & Eglinton) | 416-285-8518 |
| லூாட்ஸ் சுப்பர் மார்க்கட் | (Markham & Eglinton) | 416-266-5025 |
| லூாட்ஸ் சுப்பர் மார்க்கட் | (New Location) | 416-264-1546 |
| எஸ். பி. இம்போட்டர்ஸ் | (Brimley & Lawrence) | 416-266-3077 |
| நியூ ஸ்பைசி லாண்ட் | (Markham & Sheppard) | 416-292-9769 |
| ஜவ்னா சுப்பர் மார்க்கட் | (Markham & Tuxedo Crt.) | 416-289-8812 |
| யாழ்நகர் ரேடர்ஸ் | (Midland & Ellesmere) | 416-285-0587 |
| யாழ்ரன் மார்க்கட் | (Warden & Finch) | 416-494-9494 |
| டெயிலி நீட்ஸ் | (Pharmacy & Finch) | 416-490-7703 |
| **MARKHAM** | | |
| பிரியாஸ் | (Kennedy & Denison) | 905-944-1229 |
| பிரியாஸ் | (Brimley & Steeles) | 905-415-8501 |
| **BRAMPTON** | | |
| S.T.P. MARKET | (Kennedy / Steeles) | 905-455-3483 |
| **MISSISSAUGA** | | |
| தர்ஷனாஸ் | (Dundas & HWY 10) | 905-270-7576 |
| தர்ஷனாஸ் | (Field Gate & Bloor) | 905-625-8152 |
| **TORONTO** | | |
| துவாரகாஸ் | (Victoria Park & Eglinton) | 416-757-1091 |
| நீகல் குறோசரி | (Victoria Park & St. Clair) | 416-755-6724 |
| றோயல் குறோசரி | (Victoria Park & Danforth) | 416-693-8078 |
| யாழ் சுப்பர் ஸ்ரோஸ் | (Wellesley & Parliament) | 416-923-9806 |
| தனா சுப்பர் மார்க்கட் | (Queen & Jemeson) | 416-534-7770 |
| பாலா பிறதர்ஸ் | (Landsdowne & Bloor) | 416-532-6809 |
| ஏஜிபி | (Landsdowne Subway) | 416-531-3306 |
| **ETOBICOKE** | | |
| சுபினா சுப்பர் மார்க்கட் | (Keele & Sheppard) | 416-638-9554 |
| ஐயம்ஸ் குறோசரி | (Jane & Finch) | 416-636-0884 |
| உதயாஸ் | (Kipling & Steeles) | 416-740-7971 |
| **MONTREAL** | | |
| மார்சே மாருதி | (155 Jean Talon East) | 514-270-9511 |
| மார்சே எமி | (6455 Victoria Ave.) | 514-731-5368 |
| மார்சே துர்க்கா | (Parc Metro) | 514-276-9262 |
| மார்சே அலெக்ஸ்சாண்டியா | (Cote Desneiges) | 514-737-0612 |
| மார்சே மெயில்ஸ் | (Sauve / St. Laurent) | 514-389-5236 |
| மார்சே A.M.R. | (Cote Vertu / Sauve) | 514-334-6737 |



# ஈழப்பிரச்சினையில் இந்தியத் தலையீடு

## இந்திரா முதல் வாஜ்பாய் வரை



## 88

இலங்கை இந்திய உடன்படிக்கை கைச்சாத்திடப்படும்போது ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு எதிரான சக்திகள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என ராஜீவ் காந்தி எதிர்பார்த்தார். இந்தியப் புலனாய்வு நிறுவனங்களின் தகவல்களும் இதனை உறுதிப்படுத்தியிருந்தன. மறுபுறத்தில் இது தொடர்பாக ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் இந்தியாவின் உயர் ஸ்தானிகர் ஜே.என். டிக்ஸிற் ஊடாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குத் தெரியப்படுத்தியிருந்தார். இந்த உடன்படிக்கையைக் காரணமாகக் கொண்டு தனக்கு எதிரான சதிகள் இடம்பெறலாம் எனத் தெரியப்படுத்தியிருந்த ஜெயவர்த்தனா அவ்வாறான சந்தர்ப்பத்தில் தனது பாதுகாப்பை இந்தியா தான் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டிருந்தார். இதனால் பாதுகாப்புப் படைகளைத் தயார் நிலையில் வைத்திருக்கவேண்டிய தேவை இந்தியாவுக்கு இருந்தது. அதனைவிட உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்காக இந்தியப் படையை அனுப்பும் திட்டம் ஒன்றும் மறைமுகமாக உருவாக்கப் பட்டிருந்தது.

### உடனடியாக கொழும்பு விரைய டிக்ஸிற்றுக்கு அவசர உத்தரவு

இந்தப் பின்னணியில் உடன்படிக்கையின் நகல், பின்னிணைப்பு, பரிமாறிக்கொள்ளப் படவுள்ள கடிதங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக பிரதமர் ராஜீவ் காந்தியால் அமைக்கப்பட்ட விசேட குழு ராஜீவ் தலைமையில் டில்லியில் மற்றுமொரு விசேட கூட்டத்தை நடத்தியது. உடன்படிக்கையுடன் தொடர்பான அனைத்து விடயங்களும் இக்கூட்டத்தில் இறுதியாக்கப்பட்டது. உடன்படிக்கை பின்னிணைப்பு, கடிதங்கள் ஆகியன ஆராயப்பட்டு ஏற்றுக்கொள்ளப் பட்டன. ஆக உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கான திகதி, இடம், அதற்கான ஏற்பாடுகள் தொடர்பாகவே அடுத்ததாக ஆராயப்படவேண்டியிருந்தது. இதற்காக விசேட விமானம் ஒன்றில் உடனடியாகவே கொழும்பு செல்லுமாறு கேட்டுக்கொள்ளப் பட்ட டிக்ஸிற்றிடம் முக்கியமாக பணி ஒன்றும் ஒப்படைக்கப்பட்டது. இறுதியாக்கப் பட்டுள்ள உடன்படிக்கை, அதன் பின்னிணைப்பு, பரிமாறிக்கொள்ளப்படும் கடிதங்கள் என்பவற்றில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா திருப்தியடைந்தால் ஜூலை 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதில் கைச்சாத்திடுவதற்காக பிரதமர் காந்தி கொழும்பு வரத் தயாராக இருக்கின்றார் ஆலோசனைகளை தெரிவித்தனர். இதனை ஏற்றுக்கொண்ட ஜெயவர்த்தனா இந்தியா தெரிவித்திருந்த யோசனைக்கமைய ஜூலை 26 ஆம் திகதியே அதில் கைச்சாத்திடுவதற்கும் தனது இணக்கத்தை வெளிப் படுத்தினார். அத்துடன் மறுநாள் அதாவது ஜூலை 23 ஆம் திகதி அமைச்சர்களான காமினி திசநாயக்கா மற்றும் லலித் அத்துலத் முதலி ஆகியோரைச் சந்தித்து இது தொடர் பாகப் பேசுமாறும் டிக்ஸிற்றை ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். இதேவேளையில் ராஜீவ் காந்தியை வரவேற்பதற்கான ஏற்பாடு களைச் செய்வதற்கு போதிய கால அவகாசம் இல்லை என்பதால் அவரது வருகையை மூன்று தினங்களுக்கு ஒத்திவைக்குமாறு ஜனாதிபதி முன் வைத்தயோசனை இந்தியத் தரப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### இறுதி நேரத்தில் ரவி ஜெயவர்த்தன கொண்டு வந்த புதிய திருத்தங்கள்

இரு நாடுகளுக்கும் இடையேயான உடன் படிக்கை பூர்த்தி செய்யப்பட்டு தயார் நிலையில் வந்துள்ள நிலையில் உடன் படிக்கையில் மேலும் சில திருத்தங்களைச் செய்யவேண்டும் என ஜனாதிபதி ஜெயவர்த்தன டிக்ஸிற்றிடம் தெரிவித்தார். ஜெயவர்த்தனாவின் மகன் ரவி ஜெயவர்த்தன கொடுத்த அழுத்தங்களால் தான் இந்தத் திருத்தங்களை ஜனாதிபதி முன் வைத்ததாக டிக்ஸிற் தனது நூலில் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

அதிரடிப்படை அமைக்கப்படுவதற்கு பொறுப்பாக இருந்த ரவி ஜெயவர்த்தன பாதுகாப்புத்துறையில் ஜனாதிபதி ஜெயவர்த் தனாவுக்குப் பெருமளவு அழுத்தத்தைக் கொடுக்கக்கூடிய ஒருவராகத் தான் இருந்தார். உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கான சிங்களம் மட்டும் அமைந்திருக்க வேண்டும் என்ற கோரிக்கையை முதன் முதலாக முன்வைத்தவர் ஜெயவர்த்தனா தான். அதனைத் தொடர்ந்து தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்தை வழங்கக்கூடிய பண்டா - செல்வா உடன்படிக்கைக்கு எதிராக பாதயாத்திரை சென்று அதனைக் கிழித் தெறியச் செய்தவர்களில் ஜெயவர்த்தனாவும் முக்கியமானவர். அந்த வகையில் தமிழுக்கும் சம அந்தஸ்தை வழங்கும் சரத்தை அவரால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை.

இது தொடர்பாக டிக்ஸிற்றிடம் அவர் தெரிவித்த ஆட்சேபனைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இந்த இறுதிக் கட்டத்தில் உடன்படிக்கையின் சரத்துக்கள் அனைத்துக்கும் இரு தரப்பினரதும் அங்கீகாரம் கிடைத்த பின்னர் திருத்திய மைப்பது என்பது தாமதங்களை ஏற்படுத்தும் என்பதுடன் இந்த உடன்படிக்கையைக் கைச்சாத்திடுவது தொடர்பாக ஜெயவர்த்தனா எந்தளவுக்கு ஆர்வமாக உள்ளார் என்பதையிட்டு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குச் சந்தேகங்கள் ஏற்படுவது தவிர்க்க

# சுதுமலையிலிருந்து இந்திய ஹெலியில் புதுடில்லிக்குப் பயணமான பிரபாகரன்



இந்தப் பின்னணியில் டிக்ஸிற் வெளிவிவகாரச் செயலாளர் மேனனுடன் இணைந்து சென்று முப்படைகளின் தளபதிகளையும் சந்தித்துப்படையினரின் தயார் நிலை தொடர்பாக ஆராய்ந்தார்கள். இது தொடர்பாக ஜூலை 20 ஆம் திகதியே அவர்களுக்கு முதல் தடவையாகத் தகவல் கொடுக்கப் பட்டிருந்தது. இதன் படி படைகள் அனைத்தும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பது தொடர்பான தகவல்களை முப்படைத் தளபதிகளும் உறுதிப்படுத்தினார்கள்.

**பண்டிதர் எழுதும் தொடர்**

இந்தியப்படைகள் எவ்வாறான ஒரு நடவடிக்கையை முன்னெடுக்கவேண்டியிருக்கும் என்பது தொடர்பாகவும் இந்தச் சந்திப்பின்போது ஆராயப்பட்டது. இதன் அரசியல் பின்னணி தொடர்பாக டிக்ஸிற் தகவல் தெரிவித்தார். முப்படைத் தளபதிகளும் தெரிவித்த தகவல்கள், அதாவது படையினரின் தயார் நிலை தொடர்பான தகவல்கள் டிக்ஸிற்றுக்குத் திருப்தியளித்தது. அது தொடர்பாக தன்னுடைய அடுத்த சந்திப்பின்போது பிரதமர் ராஜீவ் காந்திக்கும் டிக்ஸிற் தெரிவித்தார்.

என்பதே டிக்ஸிற்றிடம் கொடுத்தனுப் பப்பட்ட செய்தியாகும். இதற்கான ஜெயவர்த்தனாவின் பதில் என்ன என்பதை பெற்று அனுப்புவது தான் அவரது பணி.

பணியைப் பொறுப்பேற்ற டிக்ஸிற் உடனடியாகவே கொழும்பு விரைந்தார். கொழும்பில் இந்திய உயர்ஸ்தானிகராலய செயலாளர் பூரியுடன் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்திப்பதற்கு அவர் விரைந்தார். ஜனாதிபதியுடனான அவரது சந்திப்பு சற்று பதற்றம் நிறைந்ததாக இருந்தது. ஜெயவர்த்தனா திருத்தியமைக்கப்பட்ட உடன்படிக்கையின் விபரங்களை மிகவும் நுணுக்கமான முறையில் ஆராய்ந்தார். இந்த உடன்படிக்கையில் காலந்தாழ்த்தாமல் கைச்சாத்திடுவது தான் நல்லது என ஜெயவர்த்தனாவுக்கு பலரும் அழைப்பு கூட இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள நிலையில் ஜெயவர்த்தன தெரிவித்த குறைபாடுகள் டிக்ஸிற்றுக்குப் பெரும் அதிருப்தியைக் கொடுப்பதாகத் தான் அமைந்திருந்தது.

முக்கியமாக தமிழ் மொழிக்கும் சிங்கள மொழியுடன் இணைந்ததாக சம அந்தஸ்தைக் கொடுப்பது பல குழப்பங்களுக்குக் காரணமாக அமையலாம் என்பது தான் ஜெயவர்த்தனா கிளப்பிய முக்கிய பிரச்னை. இலங்கையில் மொழிப்பிரச்னையைத் தோற்றுவித்தவர்களின் முக்கியமான ஒருவராக உள்ள ஜெயவர்த்தனா இவ்வாறான ஆட்சேபனையைக் கிளப்புவது ஆச்சரியமான தொன்றல்ல. 1944 ஆம் ஆண்டில் சட்ட சபையில் இலங்கையின் ஆட்சி மொழியாக முடியாததாகிவிடும் எனவும் டிக்ஸிற் சுட்டிக் காட்டினார்.

இது தொடர்பாக இருவருக்கும் இடையே இடம் பெற்ற கருத்துப் பரிமாறல்களைத் தொடர்ந்து டிக்ஸிற்றின் கருத்துக்களை ஜெயவர்த்தனா ஏற்றுக்கொண்டார். இறுதியில் உடன்படிக்கை, பின்னிணைப்பு, பரிமாறிக் கொள்ளப்படவுள்ள கடிதங்கள் என்பவற்றின் வரைபுக்கு தன்னுடைய அங்கீகாரத்தை அவர் வழங்கினார். ஜெயவர்த்தனாவின் இணக்கத்தைப் பெற்றுக்கொண்ட நிலையில் டிக்ஸிற் 24 ஆம் திகதி டில்லி புறப்பட்டார்.

டிக்ஸிற் புதுடில்லிக்கு புறப்பட்ட அதே தினத்திலேயே யாழ்ப்பாணத்திலிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் அவரது குழுவினரையும் இந்தியாவுக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டன. விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களுடன் இந்திய உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் நடத்திய பேச்சுக்களின் அடிப்படையில் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. சுதுமலை அம்மன் கோவிலில் முன்றில் ஜூலை 24 ஆம் திகதி காலை வந்திறங்கிய இரண்டு இந்திய விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்திகள் மூலமாகவே விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனும் அவரது குழுவினதும் இந்தியாவுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். இந்திய துாதரக அதிகாரிகளான பூரி மற்றும் கப்டன் குப்தா ஆகிய இருவரும் நேரில் வந்து பிரபாகரனை அவரது அலுவலகத்திலிருந்து அழைத்து வந்து உலங்கு வானூர்தியில் ஏற்றினார்கள். பிரபாகரனுடன் அவரது மனைவி இரண்டு

(27ம் பக்கம் பார்க்க)


# 11வது ஆண்டு நினைவஞ்சலி

அன்பின் பிணைப்பாய் - அருகிருந்து
என்றும் எம் குடும்பம் காத்திருந்தீர்
இன்றெம்மைப் பிரிந்து இறைபாதம் சென்று விட்டீர்

ஆயினும் - நீர் நின்றெங்கள் நெஞ்சில்
நிலைத்து வாழுகின்றீர்
நீண்டு வரும் நினைவுகளோ - எம்
நெஞ்சை விட்டு நீங்காது

என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறை
வனை வேண்டும்

மனைவி, பிள்ளைகள், தாய், சகோதர,
சகோதரிகள், உறவினர்கள்



அமரர் உயர்திரு
ஞானசுந்தரம் சுப்பிரமணியம்

*B.Sc (Agro - Cey, Computer Programming & Systems Analysis -Canada)*

தகவல்: சபா

மலர்வு 12.02.1953

உதிர்வு 09.07.1991

## இடைக்கால நிர்வாகத்தை நியமிக்க மாட்டேன் என்கிறார் சந்திரிகா

வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாகசபை ஒன்றை தமிழீழ விடுதலைப்புலிகள் பொறுப்பின் கீழ் தான் ஒருபோதும் நியமிக்க மாட்டேன் என்று ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூளுரைத்துள்ளார்.

அண்மையில் தன்னைச் சந்தித்த மூவரடங்கிய சர்வதேச மன்னிப்புச்சபையின் தூதுக்குழுவுடன் உரையாடுகையிலேயே சந்திரிகா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சட்டநிபுணர்கள் கொண்ட குழு ஒன்றின் மூலம் நுணுக்கமான சட்டப் பிரச்சனையைத்தான் மேற்கொண்டதாகவும் அதன்படி ஜனாதிபதியான தனக்கும் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநருக்கும் மாத்திரமே வட கிழக்கு மாகாணங்களுக்கு ஓர் இடைக்கால நிர்வாக சபையை நியமிக்கும் அதிகாரம் உள்ளது என்று நிருபணம் ஆகியுள்ளது என்று சந்திரிகா தெரிவித்துள்ளார்.

புலிகள் தலைமையிலான இடைக்கால நிர்வாக சபையைத்தான் எக்காரணம் கொண்டும் நியமிக்க மாட்டேன் என்று சந்திரிகா கூறினார்.

தப்பித்தவறி வடகிழக்கு ஆளும் அத்தகைய இடைக்கால நிர்வாகசபை ஒன்றை விடுதலைப்புலிகள் பொறுப்பில் நியமித்தால் அந்த நிர்வாகசபையைக் கலைத்து ஆளுனரையும் பதவி நீக்கம் செய்து புதிய ஆளுநரை நியமிக்கத் தனக்கு அதிகாரம் உண்டு என்றும் சந்திரிகா மன்னிப்புச்சபை பிரதிநிதிகளிடம் கூறினார்.

புலிகளுக்கு இடைக்கால நிர்வாக சபையை வழங்க ரணில்விக்கிரமசிங்க முற்படுகின்ற போதிலும் தான் ஒருபோதும் இணங்க மாட்டேன் என்றும் தன் அதிகாரங்களைப் பயன்படுத்தி எத்தகைய நடவடிக்கையும் எடுக்கத் தயார் என்றும் சந்திரிகா மன்னிப்புச்சபையிடம் கூறினார். அத்துடன் வன்னிக்குச் சென்று விடுதலைப்புலிகளின் தனித்துவமாகச் சந்தித்ததன்மூலம் மன்னிப்புச்சபை பெரும் தவறு இழைத்துவிட்டது என்றும் அந்த நடவடிக்கை மூலம் இலங்கைத்தீவில் இரண்டு நாடுகளும் இரண்டு அரசாங்கமும் இருப்பது நிருபணம் ஆகிவிட்டது என்றும் வன்னி சென்று திரும்பிய மன்னிப்புச்சபையை சந்திரிகா கடிந்து கொண்டார்.

## ஹக்கீமுடன் சந்திப்பை ரத்துச் செய்த கரிகாலன்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கியதேசியக்கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் தலைமையிலான தூதுக்குழு ஒன்றை மட்டக்களப்பு நகரில் வைத்துச் சந்தித்தார். கடந்த வியாழக்கிழமை ஜூலை 4ம்திகதியன்று அமைச்சர் ஹக்கீம் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடன் நடத்திய தொலைபேசி உரையாடலையடுத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை 7ம்திகதியன்று கொக்கட்டிச்சோலையில் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அண்மையில் கிழக்கில் மூதூர் வாழைச்சேனை பகுதிகளில் நடைபெற்ற தமிழ் முஸ்லிம் வன்முறைகள் பற்றி ஆராய்ந்து எதிர்கால நடவடிக்கை வகுககவே இச்சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இச்சந்திப்பின் விடுதலைப்புலிகள் தரப்பில் தளபதி கருணா, கரிகாலன் கலந்து கொள்வதாக இருந்தது. ஆனால் திடீரென்று இச்சந்திப்பை ரத்துச் செய்த அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் [illegible] ஐ.தே.கட்சி அமைச்சர்கள் கொண்ட [illegible] குழுவுடன் சந்திப்பு ஒன்றை நடத்தினார். இச்சந்திப்பில் சிரேஷ்ட முஸ்லிம் அமைச்சரான எம்.எச்மொகமட், அமைச்சர் அப்துல் காதர் ஆகியோருடன் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முன்னாள் ஐ.தே.க எம்.பி. அலிசாஹிர் மௌலானா, அப்துல்மஜீத், முஸ்தபா ஆகியோர் கலந்து கொண்டனர். கிழக்கில தமிழ்முஸ்லிம் உறவுகளை பலப்படுத்துவது குறித்து இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இதேவேளை அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி. அஸ்வர் இஸ்மாயில் தலைமையிலான குழுவுக்கும் அம்பாறை - மட்டக்களப்பு அரசியல் பொறுப்பாளர் விசு தலைமையிலான குழுவுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நடைபெற்றது. அமைச்சர் ஹக்கீமுடன் நடைபெற இருந்த சந்திப்பை ரத்துச் செய்து ஐ.தே.க. அமைச்சர் மொகமட் தலைமையிலான குழுவுடன் கரிகாலன் நடத்திய சந்திப்பு அரசியல் [illegible]

முஸ்லிம் தரப்பின் ஏக பிரதிநியாக ஹக்கீமைக் கருதி இணக்கம் ஒன்றைச் செய்தாலும் கிழக்கில் உள்ள பல்வேறு முஸ்லிம் சக்திகளைப் பிரதிநிதித்துவப்படுத்தவோ அல்லது கட்டுப்படுத்தவோ கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த ஹக்கீமினால் முடியவில்லை என்று விடுதலைப்புலிகள் கருதுகின்றனர் என்பதைத் தான் வேறு முஸ்லிம் தலைமைகளையும் அங்கீகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த வன்முறைகள் பற்றி ஹக்கீம் விடுதலைப்புலிகள் மீது சுமத்திய குற்றச்சாட்டுக்கள் சுசப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது என்று அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

### தொண்டமான் அட்டகாசம்

இதையடுத்து உள்நுறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவை பொரளை பொலிஸ் நிலையத்துக்கு பிரதய அனுப்பி வைத்தார். அவர் [illegible]

## சந்திரிகாவை பதவி இறக்க...

(32ம் பக்கத் தொடர்ச்சி) பிரதமர் ரணில் இந்த நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். இதேவேளை கடந்த வியாழ மாற்றம் சந்திரிகாவின் சாதகத்திற்கு நல்ல நிலையில் உள்ளதால் அவரை ரணில் அசைக்க முடியாது என்று ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

### பலத்த சர்ச்சைக்கு.....

(32ம் பக்கத் தொடர்ச்சி) இதேவேளை பிரதி பொலிஸ்மாஅதிபர் லியனகே சம்பந்தப்பட்ட வாகனத்தை சாரதி தனியாக ஓட்டிச் சென்றதாகவும் ஜயக்கொடி அந்த இடத்திலேயே இருக்கவில்லை என்றும் அப்பட்டமான பொய்த் தகவலைப் பத்திரிகைகளுக்குத் தெரிவித்தார். ஆனால் மரணவிசாரணையில் ஜயக்கொடி தான் வாகனத்தின் பின் இருக்கையில் தனியாக இருந்ததாகத் தெரிவித்தார். சண்டே லீடர் பத்திரிகை இவ [illegible]




-- சோதிடர் தர்மர்

## மேடம்

வீண் அலைச்சல் ,துக்கம் என்பன இருக்கும்.திருடரால் நெருப்பால் துன்பம் விளையும். விபத்துக்கள் ஏற்பட இடமுண்டு. புதிய தொழில் வாய்ப்பு சிலருக்கு கிட்டும். நண்பர் உறவினரால் நன்மைகள் விளையும். கெட்ட பெயர் கேட்கவேண்டும். சனி, ஞாயிறு நல்ல நாட்கள்.

## இடபம்

மனைவி, மக்கள் மகிழ்ச்சியாக இருப்பர். புதிய தொழில் செய்ய லாம். சுகபோகங்கள் கிட்டும். புதுமனை வாங்கும் முயற்சி பலிதமாகும். பந்தயம், லாட்டரி போன்றவற்றில் சிலருக்கு வெற்றி கிட்டும். எதிலும் வெற்றி கிட்டும். தொழிலில் லாபம் அதிகமாகும். திங்கள், செவ்வாய் நல்ல நாட்கள்.

## மிதுனம்

தொழிலில் நற்பலன் கிட்டும். மனைவி மக்களாலும் நன்மைகள் கிட்டும். அதிகாரிகள் ஆதரவு தருவர். தனலாபம் கிட்டும். கௌரவம் , பெருமை உயரும். ஏமாற்றத்துக்கும் ஆளாக நேரிட லாம். உறவினர் ஆதரவு இருந்து வரும்.எதிர்பாராத வெற்றி கிட்டும். எதிரிகளை வெல்லக் கூடியதாக இருக்கும். வியாழன் நல்ல நாள்.

## கடகம்

பிள்ளைகள் சம்பந்தமான மனத் துன்பங்கள் ஏற்படலாம். தாய்க்கு தாய்வழியினர்க்கு துன்பங்கள் விளையலாம். நண்பர்கள் உதவி அதிகமாகும். நினைத்ததைச் செய்து முடிக்கக்கூடியதாக இருக்கும். தொழிலில் உயர்வு கிட்டும். வெளியூர் பயணம் நன்மை தரும். வியாழன் நல்ல நாள்.

## சிம்மம்

சண்டை சச்சரவுகள் வந்துசேரும். உடல் நிலை பாதிப் புக்குள் ளாகலாம். தீய எண்ணம் ஏற்பட்டு அவமானப்பட நேரிடலாம். எதிலும் எச்சரிக்கை அவசிய மாகும். கணவன்,மனைவி உறவு வலுவாகும். பொருள் நட்டம், திருடர் பயம் என்பவற்றுக்கு இடமுண்டு. வீண் பயத்தை தவிர்க்கவும். வெள்ளி, சனி நல்ல நாட்கள்.

## கன்னி

செய்காரியங்களில் இடையூறு தோன்றும் வீண் அலைச்சல் உண்டாகும். உறவினர் உதவி இருக்கும். தொழில் விடயங்களிலும் அவதானம் தேவை. அவசியமான வர்களைப் பகைத்துக் கொள்ளாதிருக்கவும். எச்சரிக்கையுடன் நடந்தால் எதிலும் வெற்றியுண்டு. நெஞ்சு சம்பந்தமான நோய்கள் வரலாம். வேலைக்கேற்ற பலன் கிட்டாது. சனி, ஞாயிறு நல்ல நாட்கள்

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் சூரியன் சந்திரன் | சந்திரன் | வியாழன் சனி | ராகு |
| புதன் சந்திரன் | இவ்வார கிரகநிலை | | |
| | | | |
| கேது | செவ்வாய் | | |

## துலாம்

உடல் நலக்குறை தீரும். பிரயாணங்கள் நன்மை தரும். தொழிலில் முன்னேற்றத்துக்கு இடமுண்டு. அரச வழியில் தொல்லைகள் ஏற்படும். முன்கோபத்தைத் தவிர்ப்பது அவசியமாகும். உறவினர்களைப் பகைத்துக் கொள்ள வேண்டிவரலாம். இடமாற்றமும் சிலருக்கு ஏற்படும்.தீயபழக்கங்களால் தொல்லை வரலாம். வியாழன் நல்ல நாள்.

## விருச்சிகம்

செய்தொழிலில் லாபம் அதிகமாகும். மேலதிகாரிகள் ஆதரவு இருந்து வரும். பணச் செலவு அதிகமாகும். தாய் வழியில் நன்மைகள் கிட்டும். நண்பர்களால் மக்களால் நன்மைகள் கிடைக்கும். செய்காரியங்களில் வெற்றியும் புகழும் கிடைக்கும். எதிர்ப்புக்கள் நீங்கும். வியாழன் நல்ல நாள்.

## தனுசு

உடல் நலத்தைப் பேணுவது அவசியம். மனைவியுடன் பிணக்கு ,பிரிவு ஏற்படக்கூடும். அவமானம் தரத்தக்க விடயங்களை தவிர்க்கவும். குடும்பத்தில் நிம்மதி ஏற்படும். தொழில் விடயங்களில் அவதானம் தேவை. புதிய வீடு செல்லும் வாய்ப்பு சிலருக்கு கிட்டும். நண்பர் உதவி இருக்கும். வெள்ளி, சனி நல்ல நாட்கள்.

## மகரம்

வியாபாரத்தில் முன்னேற்றம் கிட்டும். அந்தஸ்து உயரும். எதிரிகளை வெல்லக்கூடியதாக இருக்கும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிகழும். பெரியோர் உறவு நன்மை தரும். கணவன்,மனைவி உறவு சுமுகமாகும். செல்வம் சேரும். தீய எண்ணங்களைத் தவிர்க்கவும்.
சனி, ஞாயிறு நல்ல நாட்கள்.

## கும்பம்

மன, உடல் ஆரோக்கியம் ஏற்படும். அதிகாரப் பதவிகள் வாய்க்கும். பெரியோர் சந்திப்பும் அதன் மூலம் நன்மைகளும் கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டாகும். கணவன், மனைவி உறவு சந்தோஷமாக அமையும். பிரயாணத்தின் போது அவதானம் தேவை. வியாழன் நல்ல நாள்.

## மீனம்

பதவி உயர்வு போன்ற நன்மைகள் சிலருக்கு வாய்க்கும். பெரியோர் ஆதரவு நன்மை தரும். குடும்பத்தில் நல்லகாரியம் நடைபெறும். செய்காரியங்களில் வெற்றி கிட்டும். எதிரிகளால் அவமானம் அடைய நேரிடலாம். கடன் விடயங்களை அவதானமாக கையாளவும். உடல் நலக்குறை ஏற்படவும் இடமுண்டு. வியாழன் நல்ல நாள்.

உங்கள்
குழந்தைகளின்
ஜாதகக்
குறிப்புக்களை
சரியாகக்
கணிக்க

தொடர்பு
கொள்ளுங்கள்

சோதிடர்
தர்மர்

11 Av de la
Commune de
paris.
95140 Garges
les Gonesse,
France.
Tel:
01 39869208

TORONTO
TRUCK &
FORKLIFT
SCHOOL

இப்பொழுது உங்களது ட்ரக் லைசன்சுக்குரிய பயிற்சியையும் வகுப்புக்களையும் தமிழ்மொழி மூலம் பெற்றுக் கொள்ளலாம். ஆங்கிலமொழி அறிவு அவசியமில்லை. தமிழ்மொழி மூலமான பயிற்சியும் அறிவுறுத்தலும் உங்களுக்கு இப்போது நேரடியாகவே கிடைக்கின்றது. ஒன்ராறியோவிலேயே மிகப் பெரியதும் திறமைமிக்கதுமான எமது நிறுவனத்தின் மூலம் உங்கள் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வசதிக்காகப் பல பயிற்சி நிலையங்கள் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

15% OFF




REXDALE .......... (416) 675-7500
SCARBOROUGH .......... (416) 213-2222
BRAMPTON .......... (905) 457-7565
HAMILTON .......... (905) 662-9300
MISSISSAUGA .......... (905) 270-1999
TORONTO .......... (416) 675-4444

ஈழநாடு
EEZHANADU
P.O.BOX 878 STATION 'Q'
TORONTO - ONTARIO
CANADA -M4T 2N7
TEL: (905) 653- 3000
(416) 266 - 9919
(416) 528 - 1867
FAX: (905) 653 - 4031

N.K.S. DRAPERY & BLINDS
CUSTOM MADE
- VERTICAL BLINDS
- VENETIAN BLINDS
- DRAPERIES
- CURTAINS
- SHUTTERS

For FREE Estimates & Installation Call:
KETHA
(CCTCC's Award Winner – 2001)
210 SILVER STAR BLVD # 825
SCARBOROUGH - ONT
M1V 5J9
(905) 944-0218
(416) 321-6420

# பலத்த சர்ச்சையின் மத்தியில் விமானப்படைத்தளபதி கட்டாய ஓய்வு

தமிழ்ப்பகுதிகள் மீது மிருகத்தனமான முறையில் குண்டுவீச்சுக்களை கட்டவிழ்ந்து வந்த விமானப்படையின் தளபதியாக கடந்த நான்கு ஆண்டுகள் பதவி வகித்து வந்த ஏயர் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி சர்ச்சையின் மத்தியில் கட்டாய ஓய்வு பெற்றுள்ளார்.

அவரது இடத்திற்கு டொனல்ட் பெரேரா விமானப்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். சந்திரிகாவின் அடிவருடிய மாமன் ரத்வத்தைக்கு மிக நெருக்கமானவராக இருந்து வந்த ஜயலத் வீரக்கொடி இரு வாரங்களுக்கு முன் விமானப்படைத் தலைமையகத்தில் நடந்த கேளிக்கை விருந்தில் கலந்து கொண்டார்.

இதன்பின் தடுமாறும் போதையில் தனது சாரதி மற்றும் மெய்காவலர்களை ஒதுக்கி விட்டுத் தானே வாகனத்தை ஓட்டிச் சென்றார். அழகான இளம்பெண் விமானப்படை அதிகாரி ஒருத்தியை கூட்டிக் கொண்டே ஜயக்கொடி சென்றார். மேற்படி பெண் அதிகாரியுடன் பாலியல் உறவு கொள்ளும் நோக்குடனேயே இவர் தனியாக ஓர் விடுதியை நோக்கிச் சென்றிருந்தார்.

இவ்வாறு அவர் பல தடவைகள் முன்னரும் சென்றுள்ளார். ஜயக்கொடி ஓட்டிச் சென்ற வாகனம் ஹோட்டன்பிளேஸ் சந்தியில் லொறி ஒன்றுடன் மோதியதில் லொறியின் சாரதி மரணமடைந்தார். சிகப்பு விளக்கை மீறி வாகனத்தை மதுபோதையில் செலுத்திய ஜயக்கொடியே விபத்துக்குக் காரணம். ஆனால் அவர் தனது பதவியின் அதிகாரத்தைப் பயனபடுத்தி கொழும்பு மாவட்ட பொலிஸ் டி.ஐ.ஜி போதி லியனகேயுடன் தொடர்பு கொண்டு ஸ்தலத்திற்கு வந்த பொலிசார் மீது அழுத்தம் பிரயோகித்தார். சட்டமுறைமைகளுக்கு மாறாக விபத்து நடந்த இடத்தில் இருந்து வாகனத்தை எடுத்துக் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டார். பிரதிப் பொலிஸ் மாஅதிபர் லியனகே ஒரு தொலைபேசி அழைப்பு மூலம் விமானத்தளபதி இவ்வாறு தப்பிச் சென்றார்.மேலும் மது போதைக்கான பரிசோதனையும் இவருக்குச் செய்யவில்லை. பின்னர் அவரது சாரதியை பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பிய ஜயக்கொடி பொய்த்தகவல் ஒன்றையும் பதிவு செய்வித்தார். இதன்படி சம்பந்தப்பட்ட வாகனத்தைத் தானே ஓட்டிச் சென்றதாகவும் விமானப்படைத்தளபதி பின்னிருக்கையில் இருந்ததாகவும் உபாலி என்ற அந்த சாரதி தெரிவிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். இதேவேளை பிரதிப் பொலிஸ் அதிபர் லியனகே (30ம் பக்கம்)

# சந்திரிகாவைப் பதவி இறக்கப் பாராளுமன்றத்தில் குற்றவழுப் பிரேரணை

ஸ்ரீலங்கா பேரினவாத ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலக்குவதற்கு "இம்பீச்மன்ட்" எனப்படும் குற்ற வழுப் பிரேரனை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யபடவுள்ளது.

ரணில்விக்கிரமசிங்கா தலைமையில் சிரேஷ்ட ஐக்கிய தேசியக்கட்சி அமைச்சர்களும் கட்சி முக்கியஸ்தர்களும் கலந்து கொண்ட கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

பல அமைச்சர்கள் இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தி வந்த போதிலும் சந்திரிகாவுடன் ஒற்றுமையாக செயற்படுவதை விரும்பிய ரணில் தயக்கம் காட்டி வந்துள்ளார்.

ஆனால் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற நிலைக்கு ரணில் தள்ளப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்களில் பாதிக்கு மேல் உள்ள எண்ணிக்கையின் எம்.பி.க்கள் கைச்சாத்திட்டு குற்றவழுப் பிரேரணையை சமர்ப்பிக்கலாம். மூன்றில் இரண்டு வாக்குகள் இருந்தால் மாத்திரமே அது நிறைவேற்றப்படலாம். ஆனால் இத்தகைய பிரேரனை சமர்ப்பிக்கப்பட்டபின் ஜனாதிபதியால் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது. சந்திரிகா தொடர்பாக இரண்டு பிரதான ஊழல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தே குற்றவழுப் பிரேரனை சமர்ப்பிக்கப்படவுள்ளது. ஜனாதிபதி செயலகத்திற்கு 230 கோடி ரூபா செலவில் 58 சொகுசு வண்டிகளை இறக்குமதி செய்து அவற்றுள் 39 வண்டிகளைத் தனியார் துறைக்கு விற்பனை செய்து லாபம் சம்பாதித்தது முதலாவது குற்றச்சாட்டு.

ஜனாதிபதியின் நேரடிப் பரிபாலனத்தின் கீழ் இருந்த றப்பர் உற்பத்தி ஏற்றுமதி நிறுவனத்தின் கீழ் காசோலைகளை உரிய முறையின் கீழ் வழங்காமல் மோசடி செய்து 105 கோடியே 82 லட்சத்து 91 ஆயிரத்து 969 ரூபாய்க்களைக் கையாடியது இரண்டாவது குற்றச்சாட்டாகும்.

பிரபல கணக்கியல் நிறுவனமான ஏனர்ஸ் அன்ட் வினி என்ற நிறுவனத்தின் கணக்காளர் குழு ஒன்று விசாரணை செய்து குமாரதுங்கவை குற்றவாளி என்று அறிக்கை (30ம் பக்கம் பார்க்க)

# சந்திரிகாவின் ஆலோசகராக தம்பி அனுரா பண்டாரநாயக்கா

ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் இனஒருமைப்பாடு தொடர்பான விசேட ஆலோசகராக அவரது தம்பியார் அனுரா பண்டாரநாயக்கா சந்திரிகாவினால் நியமிக்கப்பட்டுள்ளார். கொழுத்த சம்பளமும் சலுகைகளும் கொண்ட இப்பதவியை ஏற்றுக் கொள்வதற்காக அனுரா பண்டாரநாயக்கா தனது ஹம்பகா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்யவுள்ளார்.

இதேவேளை அனுராவை நியமிப்பதற்கு மந்திரிசபை அங்கீகாரம் வழங்காமல்அரசியல் சட்டச்சிக்கல் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று ஐ.தே.கட்சி அமைச்சர்கள் மத்தியில் எதிர்ப்புக்களும் தோன்றியுள்ளது.

இதேவேளை சமாதானத்தீர்வு ஏறபடுவதை எதிர்த்து ஜே.வி.பி. கட்சியுடன் இணைந்து பொதுக்கூட்டத்தில் உரையாற்றி வருகின்ற அனுரா பண்டாரநாயக்கா இன ஒருமைப்பாட்டு ஆலோசகராக நியமிக்கப்படுவது பொருத்தமற்ற செயல் என பத்திரிகைகள் கூறுகின்றன.

# பொரளைப் பொலிஸில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அட்டகாசம்

இ.தொ.கட்சியின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டைமான் பொரளைப் பொலிஸ் நிலையத்தில் அட்டகாசம் செய்த சம்பவம் ஒன்று அம்பலமாகியுள்ளது.

தொண்டைமானின் உத்தியோகபூர்வ வாகனத்தைத் தனியாக ஓட்டி வந்த சாரதி பொரளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வாகனத்துடன் மோதியுள்ளார்.

இதில் தவறு பொலிஸ் அதிகாரியின் சாரதியினுடையதே என்றாலும் தொண்டமானின் சாரதியின் சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டுக் கைது செய்யப்பட்டார்.

இதையறிந்த அமைச்சர் தொண்டமான் வேறு வாகனத்தில் பொரளை பொலிஸ் நிலையம் சென்று தன் சாரதியைப் பிரச்சனையின்றி விடுவிக்க வேண்டுமென்று அட்டகாசமாக ஆர்ப்பாட்டம் செய்துள்ளார்.

ஒரு விருந்தில் இருந்து திரும்பிய அமைச்சர் தொண்டைமான் அப்போது மதுபோதையில் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. பின்னர் பிரதமர் ரணிலுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட அமைச்சர் ஆறுமுகம் தன் சாரதிக்கு நீதி கிடைக்காவிட்டால் தன் பதவியை ராஜினாமாச் செய்யப் போவதாக மிரட்டினார். இதையடுத்து பொலிசாருக்குப் (30ம் பக்கம் பார்க்க)

# பிரதம நீதியரசரைப் பதவி நீக்க முயற்சி

ஜனாதிபதி சந்திரிகாவை குற்றவழுப் பிரேரணை மூலம் பதவி நீக்கம் செய்யும் முயற்சி வெற்றியளிக்க வேண்டுமாயின் அவரது ஆதரவாளரும் கைப்பாவை என்று கருதப்படுபவருமான பிரதம நீதியரசர் சரத்சில்வா பதவி நீக்கம் செய்யப்பட வேண்டுமென்று ரணில்விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதனால் பல்வேறு ஒழுக்கக்கேடுகள். அதிகார துஷ்பிரயோகச் சம்பவங்கள். ஆகியவற்றைக் காரணம் காட்டும் குற்றவழுப் பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றும் முயற்சி முடுக்கி விடப்பட்டுள்ளது. ஏற்கனவே சென்ற ஆண்டு வரையப்பட்ட இப்பிரேரணையை மீண்டும் புதுப்பித்துப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இதற்கு முன்னோடியாக அரசியல் சட்டத்தில் 18ம் திருத்தப் பிரேரணை நிறைவேற்றப்படவுள்ளது.

இதன் பின் எதிர் கட்சியில் உள்ளவர்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து "மனச்சாட்சி"படி வாக்களித்தாலும் பதவிகளை இழக்க மாட்டார்கள். குற்றவழுப் பிரேரணை வெற்றி பெற வேண்டுமாயின் மூன்றில் இரண்டு வாக்குகள் தேவை என்பதால் எதிர்கட்சி ஆதரவு முககியமாகும்.

நீங்கள் வாகன விபத்தில் உங்கள் தவறால் அல்லது மற்றவர் தவறால் பாதிக்கப்பட்டீர்களா?

SIDNEY FINANCIAL AND ACCIDENT BENEFIT SERVICES
SIDNEY K. SITHIRAVADIVEL B.A. (Hons)
(416) 745-2794 (416) 745-0010
FAX: (416) 745-9228
2885 JANE STREET, UNIT # 2, NORTH YORK

அப்படியாயின் அவ் விபத்தால் உங்களுக்குக் கிடைக்கக் கூடிய இழப்பீடுகளான
- நிகழ்கால / எதிர்காலச் சம்பள இழப்பீடுகள்
- உங்கள் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான கொடுப்பனவுகள்
- வீட்டைப் பராமரிப்பதற்கான கொடுப்பனவுகள்
- வணிக இழப்பீடுகள்
- கல்வி இழப்பீடுகள்
- மறுதொழில் பயிற்சித்தல்
- சிறப்பு மருத்துவ வசதிகள்

மற்றும் விபத்துப் பற்றிய சட்ட உரிமைகளையும் ஆலோசனைகளையும் தமிழில் பெற்றுக் கொள்வதற்கு நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்

இவற்றுடன் உங்கள்
- INCOME TAX
- BUSINESS ACCOUNTING
- BUSINESS G.S.T, P.S.T.
- PAYROLL
- PERSONAL LOAN & BUSINESS LOAN
- BANKRUPTCY
- PARALEGAL SERVICES (Immigration)

- வருமான வரி
- வியாபாரக் கணக்குகள்
- சம்பளக் கணிப்பீடு
- தனியார், வர்த்தகக் கடன்கள்
- வங்குரோத்து நிலையடைதல்
- குடிவரவு, குடியகல்வு ஆலோசனைகள்